(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

# PRACTICAL LIFE

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

. எ. வைத்யராமன், பி.எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.,
EDITOR.

புதகம் 5. Vol. 5. பரீதாபிஸூ மாசிமீ —FEBRUARY 1913. ஸஞ்சிகை 2. No. 2.

பொருளடக்கம்.

சேஷ வ்யாஸங்கள்.— பக்கம்.
த்வாரமும் ஸூக்ஷ்மத்வாரமும்.
—எஸ். கணபதி ஸுப்ரமண்யம் ... 58
ப்பு, பித்தளை வேலைகள். ... 61
மண்.
—எம். வைத்யநாதன். ... 64
இன்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ் தீர்மானங்கள் ... 67
வ்யாபார வ்ருத்தி ... 70
தையும் ஜீவ்ய சரித்திரமும்.—
ராணி துர்க்காவதி ... 71
சேஷத்திரட்டு.—
ரேயில் கற்றாழை விருத்திசெய்தலும், அதன் உபயோகமும் ... 76
கீழ்ஜாதிக்கு ஐக்கிய சங்கங்கள். ... 78
விதை நெல் ... 81
பத்ரிகை ஆராய்ச்சி.
ஹரி க்ருஷ்ணலால் சொன்ன யோசனைகள் 82
திருவாதி பரிஷத்து ... 82
இஞ்சி செய்தல் ... 84
உபாத்யாயரின் குணங்கள் ... 85
அழகும் விவாகமும் ... 85
பையன்கள் பகுதி ... 85
ஸ்த்ரீகள் பகுதி ... 87
பகுதிக்குறிப்புகள்
விவஸாயம்—வ்யாபாரம்--கைத்தொழில்--பொருளாதாரம் — கோவாபரேஷன்—இன்ஷ்யூரென்ஸ்—வித்யாவிஷயம்—விலையுள்ளபொருள்கள்—வ்யாபார முறைகள் சாஸ்த்ரமும், யந்த்ரங்களும் நூதன கற்பிதமும்—சட்டம்--வைத்யம்—வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்—விநோதங்கள்--யுக்திகளும் முறைகளும்—தமிழ்க்கல்வி—நானாசங்கதி ...89—106
வர்த்தமானம் ... 107
காலஸ்திதி . 111
பஞ்சாங்கம் ... 112

CONTENTS.

**Special Articles—** PAGE.
PoROSITY AND CAPILLARITY
—S. Ganapati Subramanyam, M.A., L.T., ... 58
BRASS AND COPPER INDUSTRY IN MADRAS ... 61
THE SOIL
—M. Vaidyanathan ... 64
INDUSTRIAL CONFERENCE RESOLUTIONS ... 67
IMPROVING BUSINESS ... 70
**Story and Biography—**
RANI DURGAVATI
—C. S. Ranaswami Aiyar ... 71
**Selections—**
Cultivation and Uses of Aloes ... 76
Co-operative Societies for Depressed Classes ... 78
Seed Paddy ... 81
**Review of the Press—**
Harikishen Lal's Suggestions ... 82
Trivadi Parishad ... 82
Drying Ginger ... 84
Qualifications of a Teacher ... 85
Beauty and Marriage ... 85
**Boys' Section** ... 85
**Ladies' Section** ... 87
**Departmental Notes.—**
Agriculture ... ... ... ... 89
Commerce ... ... ... ... 91
Industry ... ... ... ... 92
Economics ... ... ... ... 93
Co-operation ... ... ... 94
Insurance ... ... ... ... 95
Education ... ... ... ... 96
Economic Products ... ... ... 97
Business Methods ... ... ... 98
Science, Machinery, and Invention ... 99
Law ... ... ... ... 100
Medicine ... ... ... ... 101
Fun and Anecdote ... ... ... 102
Curiosities ... ... ... ... 103
Hints and Recipes ... ... ... 104
Tamil Literature ... ... ... 105
Miscellaneous News ... ... ... 106
**Diary of the Month** ... ... ... 107
**Season** ... ... ... ... 111
**Calendar** ... ... ... ... 112

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.

# ஒவ்வொரு இந்தியரும்

தம் தேசத்தவர்களில் ஆயிரக் கணக்கானவர்களுக்குத் தொழில் கொடுப்பனவும் தம் தேசத்தின் க்ஷேமாபி வ்ருத்திக்கு ஸாதகமா யிருப்பனவுமான கைத்தொழில்களை ஆதரிக்கவேண்டியது கடமையாகும். அடுத்த தடவை எப்போதாவது உடுப்புகள் தைக்க நீங்கள் ஆர்டர் கொடுத்தால்

## லாலிம்லி

**கலப்பில்லாத கம்பளித்துணி**

இந்தியாவிலேயே, இந்தியர்களுடைய உபயோகத்துக்காக செய்யப்படுகிற தென்பதையும், லாலிம்லி உடுப்புகளை உடுத்திக்கொள்வதால் உங்கள் தேசத்தவர்களுக்குச் செய்யவேண்டிய கடைமையைச் செய்கிறீர்கள் என்பதையும் தேசத்தின் க்ஷேமாபி வ்ருத்திக்கு காரணமா யிருக்கிறீர்கள் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

லாலிம்லி ஸூட் தைக்கும் துணிகள், சட்டைத்துணிகள், ட்வீட்கள், கம்பளிகள், உள் சட்டை முதலியவைகளுக்குத் துணிகளின் மாதிரியும், விலையும் எழுதிக் கேளுங்கள். இனமாய் அனுப்பப்படும்.

கான்பூர் உல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட், கான்பூர்.

**CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.**

**Cawnpore.**

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

## PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர் — G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. — பரீதாபி ௵ மாசி ௴, FEBRUARY 1913. — ஸஞ்சிகை 2. No. 2.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. | A. | P. | | *Foreign.* Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy ... | 0 | 2 | 0 | ... ... | 0 | 3 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 &4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக, பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும், 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்நிய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்ரதி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 2 | 0 | ... | 0 | 3 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 | 4 | 0 |

வ்யாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை விருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன்
மதராஸ்.

# SPECIAL ARTICLES.
## விசேஷ வ்யாஸங்கள்.

### POROSITY AND CAPILLARITY,

BY
S. GANAPATI SUBRAMANYAM, M.A., L.T.,
*Sub-Assistant Inspector of Schools, Mannargudi.*

#### த்வாரமும் ஸூக்ஷமத்வாரமும்.

ஒரு பாத்ரத்தில் கொஞ்சம் ஜலம் வார்த்து அதில் ஒரு செட்டியைப் போட்டு, கொஞ்ச நேரமான பிறகு செட்டியை எடுத்து விட்டுப் பாத்ரத்தைப் பாருங்கள். பாத்ரத்தில் நீர் அநேகமாய் சுண்டியிருக்கும். பாத்ரத்து நீர் எங்கே போயிற்று? நீர் செட்டிக்குள் புகுந்திருக்கவேண்டுமல்லவா? அதே மாதிரியாக ஒரு பாத்ரத்தில் கொஞ்சம் ஜலம் எடுத்துக் கொண்டு கொஞ்சநேரம் அதில் ஒரு இரும்பு ஆணியைப்போட்டு, பிற்பாடு அதை வெளியே எடுத்து பாத்ரத்தைப்பார்த்தால் தண்ணீர் அப்படியே யிருக்கும். ஏன் செட்டிக்குள் மாத்ரம் நீர் செல்லவேண்டும்? செட்டியையும் ஆணியையும் சற்று கவனித்துப்பாருங்கள். செட்டிமுழுதும் சிறுசிறு த்வாரங்களிருப்பதைப் பார்ப்பீர்கள். செட்டியின் வெளிப்புறம் மாத்ரம் இந்தமாதிரி இல்லை. செட்டியைப் பிளந்து உள்ளே பாருங்கள். உள்பக்கத்திலும் நிறைய த்வாரங்களிருக்கும். ஆகையால் செட்டியில் த்வாரங்கள் அநேகமிருப்பதனால் அது ஜலத்தை உள்ளே இழுத்துக் கொள்ளுகிறதல்லவா?

அதேமாதிரியாக, அடுப்புக்கரி, சாம்பல், காய்ந்துபோன மரத்துண்டு ஆகிய இவைகளை கொஞ்சம்ஜலத்தில் போட்டுபாருங்கள். இவைகளும் தண்ணீரை லகுவாய் உள்ளே இழுத்துக்கொள்ளுகின்றன.

புதிதாய்ச்செய்த ஒரு ஓட்டை எடுத்து அதைச் செவ்வையாய் கவனித்துப்பாருங்கள். அதில் த்வாரங்கள் இருக்கின்றனவா? கண்ணுக்குத் தெரிகின்றனவா? பாருங்கள். பார்த்தால் த்வாரங்களே இல்லைபோல் தோன்றும். ஆனால் அதைக் கொஞ்சநேரம் ஜலத்தில் போட்டு பிற்பாடு கையில் தூக்கிப்பார்த்தால் முன்னைக்காட்டிலும் ஜாஸ்தி கனக்கும். ஏன் கனக்கிறது? ஏதோ கொஞ்சம் நீர் அதற்குள் போயிருக்கவேண்டு மென்பதைத் தவிர வேறு காரணமுண்டோ? இல்லை.

மேலும் எல்லாரும் வீட்டில் அவல் நனைக்கும்போது ஒன்று பார்த்திருக்கலாம். முதலில் அவலைத் தண்ணீரில் போடும்போது பாத்ரத்தில் ஜலம் நிறைய இருப்பதாகத்தெரியும். கொஞ்சநேரங் கழித்துப் பார்த்தால் ஜலம் கண்ணுக்குத்தெரியாது. ஆகையால் ஜலம் அவலுக்குள் சென்றிக்கவேண்டும். ஆனால் அவலுக்குள்ளே த்வாரங்களிருக்கின்றனவா? கண்ணுக்குப் புலப்படுகின்றனவா? இல்லை. தண்ணீரை உட்கொண்டதல்லவா? எப்படி உட்கொண்டது? த்வாரங்கள் இருந்தால் தானே உட்கொள்ளும். ஆனால் த்வாரங்கள் கண்ணுக்குத் தெரியாத அவ்வளவு சிறியவையாயிருக்கின்றன. வேண்டுமானால் பூதக்கண்ணுடியால் பார்த்தால் தெரியும். மேலும் பிண்ணுக்கு, அரிசி, உளுந்து ஆகிய இவைகள் ஊறப்போடும்போது என்ன நடக்கிறது என்பது எல்லாருக்கும் ஸகஜமாய்த் தெரிந்த விஷயமே.

ஆகையால் செட்டிபோன்ற சில பதார்த்தங்களில் த்வாரங்கள் கண்ணுக்குத் தெரியும். இன்னும் ஓடுபோன்ற சில பதார்த்தங்களில் த்வாரங்களிருந்தாலும் அவைகள் கண்ணுக்குத் தெரியா? ஆணி போன்ற சில வஸ்துக்களில் த்வாரமே இல்லை.

கடவுளால் ச்ருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கார்யத்

திற்கு உபயோகமாகவே இருக்கிறது. உபயோகமில்லாத பதார்த்தமே கிடையாது. கேவலம் தெருப்புழுதியும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததா யிருக்கிறது. அநேகம்வஸ்துக்களில் கண்ணுக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ த்வாரங்களிருக்கின்றனவென்று சொன்னோம். அப்படி இருப்பதனால்தான் அவைகள் நமக்கு ப்ரயோஜனப்படுகின்றன. இல்லாவிட்டால் உபயோகமில்லை. முதலாவது நாம் சாப்பிடும் சாதத்திற்கு ஹேதுவான அரிசியில் த்வாரங்கள் இல்லாமற் போனால் ஜலம் அதற்குள் சென்று என்னமாய் அதை வேகவைக்கும்? நாம் உடம்பு துடைத்துக்கொள்ளும் சவுக்கம் என்ன ப்ரயோஜனம்? ஒரு உப்புக்கட்டியோ அல்லது சர்க்கரைக்கட்டியோ என்னமாய்க் கரையும்?

ஆனால் எல்லா பதார்த்தங்களிலும் இந்த மாதிரியாக த்வாரங்களிருந்தால் அதுவும் நமக்கு உபத்ரவந்தான். ஏனென்றால் முக்யமாய் அப்பேர்ப்பட்ட பாத்ரங்களில் நாம ஜலம், எண்ணெய் போன்ற த்ரவ பதார்த்தங்களை என்னமாய் வைத்துக்கொள்ளுகிறது? ஜலம் ஒழுகி ஓடிவிடுமல்லவா? ஆகையால் இந்தமாதிரி த்வாரங்களில்லாத வெள்ளிப் பாத்ரமோ, அல்லது பித்தளைப் பாத்ரமோ, செம்போ, இனமலோ நாம் த்ரவப்பொருள்களை வைப்பதற்கு உபயோகப்படுத்துகிறோம்.

நம்முடைய வீடுகளில் காப்பி டிகாக்ஷனை வடிகட்டுவதை நாம் பார்க்கிறோம். எதால் வடிகட்டுகிறார்கள்? ஸாதாரணமாய் ஒரு துணியால் அல்லவா வடிகட்டுகிறார்கள்? வடிகட்டும் போது என்ன நடக்கிறது? காப்பிப்பொடியெல்லாம் துணியில் தங்கி விடுகிறது. ஆனால் டிகாக்ஷன் மாத்ரம் கீழே இறங்குகிறது. இதனால்நாம் என்ன தெரிந்துகொள்ளலாம்? துணியில் சின்ன சின்ன த்வாரங்க ளிருக்கின்றனவென்றும், ஆனாலோ அந்த த்வாரங்கள் காப்பிப்பொடி செல்லும்படியாக அவ்வளவு பெரியவையாயில்லை யென்றும் தெரிகிறது.

நாம் வஸிக்கும்பூமியானது மேலேசொன்ன வடிகட்டும் துணியைப்போலவே இருக்கிறது. மழைபொழிகிறது. பெய்கிற மழையில் பாதி பூமிக்குள்ளே சென்றுவிடுகிறது. பாதி மழையோ உடனே ஓடிவிடுகிறது. நாம் எல்லாரும் கோடைகாலத்தில் ஆறுகளில் உள்ள ஊற்று ஜலத்தை மிகவும் ஸந்தோஷத்துடன் குடிக்கிறோம். நீர் தெளிவாகவும் அம்ருதம்போல் ருசியுடையதாகவு மிருப்பதற்குக்காரணமென்ன? ஏனென்றால் ஜலமானது ஊறிவரும்போது அநேகந்தூரம் மணல்வழியாய் வரவேண்டியிருக்கிறது. அப்படி வரும்போது ஜலத்திலுள்ள அசுத்த பதார்த்தங்களெல்லாம் அங்கங்கே தங்கிவிடுகின்றன. ஆகவே மணலானது 'நீர் வடிகட்டுங்கருவி' என்று சொல்லலாமல்லவா?

இப்போது அநேகமாய் எல்லாரும் ஒரு பிழைக்கும் வழியை நோக்கி பட்டணங்களில் வந்து வாஸஞ் செய்யவேண்டி யிருக்கிறது. பட்டணங்களிலெல்லாம் அநேகமாய் தண்ணீர் குழாய்கள் மூலமாய் வருகிறது. அநேகம் வீடுகளில் தண்ணீர் குடிக்க வேண்டும்போது தான் பாத்ரத்தை எடுத்து குழாயைத் திருப்புவார்கள். சில வீடுகளில் ஒரு துணியால் வடிகட்டுவார்கள். அப்படிச் செய்வது தேக ஆரோக்யத்திற்கு ஏற்றதாகாது. அநேகமாய் வ்யாதிகளெல்லாம் சுத்தமான ஜலத்தை உபயோகிக்காததனாலேயே உண்டாகின்றன.

சில வீடுகளில் குழாய் ஜலத்தைக் காய்ச்சி வடிகட்டி பானைகளில் போடுகிறார்கள். இது நல்லதுதான். மேலும் எல்லா ரயில்வே ஸ்டேஷன்களிலும் பானைமேல் பானையாய் வைத்து ஜலம் சொட்டிக்கொண்டிருப்பதை அநேகர் பார்த்திருக்கலாம். பானைக்குள் என்ன இருக்கிறதென்று கவனித்திருக்கிறீர்களா? பானைக்

குள் மணலும் கொஞ்சம் கரியுமேயிருக்கும். அந்தப் பானைகளின் த்வாரங்களில் வைக்கோலோ அல்லது நெட்டியோ அடைத்திருக்கும். இப்போது மணல், நெட்டி, வைக்கோல் ஆகிய இவைகளின் உபயோகம் தண்ணீரை வடிகட்டுவதில் தெரிந்ததல்லவா? இந்த மாதிரி ஜலம் வடிகட்டுவதில் அதிக செலவுமில்லை; ஆசாரக்குறைவுமில்லை. ஆகையால் அநேகர் இந்த முறையைக் கைக்கொள்ளலாம்

பிறகு, ஒரு காகிதத்தில் மசியைக் கொட்டி விட்டால் அந்த மசியை என்னமாய் எடுக்கிறது? இது எல்லாருக்கும் தெரிந்ததுதானே. ப்ளாடிங் பேபர் ஒன்றை எடுத்துக்கொண்டு ஒரு முனையை மசியில் தோய்த்தால் மசி வேகமாய் ஏறுவதைப் பார்க்கிறோம். மசி என்னமாய் ஏறுகிறது? அந்தபேபரில் த்வாரங்களிருப்பதினாலே யல்லவா ?

இன்னும், வீட்டில் விளக்குப்போடும் திரி ஒன்றை எடுத்துக்கொண்டு ஒரு முனையை ஜலத்தில் தோய்த்து மற்றொரு முனையைக் கையால் பிடித்துக்கொண்டு என்ன வாகிறதென்று கவனியுங்கள். ஜலமானது திரியின் மேல் ஏறுவதைப் பார்ப்பீர்கள். இன்னும் அதே திரியை ஜலத்தில் நனைத்து ஒரு பாத்ரத்தில் ஜலத்தை எடுத்து திரியின் ஒரு முனையை ஜலத்திற்குள் போட்டு மற்றொரு முனையை வெளியில் தொங்கவிட்டு கவனித்துப்பாருங்கள். தொங்குகிற முனையின் வழியாய் ஜலம் சொட்டுச்சொட்டாய் விழுவதை பார்ப்பீர்கள். இரண்டு மணிநேரம் கழித்துப்பார்த்தால் பாத்ரத்து ஜலம் குறைந்திருக்கும். இந்த இரண்டு பரீக்ஷைகளாலும் விளக்கு என்னமாய் எரிகின்றதென்று நீங்களே இப்போது சொல்லிவிடலாம். எண்ணெயானது திரியில் மெதுவாய் ஏறி, கொஞ்சம் கொஞ்சமாய் அதன் நுனியில் செல்லுகின்றது.

இந்தமாதிரியாக ஜலம், எண்ணெய் முதலிய த்ரவப்பொருள்கள் கெட்டிப் பதார்த்தங்களினுடைய மயிர்போன்ற நுண்ணிய த்வாரங்களின் வழியாய் ஏறும் சக்தி 'காபிலரி ஆக்ஷன்' என்று இங்கிலீஷிலும், தந்துக ஆகர்ஷண சக்தி யென்று தமிழிலும், சொல்லப்படுகிறது. காபிலரி யென்ற பதத்திற்கு 'மயிர் போன்ற' என்பது பொருளாகும், அதாவது அவ்வளவு நுண்ணியதான த்வாரமுடையதென்பது பொருள். இந்த சக்தியானது குழாய்களில் எவ்வளவுக் கெவ்வளவு த்வாரங்கள் சிறியவையாயிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு ஜாஸ்தி உயரம் த்ரவப்பொருள்களுக்கு ஏறும் சக்தியுண்டு. இதன் உண்மை குறுக்களவு வித்யாஸமான ஐந்தாறு சிறு கண்ணடிக் குழாய்களை ஜலத்தில் நட்டுவைத்தால் நன்றாக வெளியாகும். இப்போது மரம், செடி, கொடிகள், ஜலத்தை என்னவிதமாய் உட்கொள்ளுகின்றனவென்பது தெரியுமல்லவா? வீடுகளில் விளக்கெண்ணெய் விளக்கு எரியும்போது அநேகர் விளக்கு படர்ந்தெரிவதைப் பார்த்திருக்கலாம். அதற்குக் காரணம் திரியை ஸரியானபடி கெட்டியாய் திரிக்காதிருப்பதுதான். கெட்டியாய்த் திரித்தால் திரியின் நீள அளவுமட்டும் சிறுசிறு குழாய்கள் போல் உண்டாகின்றன. ஆகவே எண்ணெய் நன்றாய் எரியும் பக்கத்திற்குச் செல்லுகிறது. ஆனாலோ நன்றாய்த் திரிக்காவிட்டால் குழாய் பெரிதாகிவிடுகிறது. எண்ணெய் நெடுந்தூரம் போக முடிகிறதில்லை. ஆகவே எண்ணெயுந் திரியும் சேர்ந்து எரியாமல், திரி மாத்ரம் எரிகிறது. இதை யறிந்தோ யறியாமலோ சில வீடுகளில் நூல்திரிகளை உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு நூல் திரியானது அநேகம் மயிர்போன்ற த்வாரமுள்ள நூல்களாலாக்கப்பட்டிருக்கிறது.

இப்போது மெழுகுவர்த்தி விளக்கு என்ன விதமாய் எரிகிறது என்று கேட்பீர்கள்.

அதுவும் இதேமாதிரிதான். மெழுகானது உருகி த்ரவப்பொருளாகிறது. அப்படியானதும் முன் சொன்னமாதிரி திரியின் வழியாய் ஏறுகிறது. பிற்பாடு ஸாதாரணவிளக்குப்போல் எரியும். சிலர் புது மெழுகுவர்த்தி விளக்கு ஏற்றும்போது விளக்கு என்னமாய் எரிகிறதென்று தெரியாமல் வீணே நெருப்புக்குச்சியை செலவழிக்கிறார்கள். அவர்கள் முதல் முதலில் திரியில் நெருப்புவைப்பார்கள், ஆனால் திரியில் மெழுகு உருகி ஏறவில்லையே! அப்படியிருக்க என்னமாய் எரியும்? ஆகையால் நெருப்பு ஜ்வாலையை கொஞ்சநேரம் மெழுகண்டை காட்டி, பிற்பாடு திரியைப்பற்ற விட்டால் உடனே எரியும். ஏனென்றால் அப்போதுதான மெழுகுஉருகி திரியின் வழியாய் ஏறும்.

எண்ணெய் திரியின் வழியாய் ஏறுவதை நாம் ஒருவாறு பரிசோதிக்கலாம். எப்படியென்றால் கொஞ்சம் ஸன்னமான அடுப்புக்கரியில் துளியெடுத்து, எரிகிற மெழுகு வர்த்தி விளக்கில் உருகியிருக்கும் மெழுகில் போட்டு சற்று கவனியுங்கள். கரியானது சிறுமீன் போல நீந்தி பிற்பாடு திரியண்டை சேர்ந்து அதில் ஏறுவதைப் பார்ப்பீர்கள். இப்போது கரி எதில் மிதக்கிறது? அதை யார் பிடித்துத் தள்ளினார்கள்? என்னமாய் மேலே ஏறுகிறது? இவைகளுக்கெல்லாம் காரணம் உருகினமெழுகு 'காபிலரி ஆக்ஷனால்' திரியில் ஏறுவதாலல்லவா?

எஸ். கணபதி ஸுப்ரமண்யம்.

---

## BRASS AND COPPER INDUSTRY IN MADRAS.

### செம்பு, பித்தளை வேலைகள்.

நமது தேசத்திலே அநேக கைத்தொழில்கள் நாளுக்கு நாள் க்ஷீணித்து வருகின்றன. தற்கால நாகரீகங்களுக் கேற்ப புது முறைகளைக் கையாடாததாலும், அந்யருடைய போட்டி அதிகமா யிருப்பதாலும், நம்மவர்களில் பலரிடத்தும் அந்நிய நாட்டு ஸாமான்களின் மேல் அபிமானம் அதிகமா யிருப்பதாலும், இன்னம் பல காரணங்களாலும், அநேகம் கைத்தொழில்களுக்குக் கேடுகள் ஸம்பவிக்கின்றன. இவைகளை யெல்லாம் நன்கு ஆராய்ந்து அந்தந்தக் கைத்தொழில்களின் அபிவ்ருத்திக்குத் தடையா யிருப்பவைகளை நீக்கி அவைகளை வ்ருத்திசெய்ய முயலுவது நம்மவர்களின் கடமையா யிருக்கிறது. இப்பொழுது செம்பு, பித்தளை, வெண்கலம் இவைகளால் ஸாமான் செய்தலாகிய கைத்தொழிலைப் பற்றி விவரிப்போம்.

### சில ஸென்ஸஸ் கணக்குகள்.

சென்னை ராஜதானியிலே * இந்தக் கைத்தொழிலின் வரும்படியை ஆதாரமாகக் கொண்டு ஜீவிக்கிறவர்கள், அதாவது, அந்தத் தொழிலில் வேலை செய்கிறவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும், 1901-ம் வருஷத்து ஸென்ஸஸ் கணக்கின்படி 41.118 பேர் இருந்தார்கள்.

சென்ற 1911-ம் வருஷத்து ஸென்ஸஸ் கணக்கின்படி 41,871 பேர் இருந்தார்கள். அதாவது பத்து வருஷத்தில் இந்தத் தொழில்களால் ஜீவிக்கிறவர்கள் நூற்றுக்கு 1·8 விதம் அதிகமாகி யிருக்கிறார்கள்.

இந்தத் தொழிலில் வேலை செய்பவர்கள் மாத்ரம் 1901-ம் வருஷ ஸென்ஸஸ் கணக்குப்படி 15,260 பேர் இருந்தார்கள். சென்ற 1911-ம் வருஷ ஸென்ஸஸ்படி 15,893 பேர் இருந்தார்கள். அதாவது, 633 தொழிலாளிகள் அதிகமா யிருக்கிறார்கள்.

---

* இந்தக் கணக்குகளில், புதுக்கோட்டை பங்கனபள்ளி, சாந்தூர் ஆகிய ஸ்வதேச ஸமஸ்தானங்களின் கணக்கும் சேரும்.

சென்னை ராஜதானியில் செம்பு பித்தளையின் இறக்குமதி.

| வருஷம். | நிறை (அளவு). | மதிப்பு. |
|---|---|---|
| | அந்தர். | ரூபாய். |
| 1900—01 | 14,889 | 8,14,706 |
| 1901—02 | 26,528 | 13,87,961 |
| 1902—03 | 33,027 | 15,70,440 |
| 1903—04 | 34,501 | 16,03,829 |
| 1904—05 | 44,628 | 20,54,219 |
| 1905—06 | 21,443 | 11,07,131 |
| 1906—07 | 21,205 | 12,54,411 |
| 1907—08 | 30,691 | 20,61,635 |
| 1908—09 | 58,523 | 31,43,707 |
| 1909—10 | 68,861 | 33,63,531 |
| 1910—11 | 77,896 | 37,93,109 |

இந்தக் கைத்தொழில்களுக்கு வேண்டிய செம்பு, பித்தளை, வெண்கலம் முதலியவைகள் பெரும்பாலும் மேல்நாட்டிலிருந்தே தருவிக்கப்படுகின்றன. அவைகள் சென்ற 3, 4 வருஷங்களாக நிறையிலும், மதிப்பிலும் ரொம்பவும் அதிகமாகி யிருக்கின்றன.

மேலே காட்டியுள்ள கணக்கின்படி இறக்குமதியான வேலைக்கு வேண்டிய செம்பு, பித்தளை ரொம்பவும் அதிகமாகி யிருக்க, அதற்குத் தகுந்தபடி இந்தக் கைத்தொழிலில் வேலை செய்பவர்கள் அதிகரிக்காம லிருப்பது வியப்பா யிருக்கிறது. ஒருக்கால் தொழிலாளிகள் புதிய முறைகளை அனுஷ்டித்து புது யந்த்ரங்களைத் தருவித்து வேலை செய்கிறார்கள் என்று சொல்லலாம். அல்லது ஷை அதிகமாய் இறக்குமதியான செம்பு, பித்தளை வேறு கைத்தொழில்களுக்கு உபயோகப்பட்டு வரலாம். காரணம் இன்னவென்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை.

ஜனங்கள் நாகரீகத்தில் வ்ருத்தியடையவே அவர்கள் தங்களுடைய பண்டைக்கால மண் பாத்ரங்களை விட்டுவிட்டு, செம்பாலும், பித்தளையாலும், வெண்கலத்தாலும் செய்த பாத்ரங்களை அதிகமாக வாங்கிவருகிறார்கள். இன்னம் தங்கள் குடும்பத்தில் இப்படிப்பட்ட மாறுதல் செய்யாதவர்களும் நாகரீக முதிர்ச்சியால் கூடிய சீக்ரத்தில் உலோகத்தால் செய்த ஸாமான்களை அதிகமாகக் கையாளத் தொடங்குவார்கள் என்று நம்பலாம். ஆகையால் இந்தக் கைத்தொழில் ஸரியான முறையில் சீர்திருத்தப்பட்டால் இப்பொழுதுள்ளதைவிட அதிகம் வ்ருத்தியாகும் என்பதில் ஸந்தேகமில்லை.

தொழில் நடக்குமிடங்கள். - நமது ராஜதானியில் இந்தக் கைத்தொழில் அதிகமாய் நடக்கும் இடங்கள் தஞ்சாவூர், மதுரை, நெல்லூர், விசாகபட்டணம் முதலிய இடங்களே. இந்த ஊர்களில் செய்யப்படும் வேலைகள் மிகவும் நேர்த்தியாயிருக்கின்றன. இவைகளேயன்றி திருப்பதியிலும், கஞ்சம் ஜில்லாவிலும் திருச்சிறாப்பள்ளியில் குரும்பலூரிலும் இன்னம் மற்ற இடங்களிலும் விதம் விதமான வேலைப்பாடுள்ள ஸாமான்கள் செய்யப்படுகின்றன.

சில குறைப்பாடுகள்:—ஆனால் இந்த உலோகங்களில் புது மாதிரிகள் செய்வதென்றால் இந்தியர்கள் ஸரியாய்ச் செய்வவதில்லை யென்றும், அவர்களுடைய புதுவேலைகளில் அழகும், ஒழுங்கும் அதிகம் காண்பது அரிது என்றும், சிலர் சொல்லுகிறார்கள். இந்தக் குறைப்பாடு உண்மையாயிருக்குமானால் இந்த சீர்திருத்த வேண்டியது நமது முக்கிய கடமையாகும்.

வேறு சாமான்களின் போட்டி.—இப்படி வேலையில் குறைப்பாடுகள் இருப்பதாகச்சொல்வதோடு கூட வேறு அபாயங்களும் இருக்கின்றன. அலுமினியம் தொழில் இப்பொழுது வ்ருத்தியாகி வருகிறது. அலுமினியம் பாத்ரம் லேசாயும், வேலைப்பாடுள்ளதாயும் இருப்பதால்

செம்பூர் பிக்ஷை வேலைகள் மையர் நூல் நிலையம், சென்னை - 600090

சில ஜனங்கள் அலுமினிய ஸாமான்களின் மேல் அதிக ஆசை கொண்டிருக்கிறார்கள். எனுமல் பாத்ரம் வெகு காலமாக நமது நாட்டுக்கு ஏராளமாக இறக்குமதியாவது யாவரும் அறிந்த விஷயம். எனுமல் பாத்ரங்கள் விதவிதமாகவும், அநேக நிறங்களுடனும், சித்ரங்களுடனும், இருப்பதால் ஜனங்கள் அவைகளை அதிகமாக வாங்குகிறார்கள். கண்ணாடியால் செய்யப்பட்ட டம்லர் முதலிய சிறிய பாத்ரங்களும் அதிகமாக வரவழைக்கப் படுகின்றன. இவைகளால் செம்பு, பித்தளை ஸாமான் கைத்தொழிலுக்கு சிறிது கஷ்டம் நேரிட்டிருக்கிற தென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஜனங்கள் மேலே சொன்ன பகட்டான ஸாமான்களை அதிகமாக வாங்குவதால் அவர்களுடைய நோக்கத்துக்குத் தகுந்தபடி கைத்தொழிலை மாற்றவேண்டி வரும் என்பது தெளிவாகிறது. இதை யறிந்தே பலர் செம்பு, பித்தளைகளில் புதுமாதிரியான விளக்குகளும், ஷேடுகளும், இன்னம் மற்ற ஸாமான்களும் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

**சீர்திருத்தங்கள் ஸம்பந்தமான யோசனைகள்.**—இவைகளை யெல்லாம் உத்தேசித்து இந்தக் கைத்தொழிலில் அநேகம் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது.

(1) இந்தத் தொழிலைக் கற்றுக் கொள்ளும் சிறுவர்கள் தொழிலாளியினிடம் இத்தனை வருஷ காலம் வேலைசெய்கிறது என்று ஒப்பந்தம் செய்வதில்லை யாதலால் அவர்கள் நினைத்தபோது விட்டுப்போக ஸௌகர்யம் ஏற்படுகிறது. இந்தியர்கள் பொதுவாய் ஏழையாயிருப்பதால், வேலை கற்றுக்கொள்பவன் அப்படி அதிக காலமிருந்து திறமையான வேலைக்காரனாகாமல் சீக்ரமே தன்னுடைய யஜமானனை விட்டுப் பிரிந்து ஸ்வயமாகவே தொழில் நடத்த ஆரம்பிக்கிறான். அதனால் அவன் தன்னுடைய யஜமானனைப் போல் அவ்வளவு ஸாமர்த்யம் வாய்ந்தவனாக இருக்க பெரும்பாலும் முடிவதில்லை. வெகு காலத்துப் பிறகு தான் ஸாமார்த்ய சாலியாகிறான். ஆகையால் வேலை கற்றுக்கொள்பவன் தன் யஜமானனிட மிருக்கும்போதே கைத்தொழிலைப் பற்றிய விஷயங்களை நன்றாயும் பூராவாயும் கற்றுக்கொள்ளவேண்டும்.

(2) இந்தக் கைத்தொழில் ஸம்மந்தமாய் ஏற்கனவே யுள்ள பள்ளிக் கூடங்களில் தொழிலாளிகள் அதிகம் பேர் போய் அந்தத் தொழிலைப் புதுமுறைப்படி கற்றுவரவேண்டும். ஏனென்றால் இந்தத் தொழிலில் தேர்ச்சி பெறுவதற்கு சித்ரம் வரைதலும், பலமாதிரி ஸாமான்கள் செய்யப் பழகுதலும் அவச்யமானவை. இவைகளைக் கற்றுக்கொள்வது தொழில் பள்ளிக்கூடங்களில்தான் ஸாத்யமாகும்.

(3) இந்தக் கைத்தொழிலுக்கு வேண்டிய அவச்யமான ஆயுதங்களையும், யந்த்ரங்களையும் தருவித்து உபயோகிக்கவேண்டும். அப்பொழுதுதான் ஸாமான்கள் சீக்ரமாயும், மலிவாயும், அதிகமாயும் செய்யலாம். அதற்குத் தகுந்தபடி லாபமும் கிடைக்கும். ஆனால் பெரிய பாக்டரிகளில் உள்ள ரொம்பவும் விலை ஏறப்பெற்ற யந்த்ரங்களை வாங்குவது முடியாது. ஸ்வல்ப விலையுள்ளனவாயும், வேலைக்கு அவச்யமானவையாயும் உள்ள சிறு யந்த்ரங்களை வரவழைத்தால் போதும். கடைசல் பிடிக்கும் யந்த்ரங்கள், செம்பு அல்லது பித்தளைத் தகட்டை வெட்டுவதற்கும், த்வாரம் செய்வதற்கும் வேண்டிய சிறு யந்த்ரங்கள், பாத்ரம் முதலியவைகளில் சித்ரங்கள் பதிக்க சிறிய ப்ரெஸுகள், பித்தளையால் சிறிய பெட்டிகளும், பித்தான்களும் செய்ய சிறு யந்த்ரங்கள்

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

முதலிய இன்னம் அநேக சிறு யந்த்ரங்களும் தருவித்துக் கொள்ளலாம்.

(4) ஆனல் நமது தேசம் ஏழையான தேசமாயிருக்க, இப்படிப்பட்ட சிறு யந்த்ரங்களுக்கும் வேண்டிய பணம் ஒருவரே டேவதென்ருல் முடியாததாகுமே என்று கேள்வி பிறக்கலாம். ஒரு ஊர் அல்லது பட்டணத்திலுள்ள பலபேர் ஒன்று சேர்ந்து முதல்போட்டு கூட்டுத்தொழில் செய்தால் ரொம்பவும் நன்ருயிருக்கும். இக்காலத்தில் எதற்கும் ஸாதகமாயிருப்பது கோவாபரேஷனுகும். கோவாபரேஷனே இந்தத் தொழிலுக்கும் உபயோகித்து வந்தால் ரொம்ப நன்மையாகும்.

(5) மேலும் பலர் சேர்ந்து உழைத்தால், வேலையைப் பங்கிட்டுக்கொண்டு, வேலையை நன்ருயும், சீக்ரமாயும், சரக்குகளை ஏராளமாயும், மலிவாயும் செய்யலாம்.

(6). இந்தக் கைததொழில் ஸம்பந்தமாக ஒருவித ஸங்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தத் தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து ஒரு ஸங்கம் ஏற்படுத்திக்கொண்டு தங்கள் கைத்தொழி லபிவிருத்திக்கு வேண்டிய ஸாதனங்களைத் தேடுவது அவச்யமான கார்யமாகும்.

(7) ஜனங்களுக்கு மிகவும் அவச்யமானதும், அவர்களுடைய மனவிற்குப் பிடித்ததுமான புது ஸாமான்களைச் செய்ய வேண்டும். மேலும்கதவுகளுக்குக் கீல்கள், கைப்பிடிகள், பூட்டுகள், விளக்குகள், தண்ணீர்க்குழாய்கள், பக்ஷிக்கூடுகள, பொத்தான்கள், பள்ளிக்கூடங்களுக்கு வெண்டிய கணிதம், பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி முதலிய பாடங் களுக்கு வேண்டிய கருவிகள் ஆகிய இவைகளையும் செய்யலாம்.

(8) அப்படிச் செய்த ஸாமான்களை பலரும் அறியும்படி விளம்பரங்கள் செய்வதும், இன்னம், ஸாமான்கள் விற்பனை யாவதற்கு வேண்டிய ஸாதனங்களைக் கையாடுவதும் ரொம்ப அவச்யமாகும். இந்தியர்கள் பொதுவாய் வ்பாபாரம் தெரியாதவர்கள் என்றும், தங்கள் ஸாமான்களைப் பலரும் அறியும்படி விளம்பரம் செய்யவதில்லை என்றும், அநேக காலமாகக் குறையிருந்து வருகிறது. இந்தத் தொழிலுக்காக ஒரு ஸங்கம் ஏற்பட்டு, ஸாமான்கள் செய்வதற்கும் அவைகளை விற்பதற்கும் வேண்டிய ஸாதனங்களைக் கையாடுமானல், தொழிலாளிகளுக்கு லாபமும், க்ஷேமமும் தேசத்துக்கு நன்மையும் பெருமையும் உண்டாகும்.

---

## THE SOIL

BY

M. VAIDYANATHAN.

### மண்

"பலகுடை நீழலுந்தங்குடைக் கீழ்க்காண்ப
ரலகுடைநீழலவர்."

நன்செய் நிலங்களை இப்போதுள்ள விதமாகவே வைத்துக்கொண்டிருந்தால் நூதன விவஸாயத்துக்குப் பொருந்தாது. சீர்திருத்தங்கள் ரொம்ப செய்து நிலங்களை அபிவ்ருத்திக்குக் கொண்டுவரவேண்டும். சாச்வதமான கட்டிடத்துக்கு அஸ்திவாரம் உறுதியாகவும், ஆழமாகவும், சீராகவும் இருக்கவேண்டியது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவச்யம் மராமத்து, எரு, ஆழஉழவு, ஆகிய இவைகள். அஸ்திவாரம் யார் கண்ணுக்குந் தெரியாமல் மண்ணில் மறைந்திருக்கிறதென்று எண்ணி அதை கவனியாமல், அநேகருடைய கவனத்தை க்ரகிக்கும்படி அழகிய வர்ணமும், சித்திரவேலையும் அமைத்துக்கட்டப் பட்டமாடிகள் சிறிதுகாலத்தில் விழுந்து பயன் படாமல் போகின்றன. இது போலவே நன்செய் வயலுக்கு அஸ்திவாரம், மராமத்து,

எரு, உழவு. இவைகளில் கண்ணுங்கருத்துமாயிருந்து நடத்தினாலொழிய பயன்படுவதில்லை.

நமது க்ருஷிகர்களுக்கு பழைய வழிகளிலுள்ள பற்றே, விவஸாய அபிவ்ருத்திக்கு பெரிய இடையூறாயுள்ளது. விவஸாயத்தில் அந்ய தேசத்தார்கள் ஸம்பூமிமுழுவதும் பண்படுத்தி விவஸாய அபிவ்ருத்திசெய்தும், காடுகளையும் மலைகளையும் அழித்தும் ஸமன்செய்கிறார்கள். இவ்விதம் காடுகளை அழிப்பதாலுண்டாகும் விறகு க்ராக்கியை நிவர்த்திக்கும் பொருட்டு ஸூர்ய உஷ்ணத்தால் வேலைகளை முடித்துக்கொள்ளவும் முயற்சி செய்கிறார்கள். இவ்விதமிருக்க, காவிரிப்பாசனத்திலுள்ள விவஸாயிகள் பழமை என்பதைத் தாண்டி அப்பாற் செல்ல விருப்பமில்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

கற்றறிந்த மிராசுதார்கள் சாஸ்த்ர முறைகளை அனுஸரித்து அவற்றாலுண்டாகும் நன்மைகளைக் கண்ணுக்குமுன் காட்டினாலொழிய குடியானவர்கள் விவஸாய புது வழிகளை பின்பற்றமாட்டார்கள்.

இவ்வளவுதூரம் அனாவச்யமாய் வளர்த்தி எழுதினதற்காக பிழையெனக் கொள்ளாது இதன் கீழ்காணும் விஷயங்களை அநுஸரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வ்யாஸத்தில் மண்ணைப்பற்றிச் சொல்லுகிறேன்.

களர் அல்லது சவுட்டு, சுக்கான், சரளை, களி, வண்டல்களி, மணல் சேர்ந்தகளி, கரிசல், கரிசல்களி, செவ்வல், மணற் பாங்கான செவ்வல், பசளை, என பலவகையுண்டு.

நெல்விளைவதற்கு ஒருவகைமண்ணே சிறந்ததென்று சொல்லவாய்ப்பதில்லை. ஜலமும் தக்க விதமாயிருந்து, சாஸ்த்ரமறிந்து சேர்த்த எருவும் இருந்தால், எல்லாவகை நிலத்திலும் நெல் விளையும்.

களர்நிலத்தில் ஓர்வகை சவிட்டு உப்பு இருந்து கெடுக்கிறது. களிநிலத்துக்கு மணல் அடித்து நயப்படுத்தவேண்டும். கரிசல் மண்ணுக்கு சாம்பல் உரம்போட நன்றாய் விளைகிறது. ஒவ்வொரு மண்ணுக்குந்தகுந்த மாற்று மண் அடிப்பதால் வளப்படும். வேற்றுமண்ணுக்கு மாற்று மண் உரம் என்பதை கவனித்தல் நலம்.

மராமத்து:—நமது ராஜதானியில் நிலம் மேடுபள்ளமாயும், ஒத்தடியில்லாமல் வாட்டமாயும், வரப்புகள் சில இடங்களில் சிறுத்தும், பெருத்தும், கோணலாயும், விழல், நாணல், கோரை, இவைகளால் வரப்புகள் மூடப்பட்டும், இருப்பது ஸர்வ ஸாதாரணமாயிருக்கிறது. வரப்புகள் ஒழுங்காயிருக்கவேண்டும். $1\frac{1}{2}$ அடி உயரமான வரப்புகள் வயலுக்கு இன்றியமையாதவை.

இவ்விதம் வரப்புகள் சீராயிருப்பதுடன் ஒவ்வொரு வயலும் இரண்டு ஏக்கர் நிலத்துக்குக் குறைந்ததாயிருக்கக்கூடாது. வயல் சிறியதாயிருப்பதால் வரப்புகள் அதிகப்படும். வரப்புகள் அதிகப்படுவதாலும், நாணல், கோரை இவைகளால் மூடப்பட்டிருப்பதாலும், களை, புல்பூண்டுகள், உற்பத்தியாகின்றன. நண்டுகள் வரப்புகளைத் துளைத்து ஜலம் ஒரு வயலிருந்து மற்றொரு வயலுக்கு போகிறது. நண்டுகளைப் பிடிக்க எலிகள் சேர்கின்றன. நாணல் வரப்புகளில் எலியின் குடி செழித்திருக்கும். எலிகள் அநேக கதிர்களை தம்மிருப்பிடம் சேர்க்கின்றன. எலியைப்பிடிக்க சாரைப்பாம்பு வந்து சேர்கிறது. சாரைகள் ஸஞ்சரிப்பதால் பயிர்களும் கதிர்களும் நாசமடைகின்றன. இதனால் வயல்கள் பெருத்தும் வரப்புகள் சிறுத்தும், நாணல், கோரை, இவைகளை அறவே ஒழித்தும், இருக்வேண்டியதென புலப்படுகிறது.

ஔவை வரப்புயர நீர் உயரும், நீர்உயர நெல்லுயரும், நெல்லுயரக் குடி உயரும், குடி உயரக்கோன் உயரும், என்றார்.

அவர்காலத்தில் பாசனங்கள் இன்னுங்

கேடாயிருந்திருக்கவேண்டும். ஜலம் வந்த போது நிறைய தேக்கிக்கொள்வது வழக்கமா யிருந்திருக்கிறது. நூதன விவஸாயத்துக்கு நீர்குறையநெல்லுயரும் என்று சொல்லவேண் டும். இக்காலததில் உள் வரப்புகளை உயர்த்த வேண்டியதில்லையானுலும், கட்டளையின் சுற் றுக்கரைகளும், கால்வாய்க்கரை, ஆற்றங் கரை, இவைகளும், கூடுமானவரையில் உயர்த் தப்படவேண்டும்.

வயல்கள் மேடுபள்ளமின்றி ஒத்தடியாயி ருக்கவேண்டுமென்பது ஒவ்வொரு விவஸா யிக்குந் தெரிந்த விஷயம். என்ருலும் சில பெரிய நில ஸ்வான்தார்களின் பண்ணையில் மராமத்து செய்வது, மேட்டைவெட்டி மேட் டில் போடுவதும், வரப்புகளில் மண்ணை ஒழுங் காய் அணைக்காமல் தாறுமாருய்க் கொட்டுவ தும் ஸாதாரணமாயிருக்கிறது. இது "உடைய வனில்லா வேலை ஒரு முழங்கட்டை" என்ற படி ஸ்வான்தார் கண் பார்வையில்லாமல் செய் யும் வேலை. இவ்விதம் செய்யும் மராமத்துகள் சீர்கேடாயிருக்கு மென்று சொல்லத் தேவை யில்லை. வெட்டுமாலைகளை அகலத்தை குறைத் தும் ஆழத்தை அதிகரித்தும் எடுப்பதனுல், மேல்மண் ஏடுபடாமல் தங்குகிறது. மேலும் மேட்டில் வெட்டின மண்ணை அதே வயலி லுள்ள பள்ளத்தில் போடுவதால், அதிகமாய் வெட்ட வேண்டியதிராமல் நிலம் ஸமப்படும். சிலர் பள்ளத்துக்கு ஸரியாய் மேடான பாகம் முழுமையும் வெட்டி வரப்புகளிலும், கரைகளி லும், தாறுமாருய் மண்ணைக் கொட்டிவைக்கி ருர்கள். இவ்விதம் நிலத்திலுள்ள மேல்மண்ணை எடுப்பதால் ஏற்கனவே பண்படுத்தப்பட்டு ஹ்யூமஸ் அடைந்த மண் அப்புறப்படுத்தப் படுகிறது.

ஜலம் தாராளமாய் வந்து பாயக்கூடாத அவ் வளவு மேடாயிருந்து வெட்ட வேண்டிவந் தால் மேல்மண்ணை வெள்ளங்கொள்ளும் பள் ளவயல்களில் கொண்டுபோய் கொட்ட ப்ரயத் னப்படவேண்டும்.

வெட்டிய மாலைகளை ஸமப்படுத்த வேண்டிய தில் கவலை எடுத்துக்கொள்ளவேண்டும். கோ டையில் ஸமபடுத்துவது வழக்கம். சேற்றில் ஸமப்படுத்துவதே உத்தமம். நீரை சீராக வைத்துக்கொண்டு திருநெல்வேலியில் அநு ஷ்டிக்கிற "பரம்பை" உபயோகப் படுத்திஞல் உள்ளங்கைபோல் ஸமன் செய்துவிடலாம். மேடு பள்ளங்களை ஸமன் செய்வதில் மிகுந்த ப்ரயாஸை எடுத்துக்கொள்ளாவிட்டால் மேடு காய்ந்தும் பள்ளம் அழுகியும் பயிர்கள் நாச மடையும்.

வயலின் ஊடே செல்லும் சிறு கண்ணிக் கால்கள் குறுகியும், ஒழுங்காயும், ஆழமாயும் இருக்கும்படி செய்யவேண்டியதுடன், பாசன காலிலிருந்து பிரிந்து வடிகாலில் வந்து முடி யும் வண்ணமாயும், கண்ணிக்கால்கள் அமைந் திருக்கவேண்டும். பின்னும் மண்ணைவெட்டி வரப்புக்கு அணைத்தாலும் ஒரே அகலமாயும், ஒழுங்காயும் இருக்க ப்ரயத்தனப்படுவது அவ ச்யம். "அண்டைவெட்டிப் பார், கண்ணுக்கு மையிட்டுப்பார்" என்ற வாக்கியத்தை அனுஸ ரிக்க வேண்டும்.

மேலும், சிறுகரைகளில் துவரை, ஆமண க்கு, மஞ்சள், செம்பு, உளுந்து, இவைகளைப் பயிரிட்டு லாபத்தை யடையவேண்டும். கோதாவரியில் துவரையைக்கொண்டு கிஸ்திப் பணம் செலுத்துகிருர்கள். பெருங்கரைகளில் கருவேலமரம், புங்கை, ஆடுதொடா, எருக்கு முதலிய தழைமரங்களை பயிர்செய்யவேண்டும். புறம்போக்கு நிலங்களிலும் மரங்கள் வைத்து பயிர்செய்ய கவர்ன்மெண்டாரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளலாம். ஸ்வான்தார் ஒவ் வொருநாளும் தம்நிலத்தை சுற்றிப் பார்ப்ப தால் மட்டும் சீர்திருத்தஞ் செய்யக்கூடும்.

எம். வைத்தியநாதன்.

## INDUSTRIAL CONFERENCE RESOLUTIONS.

## இன்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ் தீர்மானங்கள்.

சென்ற வருஷம் பங்கிப்பூரில் நடந்த கைத்தொழில் கான்பரென்ஸில் முதலில் டெல்லி கொடுஞ்செயலைப்பற்றிக் கண்டித்துத் தீர்மானம் செய்துவிட்டுப் பின்வரும் தீர்மானங்களைச் செய்தார்கள்.

### விவஸாயமும் வ்யாபாரமும்.

2. விவஸாயத்தையும் இந்தியா வ்யாபாரத்தையும் ஸரியாய் வ்ருத்தி செய்வது ரொம்ப அவச்யமாயிருக்கிறது. இந்த விவஸாயத்திலும் வ்யாபாரத்திலும் அதிகத் தேர்ச்சியடைய இஷ்டமில்லாதவர்களுக்கு அவைகளைப்பற்றிய பொது விஷயங்களை அவர்களுக்குக் கற்பிப்பதற்காக விவஸாயமும் வ்யாபாரமும் கற்பிக்கும் ஆசிரியர்களை சீக்ரம் நியமிக்கவேண்டியது ரொம்ப அவச்யமென்று இந்தக் கான்பரென்ஸ் கவர்ன்மெண்டாருக்கும் ஜனங்களுக்கும் வற்புத்திக்கூறுகிறது. ஸாதாரண கல்விபோதிப்பதை ஒழுங்கு படுத்துவதற்கு ஸர்வ கலாசாலைகளில் ஸெனெட்டு ஏற்படுத்தியிருக்கிற முறைப்படி, தொழில் கல்வி ஸரியாக அபிவ்ருத்தி யடைவதற்காக போர்டுகள் ஸ்தாபிக்கவேண்டியது ரொம்ப அவச்யம்.

### இந்திய வர்த்தக ஸங்கங்கள்.

3. வ்யாபாரிகளும், வேறு தொழில் நடத்துபவர்களும், வேண்டிய இடங்களில் சேம்பர் ஆப் காமர்ஸ் என்னும் வர்த்தக ஸங்கங்களையும், கைத்தொழிலும் மூலதனமும் ஸம்பந்தமான ஸங்கங்களையும் ஸ்தாபிக்கவேண்டியது அவச்யம். அவர்களுடைய நன்மையையும், தேசத்தின் க்ஷேமத்தையும் உத்தேசித்து அவர்கள் இந்தியாவின் அந்ய தேச வ்யாபாரத்தை அதிகம் கைக்கொள்ளவேண்டும்.

### அட்கின்ஸனும் டாஸனும் செய்த விசாரணை.

4. உயர்தரத்தொழில் கல்வி விஷயமாய் விசாரணை செய்யும்படி ஏற்பட்டிருந்த கமிட்டியில் ஷை கமிட்டி மெம்பர்களான மெஸர்ஸ் அட்கின்ஸன், டாஸன் இவர்கள் செய்த சிபார்சுகள் விஷயத்தில் இந்தக் கான்பரென்ஸ் அத்ருப்திப் படுகிறது. இவர்கள் கவர்ன்மெண்டு டெக்னிகல் ஸ்காலர்ஷிப் விஷயமாய் செய்த சிபார்சுகளால், கைத்தொழில்கள் ஏற்படுத்தி ஸரிவர நடத்தி மேல்பார்த்துவருவதற்கு வேண்டிய உயர்ந்தஞானமும் பழக்கமும் உண்டாவதற்கு ஸாதகங்கள் ஏற்படாதென்று இந்த சிபார்சுகளைப்பற்றி அபிப்ராயங் கொள்ளுகிறது.

### மாகாணதொழில் இலாகாக்கள்.

5. ப்ரிட்டிஷ் இந்தியாவின் ஒவ்வொரு மகாணத்திலும் ஒரு கைத்தொழில் டிரெக்டரின் கீழ் ஒரு கைத்தொழில் டிபார்ட் மெண்டிருக்கவேண்டும். அந்த டிபார்ட்மெண்டு கைத்தொழில் ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி கவனிக்கவேண்டும். அந்தந்த மாகாணத்தில் டெக்னிகல்படிப்பு, வ்யாபாரம், கைத்தொழில் இவை ஸம்பந்தமான கல்வி, இவைகளை அந்த டிபார்ட்மெண்டு கவனித்து வரவேண்டும். ஒரு அட்வைஸரி போர்டும் ஸ்தாபிக்கப்படவேண்டும். போர்ட்டு மெம்பர்களில் பாதிப்பேர்களுக்குக் குறையாமல் உத்யோகஸ்தரல்லாத இந்தியர்களா யிருக்கவேண்டும்.

முக்யமான பொருளாதார ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி அந்த போர்டை ஆலோசனைகேட்கவேண்டும்.

(1.) இந்த டிபார்ட்மெண்டார் இதர வேலைகளோடு புதியவையானவும், சீர்திருத்தபட்டனவுமான வழிகளையும், முறைகளையும் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவது,

(2.) கைத்தொழில் ஸம்பந்தமான ஆராய்ச்சிகளையும், பரீக்ஷைகளையும் நடத்துவது,

(3.) தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களை விருத்தி செய்வது.

(4.) கைத்தொழில் வ்யாபார ஸம்பந்தமான பொருட்காட்சிகளை ஏற்படுத்தி நடத்துவது, ஆகிய இவைகளையும் செய்துவர வேண்டும்.

இந்த டிபார்ட்மெண்டின் கீழ் ஒரு கைத்தொழில் ம்யூஸியமும், அந்தந்த மகாணத்தில் கைத்தொழில், வ்யாபாரம் இவை ஸம்பந்தமாய் ஜனங்களுக்கு வேண்டிய ஸமாசாரங்களும்யோசனைகளும் சொல்ல பீரோ அப் இன்பர்மேஷன் என்று ஒரு ஆபீஸும் ஏற்படுத்த வேண்டும்.

பாலிடெக்னிக் காலேஜ்.

6. டெக்னிகல் படிப்பு விஷயமாய் ஏற்கனவே செய்தும் இன்னும் செய்ய உத்தேசித்தும் இருக்கும் விஷயங்களுக்காக இந்த கான்பரென்ஸ் கவர்மெண்டாருக்கு வந்தனம் செலுத்துகிறது ஆனாலும் கைத்தொழில் அபிவ்ருத்தி ஸ்திரமாய் ஏற்படுவதற்காக கைத்தொழிலுக்கும் மற்றவைகளுக்கும் உதவுகிற சாஸ்த்ரங்களிலும் கைத்தொழில்களிலும், உயர்ந்த கல்விகற்பிப்பதற்காக ஸகல ஸௌகர்யங்களும் அமைக்கப்பட்ட பாலிடெக்னிக் காலேஜ், அதாவது, சாஸ்த்ர தொழில் ஸர்வ கலாசாலை ஒன்றுவது கவர்ன்மெண்டார் இந்த தேசத்தில் ஸ்தாபிக்கவேண்டும்.

வ்யாபார ஸம்பந்தமானவும் டெக்னிகல் ஸம்பந்தமானவும் படிப்பு.

7. பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும், இப்பொழுதிருக்கிற பாடங்களோடு, வ்யாபார ஸம்பந்தமான பாடங்களும், நெசவு, சாயம் போடுதல், உலோகத் தகடுகளில் வேலைசெய்தல், இரும்புவேலை, தச்சுவேலை முதலிய கைத்தொழில் ஸம்பந்தமான பாடங்களும் கற்பிப்பதற்காக வகுப்புகளைச் சேர்க்கவேண்டுமென்றும், சிறுவர்கள் தங்களுக்கு ஜீவனோபாயமாக உபயோகமான கைத்தொழில்களைக் கற்றுக்கொள்வதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்றும், மகாண கவர்மெண்டுகள், ஸ்வதேச ஸமஸ்தானங்கள், ப்ரைவேட் அல்லது ஸர்க்கார் உதவிபெற்ற பள்ளிக்கூடம் அல்லது கலாசாலையின் ப்ரின்ஸிபல்கள், ஸூபரிண்டெண்டுகள் இவர்களுக்கு இந்தக் கான்பரென்ஸ் வற்புறுத்திக் கூறுகிறது.

கைத்தொழில் முயற்சிகள் கடைத்தேறுமல் போவது.

8. புது கைத்தொழில்கள் நடத்துவதற்காக ஏற்பட்ட அநேக கைத்தொழில் கம்பெனிகள் நஷ்டப்பட்டுப் போனதைப் பற்றியும் அதனல் தேசத்தின் பொருளாதார ஸௌகர்யங்களை அபிவ்ருத்தி செய்வதில் ஜனங்களுக்குள்ள ஆவல் குறைவதற்கு இவைகள் காரணமாயிருக்கிறதைப்பற்றியும் இந்தக் கான்பரென்ஸ் வருத்தப் படுகிறது.

மகாணங்களிலும் ஜில்லாக்களிலுமுள்ள ப்ரமுகர்கள் இப்படித்தொழில் கம்பெனிகள் நஷ்டமடைவதற்கு என்ன காரணமென்று விசாரணை செய்து அந்த விசாரணைகளின் முடிவை கான்பரென்ஸினுடைய ஜெனரல் ஸெக்ரெடரிக்குத் தெரிவிக்கவேண்டும்; ஜெனரல் ஸெக்ரிடெரி அவரிடம் போதுமான பணமிருந்தால் கைத்தொழில் கம்பெனிகள் நஷ்டமடைந்ததின் காரணங்களை ஆராய்ந்து அறிய ஒருவர் அல்லது அதிகமான பேரை நியமிக்கலாம்.

நெசவுத் தொழில்.

9. நெசவுத்தொழிலின் இப்போதைய நிலைமையை வ்ருத்தி செய்யவேண்டியது ரொம்ப அவச்யமானதால், முதலாளிகள், நெசவுக்காரருடன் சேர்ந்து, கைத்தறி நெசவுத் தொழில் நடக்கிற முக்யமான இடங்களில் வேலையை மட்டுப்படுத்தும் கைத்தறிகளையும், வேறு உபாயங்களையும் உபயோகத்துக் கொண்டுவர முயலவேண்டும்.

ரெயில்சார்ஜுகள்.

10. ஸாமான்கள் கொண்டுபோவதற்கு ஏற்பட்டுள்ள ரெயில்வே விகிதங்கள் ஒழுங்காயில்லை. இதனால் ஒரு மகாணத்துக்கும் இன்னொரு மாகாணத்துக்கும் நடக்கும் வ்யாபாரம் பாதிக்கப்படுகிறது. ஆகையால் கவர்ன்மெண்டார் முக்யமான துறைமுகங்களுக்கும், துறை முகங்களிலிருந்தும், கொண்டுபோகப்படும் ஸாமான்களுக்கு என்ன விகிதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவைகளையே விதிக்க ஏற்பாடுசெய்வது ரொம்ப அவச்யம்.

வ்யாபார வித்யாப்பகுதி.

11. பம்பாய் கவர்ன்மெண்டார் பம்பாய் யூனிவர்ஸிடியில் வ்யாபார வித்யாப்பகுதியை ஏற்படுத்தினதற்கு இந்த கான்பரென்ஸ் நன்றி செலுத்துகிறது. பம்பாய் யூனிவர்ஸிடியில் செய்திருப்பது போலவே இந்தியாவிலுள்ள மற்ற யூனிவர்ஸிட்டிகளிலும், வ்யாபாரக்கல்வி அபிவ்ருத்தியாக உதவும்பொருட்டு வ்யாபார வித்யாஸபைகளை மற்ற மகாண கவர்ன்மெண்டாரும் யூனிவர்ஸிடியார்களும் ஏற்படுத்த வேண்டும்.

பாங்கிகள்.

12. பம்பாய் ராஜதானியிலே ஒரு ஸென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கி ஏற்படுத்தியிருப்பதைப்பற்றி இந்த கான்பரென்ஸ் ஸந்தோஷப்படுகிறது. மற்ற மாகாண கவர்ன்மெண்டாரும், ஜனங்களும், விவஸாயிகளுக்கு ந்யாயமான வட்டியின்பேரில் ஸுலபமான நிபந்தனைகளுடன் பணம் கடன் கொடுப்பதற்கு இப்பொழுது உள்ள கோவாபரேடிவ் க்ரெடிட் ஸொஸைடிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு பம்பாய் ஸென்ட்ரல் கோவாபரேடிவ் பாங்கியைப்போல் பாங்கிகள் ஏற்படுத்தவேண்டும்.

13. 1904-ம் வருஷத்து கோவாபரேடிவ் க்ரெடிட் ஸங்கங்கள் ஆக்டு ஏற்பட்டது முதல் தேசத்தில் ஐக்யநாணயம் அடைந்திருக்கும் வ்ருத்தியைப்பற்றி இந்த கான்பரென்ஸ் ஸந்தோஷப்படுகிறது.

1912-ம் வருஷத்து கோவாபரேடிவ் ஸொஸைடி ஆக்டின்படி ஐக்யநாணயக்கொள்கைகளை அதிகமாக அனுஷ்டானத்துக் கொண்டு வரும்போது, கோவாபரேஷனில் திடமான அபிவ்ருத்தி ஏற்படுவதற்காக கவர்ன்மெண்டார் அதிக பண உதவியும், நிர்வாகத்துக்கு வேண்டிய ஸௌகர்யங்களும் கொடுக்கவேண்டும். படித்தவர்கள் விவஸாயத்தின் பலபகுதிகளுக்கும், கோவாபரேஷனின் உதவியினால் உண்டாகக்கூடிய சிறு கைத்தொழில்களுக்கும் கோவாபரேஷன் முறையை உபயோகப்படுத்த முயலவேண்டும்.

ஸர். டி. பலித்தின் நன்கொடை.

14. ஸர் தாரகநாத பலித் கல்கத்தா யூனிவர்ஸிடிக்கு திரளான பணம் நன்கொடையாகக் கொடுத்ததற்காக அவருக்கு இந்த கான்பரென்ஸ் நன்றி செலுத்துகிறது. அவர் செய்தது போலவே மற்றவர்களும் வித்யா விஷயமாய் பணவுதவி செய்வார்கள் என்று நம்புகிறது.

15. (a) கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் இந்திய கைத்தொழிலாளிகளை உத்ஸாகப் படுத்தி அவர்கள் செய்யும் ஸாமான்களை வாங்கி ஆதரிக்கவேண்டும்.

(b) டெக்னிகல், கைத்தொழில் கல்வி அபிவ்ருத்திக்காக ஜனங்கள் நிதிகள் ஏற்படுத்த வேண்டும்.

(c) முதலாளிகள் தேசத்தின் சுரங்கப் பொருளை உபயோகப்படுத்த ஒழுங்கான முயற்சிகள் செய்யவேண்டும்.

(d) நெசவுத்தொழிலையும்,சர்க்கரைசெய்யும் தொழிலையும் அபிவ்ருத்தி செய்வதற்கு இம்பீரியல் கவர்ன்மெண்டார் ஸஹாயம் செய்ய

வேண்டும். இந்தியாவில் செய்யப்படும் பருத்தி நூல், வஸ்த்ரம் இவைகளின்மேல் போடப்பட்டுள்ள எக்ஸைஸ் வரியைத் தள்ளிவிட வேண்டும்.

(e) இப்பொழுதுள்ள நிறைகளும் அளவுகளும் வித்யாஸமாயிருக்கிறபடியால், வ்யாபாரத்துக்கு ரொம்ப இடைஞ்சலாயிருக்கிறது. ஆகையால் ஷெ அளவு நிறைகளை ஒரே திட்டத்துக்குக் கொண்டு வருவது ரொம்ப நல்லது.

காான்பரேன்ஸ் உத்யோகஸ்தர்கள்.

16. இந்தியன் இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸுக்கு அடுத்தவருஷம், ராவ்பகதூர் ஆர். என். மதோல் காரை ஜெனரல் ஸெக்ரெடரியாகவும், மிஸ்டர் என். ஏ. ட்ரேவிட்டை ஆனரரி அஸிஸ்டெண்ட் ஸெக்ரெடரியாகவும், மிஸ்டர் எம். பி. ஸந்தை அஸிஸ்டெண்டை ஸெக்ரெடரியாகவும் நியமித்திருக்கிறது. இந்தக் கான்பரென்ஸ் வேலையை நடத்துவதற்கு 8000-ரூபாய் வேண்டும். அதற்கு ஜனங்கள் பண உதவி செய்யும்படியும் கேட்டுக் கொள்ளுகிறது.

கான்பரென்ஸ் வேலையில் ஜெனரல் ஸெக்ரெடரிக்கு உதவிசெய்யவும், ஜெனரல் ஸெக்ரெடரி கேட்கிற விஷயங்களுக்கு ஆலோசனை சொல்லவும், ஒவ்வொரு வருஷம் ஒருஸ்டாண்டிங் கமிட்டி நியமிக்கவேண்டும். 1913-ம் வருஷத்துக்கு ஸ்டாண்டிங் கமிட்டி மெம்பர்களாக பின்வருபவர்கள் நியமிக்கப் படுகிறார்கள்.

ஸர் ஆர். என். முகர்ஜி; லாலா ஹரிக்ருஷ்ணலால், மிஸ்டர் ஜே. சௌத்ரி, ஸர் வி. டி. தாகர்ஸே, மிஸ்டர் டி. இ. வாச்சா, ஆனரபில் மிஸ்டர் லலூபாய் ஸமால்தாஸ், திவான்பகதூர் பி. ராஜரத்ன முதலியார், டாக்டர் ஸதிஸ்சந்த்ரபானர்ஜி, மிஸ்டர் ஸி. ஒய். சிந்தாமணி, ராய்பூர்ணேந்து நாராயண ஸின்ஹாபகதூர், ஆனரபில் மிஸ்டர் எம். பி. தாதாபாய், ஆனரபில் பாபு க்ருஷ்ண ஸஹேற, ஆனரபில் ராவ்பகதூர் ஆர். என். மதோல்கார்.

---

## INPROVING BUSINESS.

### வ்யாபார விருத்தி.

ரெயில் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒரு சில்லரை வ்யாபாரி சுருட்டு, பழங்கள், முதலானவைகள் விற்றுக்கொண்டிருந்தான். அவன் தன் வ்யாபாரத்தை பெருக்கிக்கொள்வதற்கு செய்த யுக்திகளை சற்று கவனிப்போம். அவன் கடைக்குப் பக்கத்தில் இன்னும் நாலைந்து கடைகள் இருந்தன. பக்கத்துக் கடைகளைவிட தன் கடையில் ஜாஸ்தி வ்யாபாரம் ஆவதற்கு அவன் ஒரு யுக்தி தேடினன். அந்த ரெயில் ஸ்டேஷனுக்கு அநேகம் பேர் பைஸிகிளில் ஏறிவருவது வழக்கம். அவர்கள் பைஸிகிள் வைப்பதற்கு இடமில்லாமல் பணம்கொடுத்து ஒரு இடத்தில் வைத்து வந்தார்கள். அந்தக் கடைக்காரன் பைஸிகிள்களை தன் கடையின் பின்பக்கத்தில் பணமில்லாமல் சும்மா வைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டான். இவ்விதமாக அவர்களுடைய ஸ்நேகத்தை ஸம்பாதிக்கவே அவர்கள் சுருட்டு முதலானவைகள் இவனிடத்திலேயே வாங்கத் தலைப்பட்டார்கள். கொஞ்சகாலம் கழித்து பக்கத்தில் ஒரு சாராயக்கடை வைத்தான். குடிக்கும் அப்யாஸமுள்ள ஸ்நேகிதர்கள் அந்தக்கடையில் வாங்க ஆரம்பித்தார்கள். பிறகு அதற்குப்பக்கத்தில் டென்னிஸ் க்ரிக்கெட்டு முதலானவை விளையாடுவதற்கு வேண்டிய பாட் (கிட்டி) பந்து முதலான கருவிகளை விற்கும் கடை ஒன்று ஏற்படுத்தினன். அதற்குப் பக்கத்தில் பைஸிகிள் ஷாப்பு ஒன்று ஏற்படுத்தினன். இவ்விதமாக சிறுகச் சிறுக வ்யாபாரத்தை வ்ருத்தி செய்துவிட்டான்,

# STORY AND BIOGRAPHY

# கதையும் ஜீவ்ய சரித்ரமும்.

## RANI DURGAVATI.

BY

C. S. RAMASWAMI AIYAR.

## ராணி துர்க்காவதி.

மத்திய இந்தியாவில் குருமண்டலம் என்ற ஒரு இராஜ்ய மிருந்தது. ஹிமயபருவதம் முதல் சமுத்திரம் வரையில் டெல்லிச்சக்கரவர்த்திகளில்பேர்போன ஆக்பரின் ஆளுகையின் கீழிருந்தபொழுது குருமண்டலம் மாத்திரம் சுதந்திரம் பெற்றுச் சுய அரசாட்சியுடனிருந்தது. இன்னும் அதிசயிக்கத்தக்க தென்னவெனில் இந்தத் தைரியமும் பெருமையும் பொருந்திய இராஜ்யத்திற்கு அதிபதியாயிருந்தவர் ஒரு மாதரசியே.

துர்க்காவதி குருமண்டலத்துக்கு ராணியாக இருந்தாள். இவள் வட இந்தியாவில் கண்ணோஜூக்கு அரசனாக விளங்கின சந்தனன் என்பவருடைய செல்வக்குமாரத்தி. இவளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார். கல்வியும் தக்க ஆசாரியர்களைக்கொண்டு புகட்டிவைத்தார். இவளும் கல்வி கேள்விகளில் மகா புத்திசாலியெனப் பெயரெடுத்து யாவராலும் புகழப்பட்டாள். இவள் மகா அழகு பொருந்திய சுந்தரி. இவ்வித அழகும் புத்தியும் வாய்ந்த பெண்ணைப் பெற்ற தாய் தகப்பனுக்கு சந்தோஷத்திற்கு அளவுண்டோ? இப்பெண் இரத்தினத்திற்கு வயது 16 ஆனவுடன் இவள் தகப்பனார் இராஜ புதனத்தை ஆளும் அரசனுக்குமணம்புரிவிக்க எண்ணியிருந்தார். இச்சங்கதி துர்க்காவதிக்குத் தெரிந்தது. அவள் அவனை விவாகம்புரிய மனமொப்பவில்லை. இக்கன்னிகை குருமண்டல இராஜனைக் கண்டு நேசித்து அவனையே கணவனாக வரிக்கக் கருதியிருந்தாள். சிலகாலஞ் சென்றபின் இச்சுந்தரி குருமண்டல இராஜனாகிய துல்பத் என்பவனைத் தன் தகப்பனிடத்திற்கு வந்து, அவர் அநுமதி பெற்றுத் தன்னை மணம் புரிந்துகொண்டு போகும்படி அவனுக்குத் தெரிவித்தாள். துல்பத் மிகமகிழ்ந்து உடனே புறப்பட்டு வந்தான். துர்க்காவதியின் தகப்பனார் துல்பத்துக்குத் தன் செல்வக் குமாரத்தியை விவாகம் செய்துவைக்க இஷ்டப்படாமல்மறுதலித்துவிட்டார். துல்பத் சிறியவனாக இருந்தபோதிலும் வீரபராக்கிரமமுள்ளவன். ஒருகாரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமென்று எண்ணிவிட்டால் அதைப் பூராவாகச் செய்து வைப்பானே யொழிய மனந்தளர்ந்து பின்னிடையமாட்டான். சந்தனன் மனதை யறிந்த துல்பத் தன் சேனைகளைத் திரட்டிக்கொண்டு வந்து சந்தனனை எதிர்த்து அவனைக் கொல்லாமலும் அவனுக்குக் காயமொன்றும் படாமலிருக்கும்படியும் யுத்தஞ் செய்து அவனைத் தோற்கடித்து அவனுடைய அரியபுத்திரியை எடுத்துக் கொண்டு ஜயபேரிகையுடன் தன் தேசம்சென்று, விமரிசையுடன் அவளை மணம் புரிந்து கொண்டான்.

சிலகாலம் இவ்விருவரும் இல்லறவாழ்வைச் சுகமாகக் கழித்து வந்தார்கள். இவளுக்கு மிக்க அழகு பொருந்திய ஒரு ஆண்குழந்தை ஜனித்தது. அக்குழந்தைக்கு வீரநாராயணன் என நாமம் சூட்டிச் செய்ய வேண்டிய சடங்குகளை யெல்லாம் சரியாகச் செய்தார்கள். குழந்தையைச் சீராட்டி, தாராட்டி வளர்த்து வந்தாள். குழந்தையை வளர்ப்பதில் மிக்க ஜாக்கிரதையுள்ளவள். அதற்கு வேளாவேளையில் தக்க ஆகாரத்தைக் கொடுத்துப் பிணியொன்றும் அணுகாமல் பாதுகாத்து வருவாள். தாய்தந்தையர்கள் குழந்தையினுடைய மழலைச்சொற்களைக்கேட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிவார்கள். குழந்தையே தங்கள் ஆஸ்தி யென்று எண்ணுவார்களே யொழிய தங்களுக்கிருக்கும் ஆஸ்தியைக்கண்டு பெருமை பாராட்டமாட்டார்கள். இவர்களுக்கு அக்குழந்தையினிடத்தில் அவ்வளவு பிரியமிருந்தது. மேலும் மனைவியும் புருடனும் ஒத்து வாழ்ந்தார்கள்.ராணி துர்க்காவதி ஒருவருக்கும் மனம் கோணாமல் நடந்துவந்தாள். புருடன் சொல்லுக்கு மீறிநடக்கமாட்டாள். புருடனும் தன்மனைவி சொல்லுக்கு விரோதமாக நடவான். மனைவியும் புருடனும் இவ்விதம் மனமொத்து வாழ்ந்து வருவதைக்கண்டு ஜனங்கள் சந்தோஷப்படமாட்டார்களா ? அவ்விதத் தம்பதிகளை வாழ்த்தமாட்டார்களா? அப்படி யல்லவா தற்காலத்தி லுள்ளவர்களு மிருக்கவேண்டும். அப்படிக்கின்றி பெண்வீட்டாரிடம் புருஷன் எவ்வளவு பணம் அபகரிக்கலாமோ அவ்வளவையும் பெற முயலுகிறான். இதனால் மனைவிக்கும் புருடனுக்கும் மனஸ்

தாபங்களிருந்து வருகின்றன. சிலசமயம் மனைவியை அடிக்கிறான், சில சமயம் மனைவியுடன் கோபங்கொள்ளுகிறான். மனைவியைத் தன் மாமியார் மாமனார் கூட்டிக்கொண்டு தங்கள் ஊருக்குப்போனால், பின்னிட்டு அவர்களுக்குக் கடிதம் எழுதாமலும் தன் மனைவியின் யோகக்ஷேமங்களை விசாரியாமலுமிருக்கும் சில சற்றறிந்த புண்ணியவான்களுமுண்டு. அப்படிக்கின்றி தம்பதிகள் மனமொத்துச் சண்டை சச்சரவுகளின்றி இல்லறத்தை நடத்த முயல்வதே விசேஷமானது. ராணி துர்க்காவதியும், துல்பத் இராஜனும் தங்கள் குழந்தையினிடத்தில் அதிக பிரியமாயிருந்த போதிலும் தங்கள் இராஜ்யத்தையும், பிரஜைகளையும் மறக்கவில்லை. அவர்களுக்குச் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்து இராஜ்யத்தை நீதி தவறாமல் ஆண்டுவந்தார்கள். குழந்தைக்கு மூன்றாவது வயது வந்ததும் துல்பத் மரணமடைந்தான்.

மகா பதிவிரதா சிரோமணியாகிய ராணி துர்க்காவதியின்விசனத்திற்கும் துக்கத்திற்கும் கேட்கவேண்டுமோ ? அவள்பட்ட துயரத்திற் களவில்லை. அப்படியே ஜனங்களெல்லாரும் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். ஐயோ! நமது காருண்ய மகாராஜன் போய்விட்டானே என்பார்கள். ஸ்திரீகள் அருந்ததியையொத்த நமதுர்க்காவதிக்கு வைதவ்வியம் உண்டாக வேண்டுமோ என்று சொல்லி முறையிடுவார்கள். இவ்விதம் அவ்விராஜ்ய முழுமையும் விசனமே குடிகொண்டிருந்தது.

இப்படியிருந்தும் துர்க்காவதி தன் குழந்தையின் நிமித்தமும் தன் இராஜ்யத்தைப் பாதுகாப்பதின் பொருட்டும் தனது விசனத்தினின்றும் துக்கத்தினின்றும் விலகியிருக்கவேண்டி யிருந்தது. துர்க்காவதி தன் சிறு குழந்தைக்குப் பதிலாகத்தானே இராஜ்ய பாரத்தை வகித்து, வெளிக்குத் தன் துக்கத்தையும் விசனத்தையும் காண்பிக்காமல் அரசுபுரிய ஆரம்பித்தாள். என்ன வெளிக்குத் தன் முகத்தில் விசனக்குறியைக் காண்பிக்காமலிருந்தும் மனதுக்குள் விசனமும் துக்கமும் பொங்கிக்கொண்டே யிருந்தன. தனக்கு ஒழிவிருக்கும்வேளையில் அரண்மனைக்குள் தனது மனதுக்கிசைந்த அன்புள்ள கணவனைப்பற்றி நினைந்துகொண்டு புலம்புவாள். கண்ணீர் தாரைதாரையாகச் சொரிவாள். ஆயினும் தனது மேன்மையான கணவனைப் போலவே இராஜ்யத்தைச் சாமார்த்தியமாயும் நீதி தவறாமலும் ஆண்டுவந்தாள். தனது கணவனால் தனக்கு விடப்பட்ட கடமைகளைப் பூராவாக யாவருக்கும் சந்தோஷமும் திருப்தியுமுண்டாகும்படி கொஞ்சங்கூடப் பிசகாமல் செலுத்திவந்தாள். சூழ்ச்சியுடன் தன் இராஜ்யத்தின் சுதந்தரத்தை நிலைநாட்டி வந்தாள். கீர்த்திபெற்ற ஆக்பருடைய சேனைகளால் அடிக்கடி வளைக்கப்பட்டுத் தாக்கப்பட்டு வந்தபொழுதெல்லாம் தனது கணவன் செய்த மாதிரி தைரியத்தைக் கைசோரவிடாமல் பெருமை பொருந்தியிருந்தாள். எல்லாரும் இவ்விராணியின் அரசாட்சியைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்துவார்கள். சிலர் ஒருபெண்ணின் அரசாட்சி எவ்வளவு சிறப்பாக விளங்குகிற தென்பார்கள். சிலர் அவர்களுக்கு ஒரு முக்கியகுறை, கணவனையிழந்த துர்ப்பாக்கியம் ஒன்றிருக்கிறதே தவிர வேறு என்னவிருக்கிறது ? அவள் மகாலக்ஷுமியே என்பார்கள். ஸ்திரீகள் அவளைப் போற்றிக்கொண்டும், அவள் குழந்தை நீடித்து ஜீவித்திருக்கவேண்டுமென்றும் சதா கடவுளைப் பிரார்த்தித்து வந்தார்கள். பெரியோர், சிறியோர், ஆண், பெண், குழந்தை முதலியவர்களும் கஷ்டமின்றி இராஜ்யத்தில் வசித்துக்கொண்டு ராணியாரை வாழ்த்திக்கொண்டே வந்தார்கள். "பெண்ணுக்கும் பொன்னுக்கும் தோற்பு உண்டா ?" என்பதற்கு இணங்க ஜனங்கள் இவளுக்கு இவளுடைய நற்குணங்களை ஆபரணங்களாக அமைத்து இவள் அழகையும் குணாதிசயங்களையும் கண்டு களித்திருப்பார்கள்.

இந்தச் சிறிய இராஜ்யத்தின் மீது படையெடுக்க, மத்திய இந்தியாவுக்கு டெல்ஹிச் சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்ட கவர்னர்களில் ஒவ்வொருவரும் தங்கள் சக்கரவர்த்தியினிடமிருந்து உத்திரவு பெற மனுசெய்து கொண்டு வந்தார்கள். ஆனால் ஆக்பர் சுலபமாய் உத்திரவு கொடுக்கவில்லை. அவருக்கு நீதியுடனும் பராக்கிரமத்துடனும் ஆளுபவர்களைக் கண்டு மெச்சும் குணமுண்டு; அந்தச் சிறிய இராஜ்யத்தின் ராணியாரின் கீர்த்தியைப் பற்றிச் செவ்வனே அறிந்திருந்தார். ஜனங்கள் அவ்வரசியைத் தங்கள் தாயாரென மதித்து வந்தார்கள். அவ்விராணியும் உண்மையாகவே தாயாராகத் தானிருந்தாள். தன் இராஜ்யமுழுதும் குளங்களை வெட்டிவைத்தாள். அநேக இடங்களில் சத்திரம் சாவடிகளையும் கட்டிவைத்தாள். அநேக கோயில்களையும் ஸ்தாபனம் செய்தாள். சத்திரங்களில் ஏழை

களுக்கு அன்னமிட்டு வரும்படியும் ஏற்பாடு செய்தாள். பாடசாலைகளை ஸ்தாபித்தாள். ஜனங்களுக்கு இன்னும் செய்யவேண்டிய நன்மைகளை யெல்லாம் குறைவின்றிச் செய்து வந்தாள். அக்காலத்தில் வெகு நன்ருக நீதிவழுவாமல் இந்தியாவில் ஆளப்பட்டு வந்தது குருமண்டலம் ஒன்றுதான். இத்தேசம் நீர்வளம் நிலவளம் உடையதாய் வெகு செழுமை பொருந்தியிருந்தது. எங்கு பார்த்தாலும் வயல்களில் பொன்போன்ற தானியங்கள் விளைந்துகொண்டிருந்தன. தோட்டம் தோப்புகளும் எங்கு பார்த்தாலும் ஏராளமாயுண்டு. வியாபாரமும் செழித்தோங்கிற்று. கைத்தொழில் உன்னத ஸ்திதியிலிருந்தது. ஜனங்களும் ஆதரித்து வந்தார்கள். ஜனங்கள் ஐசுவரியவான்களாயும், சந்துஷ்டியாயும் சௌக்கியமாயும் ஜீவித்து வந்தார்கள். இராணியும் தமது பிரஜைகள் எப்பொழுதும் சுகமாயும், திருப்தியாயுமிருக்க அநேக நற்காரியங்களைச செய்துவந்தாள். இவ்வித நற்குணங்களமைந்த ராணியாரைப் பிரஜைகள் தாயாராக வகித்தும், மதித்தும் வந்தது நியாயந் தானே. அவ்விராணியார் தெய்வமாகக் கொண்டாடப்படவேண்டியதும் அவசியமே.

ராணி குழந்தை பீர்நாராயணனைக் கவனித்து அவனுக்குக் கல்வியும் தக்க உபாத்தியாயர்களைக்கொண்டு புகட்டி வந்தாள். அவன் யுத்தப் பயிற்சியிலும் கூடப் பழகிவந்தான். சிறிய குழந்தையாயிருந்தும் அற்புதச்செயல்களையெல்லாம் தீவிரமாய்ச் செய்வான். அம்பு எய்வதில் மகா சமர்த்தன். படிப்பதிலும் சுறுசுறுப்பும் தெளிவான புத்தியுமுள்ளவன். நமது இராணி தன் பிள்ளையை அதிக கவனமாகக் கவனித்து வந்தாள். அப்பொழுது பீர் நாராயணனுக்கு வயது 12 தான். இவ்வயதிலேயே இவ்வித சாமர்த்தியங்களோடு விளங்கினன் சற்குணவதியின் புத்திரன்.

இச்சமயத்தில் அசப்கான் என்றவன் மத்திய இந்தியாவில் கவர்னராக இருந்தான். இவனுக்கு எப்படியாவது குருமண்டலத்தை ஜெயித்து டெல்ஹி இராஜ்யத்துடன் சேர்க்கவேண்டுமென்ற ஆவல் மிகுதியாக இருந்தது. டெல்ஹிச் சக்கரவர்த்தியாகிய ஆக்பரண்டையணுகி "மகா சக்கரவர்த்தியே; குருமண்டலத்தை எதிர்த்துத் தங்கள் இராஜ்யத்துடன் சேர்ப்பிக்க எனக்கு ஆவலிருக்கிறது. தயவுகூர்ந்து உத்திரவு அளிக்குமாறு அதிக வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்" என மிக மரியாதையாக விண்ணப்பஞ் செய்துகொண்டான். ஆக்பர் குருமண்டலத்தின்மீது படை எடுத்து அதை ஜெயிக்க மனமொப்பாமல் பல சமயங்களில் உத்திரவு கொடுக்க மறுதலித்திருந்தபோதிலும், இச்சமயம் எக்காரணத்தினலோ அசப்கான் வேண்டுகோளுக்கிணங்கி உத்திரவளித்துவிட்டார். அசப்கான் மிக மகிழ்ச்சியுடன் அவர் ஆக்ஞைப்படி திரண்ட சேனையை யிட்டுக்கொண்டு குற்றமற்ற ராணியின் கைவசமாயிருக்கிற குருமண்டல இராஜ்யத்தை அபகரிக்கப் புறப்பட்டுவிட்டான். துர்க்காவதி அக்பர் சேனைக்குச் சமமா? அல்லது அச்சேனையோடு யுத்தம்புரியப் பல பராக்கிரமமுண்டா? முன்னமேயே ஆக்பர் அத்தேசத்தை அபகரிக்கவேண்டுமென்று எண்ணியிருந்தால் அவர் அவ்விதமே செய்திருப்பார். இவளுடைய இராஜ்யமோ மகா சிறியது. சிறியதாயிருந்தும் ஜனங்களும் இராணியும் ஒத்து வாழ்ந்து வந்தார்கள். உட்கலகம் சண்டை முதலியவைகளின்றித் தேசம் செழித்துக் கீர்த்திபெற்று விளங்கிற்று. துர்க்காவதி ஆக்பர் சேனையை எதிர்த்துத் தோற்கடித்துத் தன் தேசத்தின் சுதந்தரத்தைக் காப்பாற்ற எள்ளளவேனும் சமயம் வாய்க்குமோ ? அப்படிச் செய்தால் அது பைத்தியக்காரயோசனையன்ருே ? வராதது வருமோ. சக்தியில்லாதபோது சக்தி எங்கிருந்து வரும். இவ்வளவு கஷ்டங்களிருந்தும் ராணி துர்க்காவதி மனேதைரியத்தை விடவில்லை. தன் தேசத்தின் சுதந்தரத்தை நிலைநாட்டக் கருதினள். தன் உயிர்போனலும் போகட்டும், தன் அருமையான தேசத்தின் சுதந்தரம் அழியக்கூடாதென்று தீர்மானங்கொண்டாள். அவ்விதமின்றித் தன் உயிர் போய்த் தன் தேசம் விரோதியின் கையில் தெய்வச் செயலால் அகப்பட்டுக்கொண்டால் நாமென்ன செய்வது, நமது கடமையை நாம் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றிச் செய்வோமென எண்ணி யுத்தத்திற்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்தாள்.

ராணி துர்க்காவதி தன்னுல்சேகரிக்கக்கூடிய மனிதர்களைச் சேர்க்க முயன்ருள். அவ்விதம் செய்ததில் 800 குதிரை வீரர்களையும், இரண்டாயிரம் யானை வீரர்களையும் சேர்த்தாள். எல்லா ஜனங்களும் ஒருங்கே சேர்ந்து தங்கள் இராணியாருக்கு உதவிபுரிய

முன்வந்து ராணுவத்தில் தாங்களே சேர்ந்து கொண்டார்கள். ராணி துர்க்காவதி சேனைத்தலைமையை வகித்தபொழுது ஜனங்களுக்குண்டான உற்சாகத்திற்கு அளவில்லை. அவர்களெல்லாரும் ஒரே மனதுடையவராய்த் தங்கள் தேசத்தின் சுதந்தரத்தை நிலை நாட்டுவதின் பொருட்டு எதிரிகளை எதிர்த்துத் துவம்சம் செய்யத் தீர்மானங்கொண்டார்கள். மேலும் தங்கள் உயிர்போகும் வரையில் தங்கள் மனதைரியமுள்ள ராணியாரின் கட்டளைப்படி சண்டை செய்வதாகவும் சொன்னார்கள்.

அசப்கான் பலமானசேனை குருமண்டலத்திலிருந்து திரளாகவருமென்று கனவிலும் நினைத்தவனல்ல. வெகு சுலபமாகக் குருமண்டலத்தை ஜயித்து விடலாமென்று எண்ணி அவ்வூராருடன் யுத்தம் செய்ய 5000 குதிரைப் படைகளுடன் வந்தான். மேலும் சண்டை செய்யவேண்டிய வேலையே இராதென்றும் அத்தேசத்துக்கு அதிபதி ஒரு பெண் தானே என்றும் எண்ணியிருந்தான். ஆனால் இவன் தன் சேனைகளுடன் குருமண்டலத்தை நோக்கிச் சமீபத்தில் வந்ததும் தான் முன் நினைத்திருந்த தப்பெண்ணத்தைப் பற்றி விசனமுற்றான். அவன் ராணியாரைச்சாதாரணமான பலமற்ற ஸ்திரீ என்று எண்ணியிருந்தது நேர் விரோதமாக இருந்தது.ராணியார் சேனைத்தலைமையை வகித்திருப்பதைக் கண்ட அசப்கான் அவள் பலபராட்டியம் பொருந்திய ராணி என்று அறிந்து மனதில் திகிலடைந்தான். ராணியாரோ வீரா வேசத்துடன் இவனுடன் யுத்தம் செய்ய வந்திருக்கிறாள். இவனுக்கு இப்பொழுது யுத்தம் செய்யாமல் திரும்பிப் போக முடியவில்லை. ஒருவேளை அவ்விதம் செய்தால் தனது கீர்த்தி அழிந்து அபகீர்த்தி யுண்டாகு மல்லவா ? ஆனது பற்றி ராணியாரின் சேனையை முதலில் தாக்கும்படி தனது சேனைகளுக்குஉத்திரவளித்தான்.

யுத்தம் வெகு மும்மரமாகக் குருமண்டலத்தில் கோட்டைக்கு வெளிப்புறத்தில் இருதிறத்தாருக்கும் நடந்தது. அக்பர் சக்கிரவர்த்தியின் சேனைகளைச் சின்னபின்னமாக்கி முழு ஜயத்தை ராணியடைந்தாள். அசப்கான் தோற்கடிக்கப்பட்டபின் மனம் தடுமாறிச் செத்தேன் பிழைத்தேன் எனத்தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் தப்பி ஓடிவிட்டான்.

துர்க்காவதியின் சேனைகள் மிக்ககுதூகலத்துடன் ஜயபேரிகையை முழக்கிக்கொண்டு தங்கள் இராஜ்யத்திற்குச் சென்றார்கள். ஜனங்களெல்லாரும் மிகச் சந்தோஷப்பட்டார்கள். ஆனால் ராணி துர்க்காவதி மட்டும் சிறிதேனும் ஜயம் கொண்டதைப்பற்றிச் சந்தோஷமாக எண்ணவில்லை. ஏனெனில் மறுபடியும் இன்னொரு சமயம் அவர்கள் பெருத்தசேனைகளுடன் வந்து தன் இராஜ்யத்தை எதிர்ப்பார்களென்று தெரியும். மேலும் டெல்லிச் சக்கிரவர்த்தியே குருமண்டலத்தை எதிர்த்துத் தன் இராஜ்யங்களுடன் சேர்க்க எண்ணி இருக்கையில் நாம் இச்சிறு சேனைகளைக் கொண்டு அவர்களுடன் சமமாக யுத்தம்செய்து ஜயமடைய முடியாதென்பதும் துர்க்காவதிக்கு நன்றாகத் தெரியும். இதனால்தான் அவள் மனது சந்தோஷப்படாமல் விசனத்தில் மூழ்கியிருந்தது. கடவுள் தான் நமக்கு உதவி புரியவேண்டும் என்று எண்ணியிருந்தாள்.

இராணி மனதில் விசனத்துடன் தம் இராஜ்யத்தை ஒன்றரைவருடம் ஆண்டுவந்தாள். இதற்குள் அவள் எண்ணிய வண்ணம் டெல்ஹியிலிருந்து பெருத்த சேனை அசப்கான் சேனைக்கு உதவியாகவும், முதலில் நேரிட்ட அவமானத்தைப் போக்கித் தங்கள் வீரபராக்கிரமத்தை உலகத்தாருக்குத் தெரிவிக்கவும் அனுப்பப்பட்டது. மேலும் அத்தேசத்தை ஜெயித்து அவ்விராணியைச் சிம்மாசனத்தினின்று விலக்கிக் குருமண்டலத்தை டெல்ஹி இராஜ்யத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கும்படி அசப்கானுக்குக் கண்டிப்பான உத்திரவு சக்கிரவர்த்தியினிடமிருந்து வந்தது. அசப்கான் உடனே திரண்ட சேனைகளுடன் மனதில் திகிலடைந்து குரு மண்டல் ராணியுடன் யுத்தம் செய்யச் சென்றானே யொழிய தனக்கு ஜயம் உண்டாகுமென்ற எண்ணத்துடன் செல்லவில்லை. அசப்கான் கோட்டைக்குச் சமீபத்தில் வந்து யுத்தத்திற்கு ஆயத்தமாய்த் தான் வந்திருப்பதாய் ராணியாருக்குத் தெரிவித்தான்.

துர்க்காவதி இச்சங்கதியைத் தூதனால் அறிந்து தன் தேசத்தைச் சத்துருவினிடம் ஒப்புவிக்காமல் பாதுகாக்கத் தீர்மானம் செய்தாள். தான் உயிரோடிருக்குமளவும் தனது சிறிய இராஜ்பத்தை ஒருவரும் அபகரித்துக் கொள்ளக்கூடாது. அவ்விதம் செய்யாமலிருக்க என்னென்ன பந்தோபஸ்துகள் செய்யவேண்டுமோ அவைகளை யெல்லாம் செய்து முடித்தாள். பின்பு தானும் முன்போலவே பெருத்துத்திரண்ட

சேனைகளைச் சேகரித்துக் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு யுத்தத்திற்குப் புறப்பட்டுவிட்டாள். இவ்விராணி கோட்டைக்கு வெளியில் திராளன சேனைகளுடன் வரும்பொழுதே, குதிரைகளின் காலடி சப்தத்தையும், சேனைகளின் கோஷத்தையும் கேட்டு எண்ணாத எண்ணங்களையெல்லாம் எண்ணி, இத்தடவையும் தோல்வி சம்பவிக்குமோ வென்று பயந்திருந்தான். முன்காலத்தில் ராஜஸ்திரீகள் மற்றவர்களுக்கு ஒரு சிம்மம்போல் தென்பட்டார்கள். மகா வீரபராக்கிரமமுடையவர்களாயு மிருந்தார்கள். குரு மண்டலத்து ஜனங்களும், மகமதியர்களும் வெகு நேரம் யுத்தம் புரிந்தார்கள். துர்க்காவதி இன்னும் சிலகாலம் இராஜ்யத்தைஆண்டுவரவேண்டியிருந்தது. ஆனதால் அவளுக்கு ஜெயமுண்டானது. அசப்கான் தோல்வியடைந்து தன் ஒழுங்கீனமாயுள்ள சேனைகளுடன் யுத்தகளத்தினின்று நீங்கி ஓடிப்போய்விட்டான். சிதறுண்ட சேனைகளில் சிறுபான்மையோர் மாத்திரம் திரும்பி டெல்ஹிக்குச் சென்றார்கள். துர்க்காவதி தனது சேனைகளுடன் தன் இராஜ்யத்திற்குச் சென்று எப்போதும் போல் அரசு புரிந்தாள். இப்பொழுதும் மனக்கிலேச முடையவளா யிருந்தாள். தெய்வமே துணை எனக் கடவுளை நம்பித் தன்காரியத்தில் கண்ணும் கருத்துமா யிருந்தாள்.

குருமண்டலத்தைச் சேனை பலத்தால் ஜெயிப்பது சுலபமல்ல வென்பதைக் கண்டுகொண்ட கபடமுள்ள அசப்கான் இராஜாங்க முறைப்படி தந்திரோ பாயத்தால் தான் ஏதாவது அக்கிரமமான வழிகளில் பிரவேசித்து ஜயத்தையடைய் முயலவேண்டு மென்று யோசித்தான். ஒற்றர்களைக் கூப்பிட்டு லஞ்சம் வாங்கும் மனதுடையவர்களுக்கு லஞ்சம் ஏராளமாக கொடுக்கும்படியும் ஜனங்களுக்குள் ஒற்றுமை யில்லாமல் செய்யவும், தேசத்தில் சண்டை சச்சரவுகளுண்டாகும்படி செய்யவும், இன்னும் பற்பல கெட்ட வழிகளையும் நம்பிக்கைத் துரோகமான உபாயங்களையும் பிரயோகித்து வரும்படியும் அவளுடைய சேனையை ஒழுங்கீனமாகச் செய்துவரும் படியும் அனுப்பினன். கெட்ட எண்ணமுள்ள அசப்கான் ஒற்றர்கள் அவ்விதமே திரவியம் பெற்று அவ்விராஜ்யத்திற்குச் சென்று ஒருவன் செய்யத் துணியாத அக்கிரமங்களை யெல்லாம் செய்து அவ்வூரில் கலகம், ஒற்றுமையின்மை முதலியவைகளைப் பூராவாகச் செய்துவிட்டு வந்தார்கள்.

ஒரு வருடமானபின் மூன்றும் தடவை அசப்கான் குரு மண்டலத்தை நோக்கிப் படையெடுக்கப் புறப்பட்டான். ராணி துர்க்காவதி தனது பரிதாபமான இராஜ்யத்திற்கு அழிவு காலம் வந்துவிட்டதென்பதை யறிந்துகொண்டாள். தனதுஇராணுவத்திலும், ஜனங்களுக்குள்ளும் ஐக்கிய மில்லாததையும் கண்டாள். தேசமெங்கும் உட்கலகம் பரவியிருப்பதையும் பார்த்தாள். மனந்தளர்ந்தாள், ஜயத்தைப் பற்றிய நம்பிக்கை யற்றிருந்தாள். தனது இராஜ்யத்தின் விதி இப்படித் தானிருக்குமென்று தெரிந்துகொண்டாள். ஆயினும் அசப்கானுக்குக் கீழ்படியவில்லை. ஜயமுண்டாகும் என்ற நம்பிக்கை கிஞ்சித்தேனுமில்லை என்பதைத் தெளிவாய் அறிந்திருந்தும் தன்தேசத்தை உயிர்போகும் வரை காப்பாற்ற நிச்சயங்கொண்டாள். தன்னால் சேகரிக்கக் கூடிய சேனைகளைச்சேகரித்துக் கொண்டு பதினன்கு வயதுள்ள தனது அருமையான புத்திரனுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டுவிட்டாள். யுத்தவீரர்கள் மன உறுதியும் ராணியினிடத்தில் மகா விசுவாசமும், தேசபக்தியு முள்ளவர்களா யிருந்தார்கள். யுத்த களத்திற்கு ராணியார் முதலிலும் மற்றவர்கள் பின்னால் வரிசைக் கிரமமாகவும் வந்து சேர்ந்தார்கள்.

யுத்தம் வெகு மும்மரமாய் இருதிறத்தாருக்கும் காலை முதல் சாயங்காலம் வரையில் நடந்தது. இருதிறத்தாரும் வீராவேசத்துடன் யுத்தம் செய்தார்கள். துர்க்காவதியின் செல்வக் குமாரன் படுகாயப்பட்டுக் குதிரையினின்று கீழேவிழுவதைக் கண்டாள். உடனே ஜனங்கள் வந்து அக்குமாரனைப் பத்திரமாய் எடுத்துக்கொண்டு போனார்கள். அவன் மரணவஸ்தையி லிருந்தான். ராணியாருடைய வேலையாட்கள் ஓடிவந்து மரணதருவாயிலிருக்கும் குமாரனை வந்து பார்க்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுது தைரியம்பொருந்திய ராணியார், "நான் இப்பொழுது போக முடியாது, எனது வீரர்கள் என்னைக் காணவிடில் மனந்தளர்ந்து போவார்கள். அவன் மரித்தால் வீரசுவர்க்கமடைவான், அவனை நாம் சுவர்க்கலோகத்தில் காண்போம்" என்று மனோ விகாரமின்றியும், புலம்பாமலும் பதிலுரைத்தாள். யுத்தம் இன்னும் அதிபயங்கரமாக நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது ராணியாரின் ஒரு கண்ணில் அம்புபாய்ந்தது. அவள் அதை எடுக்கப் பிரயத்தனப்பட்டாள். ஆனால்

முடியவில்லை, ஆயினும் அதை ஒருபொருட்டாக எண்ணிப் பின் அடையவுமில்லை; யுத்தம் செய்யாமற் போகவுமில்லை. ஒரு பெருமை பொருந்திய பெண்சிங்கத்தைப்போல் யுத்தம்புரிந்தாள். என்னபுரிந்துமென்ன? அவள் தேகமுழுவதும் படுகாயங்கள் உண்டாயின. அவள் இராணுவத்தில் பலர் கொல்லப்பட்டார்கள். சிலர் மாத்திரம் ராணியாரை எதிரிகள் கைதிசெய்யா வண்ணம் பாதுகாத்து வந்தார்கள். தான் தப்பித்துப் போக இடமில்லாததையும் கண்டாள். சீக்கிரம் தன்னைச் சிறைப்படுத்திவிடுவார்களோ என எண்ணினள். ஒரு தடவை யுத்தகளத்தைச் சுற்றிப் பார்த்தாள். தனது குருமண்டலத்தைப் பார்த்து துக்கித்தாள். தான் செய்யப் போவதைப் பிறர் அறிவதற்குமுன் தற்கொலை புரிந்துகொண்டாள். ஒரு சேனைத் தலைவன், மகம்மதியர்கள் ராணியாரைக்கைதொட்டு அசுத்தப்படுத்துவதற்கு முன், அவளை தூக்கிக்கொண்டு போய் அவளுக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்தான். அசப்கான் ஜயமடைந்து குருமண்டலத்தை டெல்ஹி இராஜ்யத்துடன் சேர்த்துவிட்டான்.

ஒரு ஸ்திரீ தன் தேசத்திற்காகத் தன் குமாரன் உயிரைக்கொடுத்ததும் தவிரத் தன் உயிரையும் தத்தம் செய்தாள். இவ்வித வீரமுள்ள மாதர்கள் அநேகர் முன்காலத்திலிருந்தார்கள்.

## SELECTIONS.
## விசேஷத்திரட்டு.

### CULTIVATION AND USES OF ALOES.
### ரெயில் கற்றாழை விருத்திசெய்தலும், அதன் உபயோகமும்.

இந்த ராஜதானியின் தென் ஜில்லாக்களில் பல விடங்களில் கிருஷிகர் தங்கள் நிலங்களுக்கு வேலி போட சப்பாத்துக்கள்ளியை உபயோகிக்கிறார்கள். இதை உபயோகிப்பதற்குக் காரணம் யாதெனில் அவ்விடங்களில் தருசுகளிலும், புறம்போக்குகளிலும், மற்றும் பட்டா நிலங்களிலும் சப்பாத்துக்கள்ளி தானாக முளைத்து எங்கும் படர்ந்து எளிதில் அகப்படக்கூடியதா யிருப்பதும், சாலைகளின் விளிம்புகளில் இக்கள்ளியை இழுத்துப் போட்டுவிட்டால் குடியானவர்களின் கவனம் சற்றும் இல்லாமல் அது தானாகவே வேரூன்றிப் படர்ந்து பலத்த வேலியாகி விடுகிறதென்பதுமே. ஆனால் இவ்வேலி எளிதில் உண்டாகக்கூடிய போதிலும், இதிலிருந்து குடியானவர்களுக்கு உண்டாகும் இடையூறுகள் பல உள. அவைகளில் முக்கியமானவை :—

1. இக்கள்ளி வேரூன்றிவிட்டால் சாகுபடி நிலங்களிலெல்லாம் பரவி சாகுபடி செய்யக்கூடிய விஸ்தீரணத்தைக் குறைக்கிறது.

2. இவற்றின் பழங்களைத் தின்று பறவைகள் புலங்களின் பல விடங்களிலும் எச்சமிடுவதால் இச்செடிகள் அங்கங்கே முளைத்து வ்ருத்தியாகி கிருஷிகருக்குக் கவலையை உண்டாக்குகிறது.

3. இச்செடி வளர்ந்து பலத்த புதராகப்படர்ந்தால் பாம்பு முதலிய விஷ ஜெந்துக்கள் அவைகளில் எக்காலத்திலும் தங்கியிருப்பதால் குடிய னவர்களுக்கும் அவர்களுடைய ஆடுமாடுகளுக்கும் அச்சத்திற்குக் காரணமாயிருக்கிறது.

4. இச்செடி ஒரு இடத்தில் வேரூன்றிப் படர்ந்து விட்டால் பிறகு இதைப் பூண்டற அழிப்பது கடினமான காரியம்.

5. இச்செடியிலிருந்து குடியானவர்களுக்கு விசேஷமாய் உபயோகப்படக்கூடிய பொருள் யாதும் உண்டாகிறதில்லை; ஆகையால் இச்செடியால் அவர்களுக்கு லாபம் ஒன்றுமில்லை.

ஆனால் நமது நாட்டில் பலவிடங்களில் புகைவண்டிப் பாதைக்கு இருபக்கங்களிலும் வேலியாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் ரெயில் கற்றாழை (Agave Vera-cruz) என்பது சப்பாத்துக்கள்ளி முளைக்கக்கூடிய எல்லா இடங்களிலும் உண்டாகக்கூடிய செடியாக இருப்பதால் மிக உபயோகமானது. இது புலங்களுக்கு வேலியாக உபயோகப்படுவதல்லாமல் மற்றொன்றும் பயிர் செய்யாத தருசு பூமிகளில் மாரிகாலத்துக்கு முன் உழுது நாற்புறமும் இரண்டு கஜத்துக்கொரு கன்றாக நட்டுவிட்டால் மழையினால் வேரூன்றி வ்ருத்தியாகிவிடும்.

கோயமுத்தூர், சேலம் முதலிய ஜில்லாக்களின் பல விடங்களில் ரெயில் கற்றாழை முக்கியமான வேலிகளில் ஒன்று. இது குடியானவர்களுக்கு

மிக்க சிரமமின்றி வளர்ந்து நல்ல வேலியாவது மல்லாமல் விவசாயத்துக்கு ஏற்ற நல்ல கெட்டியான நாரைத் தருவதால் குடியானவர்கள் இதை விரும்பு கிறார்கள். கோயமுத்தூருக்கு அருகில் புலத்தின் விளிம்புகளிலும் ரஸ்தாவின் இருபக்கங்களிலும் இதைக் காணலாம். ஊர்களுக்குச் சமீபத்தில் பயிர் செய்யப்படாத சில வெளிகளில் ஆங்காங்கு குத்து குத்தாக வளர்ந்திருக்கக் காணலாம். ஆனால் கோய முத்தூர் ஜில்லாவிலும் அதற்குச் சுற்றுப்பக்கத்திலும் இதையே ஒரு பயிராக வளர்த்ததாகக் காணப்பட வில்லை.

நிலம்:—ரெயில் கற்றாழை, சரளை, மிசிரம், களி மண் முதலிய எல்லா நிலங்களிலும் பயிராகிறது; ஆனால் அது நன்றாய் தண்ணீர் வடியக்கூடிய மணல் கலந்த சரளை நிலத்தில் மிக நன்றாய் விருத்தியாகும்.

நடுதல்:—2 வருஷத்துக்கு மேற்பட்ட செடி களின் காலில் உண்டாகும் கன்றுகளை எடுத்து புலத் தின் விளிம்புகளில் நடுவார்கள். மழைகாலத்துக்கு முன் நட்டுவிட்டால் கன்றுகளுக்குத் தண்ணீர் விட வேண்டிய அவசியமில்லை. அவை தானாகவே வேரூன்றி வளரும்.

நட்ட 5, 6 வருஷத்திற்குப் பிறகு செடிகளின் அடிப்பாகத்திலிருக்கும் முதிர்ந்த இலைகளை அறுவா ளால் அறுத்து நார் எடுக்க உபயோகிப்பார்கள். இலை களின் நுனிகளைச் சுமார் 6 அங்குல நீளத்திற்கு அறு த்து அதிலிருக்கும் முள்ளுடன் எறிந்துவிடுவார்கள். இலைகளின் இரண்டு விளிம்புகளிலும் இருக்கும் முள்ளைக் கத்தியால் சிரைத்துவிட்டு, ஒவ்வொரு இலையையும் 8, 10, துண்டாக நீட்டுப்போக்கில், அடியிலிருந்து முக்காலே அரைக்கால் வரிசைக்கு மேல் கிழித்து விடுவார்கள்; ஆனால் ஒவ்வொரு இலை யின் துண்டுகளும் நுனியில் மாத்திரம் ஒன்றாகச் சேர்ந்தே யிருக்கும். பிறகு இத்துண்டுகளைத் தண் ணீரில் ஊரப்போட்டாவது, அல்லது கத்தியால் சீவியாவது நார் எடுப்பார்கள்.

ஊறவைத்து நார் எடுத்தல்:—மேற்சொன்னபடி கிழித்த துண்டுகளைச் சிறு கட்டுகளாகக் கட்டி ஒரு தொட்டியில் தண்ணீர் விட்டாவது அல்லது கிணற் றிலாவது ஊறப்போட்டு மேலே கல்லைவைப்பார்கள். 5, 6, தினத்திற்குப் பிறகு கல்லை எடுத்துவிட்டால் சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கபடி 10 முதல் 20 தினத்திற்குள் இலையின் சதை அழுகி நாற்றமெடுத்து கட்டுகள் தண்ணீரில் மிதந்துவிடும். அப்போது கட்டுகளை தண்ணீருக்கு வெளியே கொண்டுவந்து, ஒவ்வொரு பிடிநாராக எடுத்து நன்றாய்ப் பிழிந்தால் சதை நீங்கிப்போகும். பிறகு அதை அழுக்குப்போக நன்றாக உதறி வெயிலில் காயப்போடுவார்கள். பிழிந்து நார் எடுக்கக்கூடிய பதம் வருவதற்குச் சற்று முன் எடுத்தால் இலைகளை ஒவ்வொரு பிடி யாக எடுத்து மெதுவாக வேஷ்டி தோய்ப்பது போல் காலின்மேல் தோய்க்க சதை நீங்கிப்போம். பிறகு அதை வெய்யிலில் காயவைத்து சிக்கெடுத்து கட்டுக்கட்டி வைப்பார்கள்.

சீவி நார் எடுத்தல்.—இலைகளை நீட்டுப்போக்கில் கிழித்து இரண்டொருநாள் வெயிலில் சற்று வதக்கி ஒவ்வொன்றாக ஒரு பலகையின்மேல் வைத்து ஒரு கல்லாலாவது கொட்டாபுளியலா வது அடிக்க சதை பஞ்சு பஞ்சாய் நசுங்கிப் போய் விடும்; பிறகு இத்துண்டுகளை நீட்டுப் போக்கில் ஒரு பலகையின் மேல் வைத்து துண்டின் ஒரு நுனியை கால் விரல்களால் அழுத்திக்கொண்டு ஒரு மூங்கிற் சத்தியால் சதையை அழுத்திச் சீவ சதை நாரினின்று நீங்கிப்போம். பிறகு நாரை உலர வைப்பார்கள்.

ஊரவைத்து நார் எடுப்பதில் நார் அதிகமாய் அகப்படுவது மல்லாமல், நீளமாகவுமிருக்கும்; ஆனால் இது சற்று சறுநிறமாயிருக்கும். இலை சற்று அதி கமாய் அழுகிப்போய்விட்டால் நாரின் பலம் குறை ந்துபோய்விடுகிறது. ஆனால் குடியானவர்கள் சாதாரணமாய் நார் எடுப்பது இப்படித்தான். இந்த நாரைக் கவலைக்கயிறு வால்கயிறு முதலிய கயிறு கள் திரிப்பதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். கோயம்புத்தூருக்கு அருகில் கவலைக்கு உபயோ கிக்கும் கயிர்கள் 30, 35 முழ நீளமுள்ளவைக ளாயும் $5\frac{1}{2}$, 6 அங்குல சுற்றளவும், 1, $1\frac{1}{4}$ மணங்கு எடையும் உள்ளவைகளாயு மிருக்கின்றன. இந் தக் கயிறு 2 வருஷம் வரை கவலை அடிப்பதற்கு உதவுகிறது. பிறகு இது கவலைக்குப் பலனற்றுப் போவதால் வேறு ஏதாவது பண்ணை வேலைக்குப் பின்னும் சுமார் 1 வருஷம் உபயோகிக்கிறார்கள். சில சமயங்களில் கயிறு திரிப்பதற்கு முந்தி துணி யை 1, $1\frac{1}{4}$ அங்குல அகலமுள்ள துண்டுகளாகக்

கிழித்து ஆமணக்கு எண்ணெயில் தோய்த்து பிறிகளுக்கு இடையே வைத்து கயிறு திரித்து விடுகிறார்கள். அந்தக் கயிற்றின் மேலும் அடிக்கடி ஆமணக்கு எண்ணெய் தடவுவார்கள். இப்படிச் செய்வதால் கயிறு 3, 3½ வருஷம் கவலை வேலைக்கு உதவும்.

சீவி யெடுக்கும் நார் அழுகப்போட்டு எடுக்கும் நாரிலும் மிக வெண்மையாயும் கெட்டியாயுமிருக்கும். அலுவலில்லாத நாள்களில் ஏழை ஜனங்கள் பல விடங்களிலுள்ள கற்றாழைச் செடியிலிருந்து இலைகளை வெட்டிக்கொண்டு வந்து சீவி நார் எடுக்கிறார்கள். சீவி எடுக்கும் நார் சற்றுக் குட்டையாயிருக்கும். இந்நாரை லப்பை மகமதியர் கோரைப்பாய் பின்ன விலைக்கு வாங்குகிறார்கள். இந்நார் ஐரோப்பாக் கண்டத்திற்கு அனுப்பப்பட்டு அங்கே நயமான புருசுகள் செய்ய உபயோகப் படுகிறது.

கோயமுத்தூருக்குச் சுற்றுப்பக்கங்களில் கற்றாழையை அழுக வைத்து எடுத்த நார் சில்லரையில் மணங்கு 2½, 3-ரூபாய்க்கு விற்கிறது. சீவி எடுத்த நாருக்குக் கிரயம் அதிகம். ஐரோப்பாவில் தற்காலம் இந்நாருக்கு விலை இறங்கிப் போய்விட்டபடியாலும் இந்நார் எடுப்பதற்கு இந்நாட்டில் கூலி அதிகப்பட்டுவிட்டபடியாலும் இப்போது இது ஏற்றுமதி செய்யப்படுகிறதில்லை. பூர்வத்தில் கோயமுத்தூரில், மெஸர்ஸ் பீயர்ஸ் லெஸ்லி கம்பெனியார் அநேகம் வண்டி கற்றாழை நாரை விலைக்கு வாங்கி ரேவுகளின் மார்க்கமாய் ஏற்றுமதி செய்து வந்தார்கள். ஆனால் தற்காலத்திய விலைக்கு அது அன்னிய தேசங்களில் லாபகரமாய் விற்பனை ஆகாததால் அவர்கள் இவ்யாபாரத்தை விட்டுவிட்டார்கள். ஆகையால் கோயமுத்தூருக்குச் சுற்றுப்பக்கத்தில் உண்டாகும் நார் எல்லாம் அங்கங்கேதான் செலவாகிறது.

பஞ்சகாலத்தில் ஏழை ஜனங்கள் தண்டுவிடாத கற்றாழையின் குருத்தையும் அதற்குப் பக்கத்தில் உள்ள இலைகளையும் வெட்டிவிட்டு வேருக்கு நடுவேயிருக்கும் சோற்றை 1½-அல்லது 2-முழத்துக்குக் குடைந்து எடுத்து நன்றாகக் கத்தியால் கொத்தி வேகவைத்து உண்டு உயிர்பிழைக்கிறார்கள். ரெயில் கற்றாழை சோறு உருசி உள்ளதாகவும், ஆனால் சற்று தொண்டையைப் பிய்த்துக்கொண்டும் இருக்கும். சோறு வேகும்போது சற்றுப் புளித்த தண்ணீர் சேர்த்து வேகவைத்தால் பிய்க்கும் குணம் நீங்கிவிடுகிறது. தாது வருஷத்தின் பஞ்சத்தில் தாராபுரம், உடுமலைப்பேட்டை முதலிய தாலுகாக்களில் அநேகர் இதன் சோற்றையே தின்று பலநாள் ஜீவித்ததாக சொல்லப்படுகிறது.—கிருஷிகன்.

---

## CO-OPERATIVE SOCIETIES FOR DEPRESSED CLASSES.

### கீழ்ஜாதிக்கு ஐக்கிய சங்கங்கள்.

கீழ்ஜாதிக்கு ஐக்ய ஸங்கங்கள் ஏற்பாடு செய்ய வேண்டியதைப்பற்றி நீடாமங்கலம் மிஸ்டர் ஸேதுராமய்யர் தஞ்சை ஜில்லா கோ-ஆபரேடிவ் கான்பரென்ஸில் படித்த ஒரு வ்யாஸத்தை கீழே ப்ரசுரிக்கிறோம்.

தஞ்சாவூர் ஜில்லாவில் பண்ணை ஆள்கள் அக்கரைச் சீமைக்குப் போய்விடுவதால் ஜனசங்கியை குறைந்து போயிருப்பதுமன்றி, விவஸாயத்திற்கும், கைத்தொழில்களுக்கும் நிரம்ப இடைஞ்சல் உண்டாயிருப்பது எல்லாருக்கும் பிரத்தியட்சம். ராஜதந்திர விஷயமாய் இக்குறையை நிவர்த்தி பண்ணலாமோவென்றால், இது வரையில் அசாத்தியமாய் முடிந்திருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லா சபை மூலமாகவும் ஜில்லா கான்பரென்ஸுகள் மூலமாகவும் இக்குறையை கவர்ன்மெண்டாருக்கு தெரியப்படுத்தியும், அக்கரைச் சீமைக்குப் போகும் ஆள்களுடைய முயற்சியில் நாங்கள் பிரவேசிக்கமாட்டோம் என்கிறார்கள். ஹிஸ் எக்ஸலன்ஸி சென்னைக்கவர்னர் ஸர் ஆர்தர் லாலி தஞ்சாவூரில் விஜயம் செய்திருந்தபோது ஸ்ரீமான் திவான்பகதூர் ரகுநாதராயர் அவர்களின் யோசனைகளையும், புத்திமதிகளையும் வாங்கிக்கொண்டு நான் ஒரு டெபுடேஷனுடன் பலகுறைகளைத் தெரிவித்தபோது இது ஒரு முக்கியமான விஷயம்.

இந்தப் பண்ணை ஆள்களுக்குக் கூலிவிபரங்களையும், சுப சோபனங்களுக்கு மிராசுதார் உதவுகிறதையும், அவர்கள் அட்வான்சாக சோந்தை வாங்கிக்கொண்டு கண்டிராக்டின்பேரில் வேலை செய்வதையும் எடுத்துச் சொல்லிக் கடைசியாகப் பண்ணை ஆள்கள் கங்காணிகளால் ஏமாற்றிக்கொண்டுப் போகப்படுமுன், தாசில்தார்களிட மிருந்தாவது அல்லது எமிகிரேஷன் ஆபிஸரிட மிருந்தாவது நாங்கள் மிராசுதார்

களுக்கு யாதொரு கடனும் கொடுக்கவேண்டிய தில்லை என்று ஒரு சர்டிபிகேட் வாங்கின பிற்பாடு அக்கரைச் சீமைக்குப் போகலாமென்று ஏற்பாடு பண்ணினல் நிரம்ப அனுகூலமாயிருக்குமென்று சொன்னேன். அதற்கு குடிகளுடைய சுபற்சியில் நாங்கள் பிரவேசிக்கமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள்.

ஆகையால் ஐக்கிய சித்தாந்தத்தின்படி இந்தக் குறையை நிவர்த்திபண்ண ஏதாவது மார்க்கம் உண்டோவென்று யோசிப்போம். ஆளைத்தேடி ஆஸ்தியைத்தேடு என்பது பழமொழி. இப்படி ஆள்களை அக்கரைச் சீமைக்குப் போகும்படி விட்டுவிட்டால் நாம் ஆஸ்தியை வைத்திருப்பதினல் என்ன பிரயோசனம். ஆகையால் அவர்களுடைய சுகதுக்கத்தை நமது சுகதுக்கம்போல் கருதி அவர்களுடைய நிலைமையை சீர்திருத்தம் செய்து உயர்த்துவது நமது கடமையாக இருக்கிறது.

தஞ்சை ஜில்லாவில் பண்ணை ஆள்களின் கூலி விபரங்களை விசாரிப்போம். விலைவாசி உயர்ந்து விற்பதுபோல் கூலி விகிதங்களும் உயர்ந்திருக்கின்றன. இப்படிக் கூலி விகிதங்கள் உயர்ந்திருந்தும் அவர்கள் நிலைமை உயரவில்லையே என்பது துக்கமாயிருக்கிறது. இதற்குக் காரணம் அவர்கள் நடை, உடைபாவனையே. ஆனிமாதம் 15-தேதிமுதல் புரட்டாசிமாதம் 15-தேதி வரையில் ஆள் 1-க்கு 3-படி, (அதாவது பட்டணம் படி $1\frac{1}{2}$) வீதமும், பள்ளத்தி 1-க்கு இரண்டுபடி வீதமும், அரை ஆள் 1-க்கு ஒருபடி வீதமும் தினம் நெல்லிலேயே கூலி கொடுக்கப்படுகின்றன. ஒரு ஏர்மாடு அதாவது 5-ஏக்கர் நன்செய் சாகுபடிக்கு ஒரு ஆள், ஒரு பள்ளத்தி, ஒரு அரை ஆள் வேண்டும். இவர்களுக்கு இந்த சாகுபடி காலத்தில் மாதம் 1-க்கு சுமார் நாலுகலம் அல்லது பத்து ரூபாய் கூலி கிடைக்கிறது. அறுப்பு, போரடி காலங்களில் அதாவது தைமாதம் 15 - ந்தேதி முதல் சித்திரை மாதம் 15-ந்தேதிவரையில் மாதம் 1-க்கு அறுப்புக்கூலி போரடிக்கூலியில் சுமார் 6 கலம் அல்லது ரூபாய் பதினைந்து கிடைக்கும் இதைத் தவிர கண்டு முதலில் 100 கலத்துக்கு 8 கலமும் சிறுவாட்டில் 5 கலமும் அதாவது ஒரு ஏர்மாட்டுக்கு ஆள், பள்ளத்தி, அரையாள் இவர்களுக்கு இனமாக மொத்த வரும்படியில் 15 கலமும் கிடைக்கும். இதைத் தவிர வாய்க்கால் வெட்டு, எரு அடிக்கிற வகைராவுக்கு ஒரு மாதம் வேலை இருக்கிறதென்று வைத்துக்கொண்டு, அதற்குச் செலவு மூன்றுகலம் சுமாராகும். அதாவது ஒரு ஏர்மாடு நன்செய் சாகுபடி செய்தால் ஒரு ஆள் ஒரு பள்ளத்தி, ஒரு அரை ஆளுக்கு சுமார் நடவும்போது மூன்று மாதமும் அறுப்பு போரடிக்கு மூன்று மாதமும் சில்லரை எரு, வெட்டுக்கு ஒரு மாதமும் ஆகச் சுமார் ஏழு மாதம் தான் வேலை இருக்கிறது. இந்த ஏழு மாதகாலத்தில் ஒரு ஆள் ஒரு பள்ளத்தி, ஒரு அரையாளுடைய சம்பாத்தியம் 48 கலம். அதாவது ரூபாய் 120 ஆகிறது. அதாவது ஒரு ஆள் ஒரு பள்ளத்தி, ஒரு அறையாள் இவர்களுக்கு மாதம் 1-க்கு ரூபா 10 கிடைக்கிறது. இந்த அகவிலை ஜாஸ்தி காலத்தில் ஒரு ஆள் ஒரு பள்ளத்தி ஒரு அரை ஆளுக்கு ரூபாய் 10 போதாது. 7 மாதத்திற்குப் போதுமான ஜீவனமும் பாக்கி 5-மாதத்திற்குக் கடன் வாங்கியும் அல்லது இதற்குக் கூலிவேலை செய்தும் பிழைக்கவேண்டி யிருக்கிறது. புரட்டாசி மாதம் 15 தேதிக்கு மேல் 3 மரக்கால் சோளத்திற்கு ஒரு கலம் கொடுப்பதாகக் கடன் வாங்கியும் கலம் குருவை நெல்லுக்கு 3 மரக்கால் வட்டியுடன் சம்பா நெல்லில் அளக்கிறதாகவும் கடன் வாங்குகிறர்கள். அறுப்பு காலம் வரையில் இப்படி ஜாஸ்தி வட்டிக்குக் கடன் வாங்கியும், கூலி வேலை செய்தும் ஆறு, குளம், வாய்க்கால், வயல்களில் மீன் பிடித்தும் காலக்ஷேபம் செய்கிறர்கள். அறுப்புக் கடைசியில் இவர்களுக்கு மொத்தமாக வரும்படி வருகிற 15 கலநெல்லையும் ஜாஸ்தி நெல் வட்டிக்கடனைத் தீர்க்க சரியாகப் போய்விடுகிறது. அறுப்புக் காலத்தில் ஜாஸ்தி வரும்படி எல்லாம் அங்காடிக்கும், கள்ளுக்கடையிலேயும் தொலைத்து விடுகிறர்கள். அறுப்பு முடிந்த பிறகும் பட்டினி கிடக்கிறர்கள். அக்காலத்தில் தான் கங்காணிகள் ஏமாற்றி அக்கரைச் சீமைக்கு அழைத்துக் கொண்டு போகிறர்கள். அங்காடி என்பது ஒரு பறத்தெருவிலேயோ, அல்லது பள்ளத் தெருவிலேயோ, ரூபா 3 அல்லது 4 தெருவார்களுக்குக்கொடுத்து விட்டு ஒரு பல சரக்குக்கடை ஏற்படுத்திக்கொண்டு அறுப்பு காலத்தில் தெருவார்கள் அந்தக் கடையிலேயே சாமான்கள் வாங்க வேணுமென்று நிபந்தனை ஏற்படுத்தி, சாமான்களை விற்று வருவது. இப்படி முன்னதாக ரூபா 3, 4 அட்வா

ன்சு வாங்கிக்கொண்டு பள்ளத்தெரு, பறத்தெரு ஆள்கள் அங்காடிக்காரியிடமோ அல்லது அங்காடிக்காரரிடமோ சாமான்கள் வாங்குகிறார்கள். அங்காடிக் கடையில் பயற்றஞ்சுண்டல், மொச்சைச் சுண்டல், தோசை, முறுக்கு, வெற்றிலை, பாக்கு, பழம், புகையிலை, மிளகாய், உப்பு, புளி, மண் எண்ணெய், நல்லெணெய், கிழங்கு முதலிய சாமான்கள் விற்கப்படும். முன் அட்வான்சு 3-4 ரூபாய்கொடுத்ததைக்கொண்டு, பண்ணை ஆட்களுக்கு ஜாஸ்திவரும்படி காலமானதால் தலைகால் தெரியாமலிருக்கும்போது பொட்டைப் படிகளைக்கொண்டும் இதமானவார்த்தைகளினாலேயும் கலநெல் சாமான்களுக்கு 2-கலநெல் வசூல் செய்து விடுகிறார்கள். ஆகையால் பண்ணை ஆட்கள் வேலை இல்லாதகாலத்தில் ஜாஸ்தி வட்டிக்குக்கடன் வாங்கியும் இந்த அங்காடி மோசத்தாலும் நிரம்ப வறியராய் விடுகிறார்கள். இதுவுமன்றி, பெரிய மீன் சின்ன மீனைத் தின்பதுபோல் உள்ள கூலியைக் கூலி மரக்காலால் குறைத்துக் கொடுத்தும் கண்டு முதலைச் சரியாகச் சொல்லாமல் மொத்த வரும்படியில்குறைவு பண்ணியும் இப்படிச் சில மிராசுதார்கள் தங்கள் சொந்த லாபத்தைக் கருதி கூலி ஆட்கள் வயிற்றில் அடிக்கிறார்கள். இவ்விதமாய்க் கள்ளுக்கடை, அங்காடி, கடன்காரன், சில மிராசுதார்களுடைய கொடுமை முதலியவைகளால் கஷ்டப்படும்போது கங்காணியின் மோச வார்த்தையாகிய மோகன அஸ்திரத்தில் மயங்கி அக்கரைச் சீமைக்குப்போய் விடுகிறார்கள். இப்படிப் போகாமலிருக்க மிராசுதார்கள் செய்யவேண்டிய கடமை யாதெனில்;

(1) பண்ணை ஆட்களுடைய சுக துக்கத்தைத் தங்கள் சுக துக்கம்போல் கருதிப் பட்சமாய் அவர்களை நடத்தவேண்டும்.

(2) ஒவ்வொரு கிராமத்துக்கும் தானியபாங்கு ஏற்படுத்திக்கொண்டு வாய்க்கால் வெட்டு முதலிய குடி மராமத்து வேலைகளை வேலை இல்லாத காலத்தில் செய்யும்படி சொல்லி உதவியும், ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் மிராசுதார்களே தங்கள் ஆட்களுக்கு ஜாமீன்தார்களாக யிருந்து தானிய பாங்கியிலிருந்து சுவல்ப வட்டிக்குக் கடன் வாங்கிக் கொடுத்தும், அறுப்பு காலத்தில் மொத்த வரும்படியிலிருந்து கடனை உளவடைத்தும், பண்ணை ஆட்களைக் கடன்காரர்கள் ஹிம்சையிலிருந்து மீட்கலாம். இப்படி உபகாரம் செய்வதால் பாங்கியை நிர்வகிப்பவர்கள் கூலி ஆள்களின் கள்குடியை மட்டுப்படுத்தவும் கூடும்.

இதன்னியில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சிறு ஸ்டோர் அல்லது பலசரக்குக் கடை ஏற்படுத்திக் கொண்டு பள்ளர் பறயர்களுக்கு அவசியமான சாமான்களை நல்ல படியைக் கொண்டும் உண்மையான நிறையைக்கொண்டும் பிரயாசைக்கும் ஆள் மாகாணத்திற்கும் ஏற்படுகிற செலவை மாத்திரம் லாபமாக வைத்துக்கொண்டு சாமான்களை உள்ளது உள்ளபடியே விற்றுவந்தால் இந்த ஏழைகள் நஷ்டப்படாமல் சுகப்படுவார்கள். அங்காடிக் காரியினுடைய வலையில் அகப்பட்டுக் கொள்ளாமல் மீட்கப்படுவார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலேயும் பள்ள ஆள், பறையாள், அம்பலகார ஆள், மிராசுதார்கள் சேர்ந்த தானிய பாங்கியும் ஒரு சிறு ஸ்டோரும் நமது ஜில்லாவில் ஏற்பட்டால் நம்முடைய ஏழைச் சகோதரர்கள் இந்த இரண்டு ஸ்தாபனங்களின் நன்மையால் கங்காணியின் மோகனஸ்திரத்தில் அகப்படாமல் இங்கேயே சுகமாக வாழ்வார்கள்.

கூலி ஆட்கள் ஏற்றுமதியும் குறையும். மிராசுதார்கள்கூலி மரக்கால் உபயோகப்படுத்தவும் கூடாது. மொத்த வரும்படியாகிய கண்டு முதலை மறைத்து அவர்கள் வரும்படியைச் குறைக்கவும் கூடாது. அவர்கள் க்ஷேமமாக இருந்தால்தான் நாம் க்ஷேமமாக இருக்கலாம் என்று ஒவ்வொரு கிராமத்திலும் தான்னிய பாங்கும் ஸ்டோரும் ஏற்படுத்தி உற்சாகமாக வேலை செய்ய வேணுமென்பது என் பிரார்த்தனை.

பள்ளர், பறையர், அம்பலகார ஆள் முதலியவர்களுக்கு தானியபாங்கியும், ஸ்டோர் முதலிய ஐக்கியச் சங்கங்கள் நடத்த வேணுமென்று நான் சொன்னது போல் குறவர்ஜாதியிலும் ஒரு ஐக்கியச் சங்கம் ஏற்படுத்துவது அவசியம் என்று எனக்குத் தோன்றுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் நெல்குத்தும் யந்திர சாலைகள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. ஸர். எஸ். சுப்பிரமணியய்யர் அவர்களின் மில், சவுத் இந்தியன் இண்டஸ்திரியல் மில் நீடாமங்கலத்தில் 1. திருவாரூரில் 1. ஆக இந்த மூன்று மில்லுகளுக்கும் மாதம் 1000 மூங்கில் கூடை வீதம் வருஷம் 1-க்கு 12000, கூடைகள் வாங்குகின்றன. அதாவது சுமார் 1500 ரூபாய்க்குக் கூடை வாங்குகிறார்கள். ஒரு

குறவன் எட்டு அணுவுக்கு ஒரு மூங்கில் வாங்கி ஒரு மூங்கிலிலிருந்து எட்டுக் கூடைசெய்து ஒரு ரூபாய்க்கு விற்கிறான். அவன் லாபம் அடைவது எட்டு அணா. இதில் 4 அணுவுக்குக் குடித்து விடுகிறான். குடி ஜாஸ்தியால் வறுமையுற்றுக் கஷ்டப்படுகிறான். இந்த வருமையால் திருட்டும் அவர்களிடம் குடிகொண்டிருக்கிறது. குடியையும், திருட்டையும் அடக்க இந்த 3 மில்காரர்களும் 10 குறவர்கள் சேர்ந்த ஒரு ஐக்கியச்சங்கம் ஏற்படுத்தி மூங்கிலை வாங்கிக்கொடுத்துக் கூடைகளைப் பின்னச் சொல்லி அவர்களுக்குக் கூலி கொடுத்து வந்தால் ஒவ்வொரு குறவனுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 10 கிடைத்து ஒழுங்காய் ஜீவனம் செய்து வருவான். இப்படி ஒழுங்கான ஜீவனம் ஏற்பட்டு விட்டால் குறவனிடம் குடிகொண்டிருக்கும் திருட்டுத் தொழிலானது அடங்கி விடும்.

ஆகையால் இவ்விதச் சங்கங்கள் ஏற்படுவதால் ஒரு ஏழை முன்னுக்குவருவது மன்னியில் அவன் குணத்திலும் ஒழுங்குள்ளவனுகிறான். இப்படியே இதர மில்லுக்காரர்களும் கூடைகள் பின்னக் குறவர்கள் சங்கம் ஏற்படுத்தினுல் தாங்களும் சுகப்படுவதுமன்னியில் இவ்வேழைகளும் முன்னுக்கு வந்து விடுவார்கள். இந்த ஏழை ஜாதிகளில் கட்டுப்பாடு ஜாஸ்தி, ஆகையால் ஐக்கியச் சங்கங்கள் ஏற்படுத்தினுல் இவர்களிடம் அவைகள் வேரூன்றி விடும்.

---

## SEED PADDY.

## விதை நெல்,

கமத்தொழிற் சங்கத்தின் (இலங்கை விவசாய சங்கம்) கூட்டத்திலே விதை நெல்லைப்பற்றிவெளிப்படுத்தப்பட்ட வைகளின் சாரத்தை நம்மூர்க் கமத்தொழிலாளர் கவனிச்க விரும்பி இவ்விடந்தருகிறோம்.

எத்தானியமும் நற்பலன் கொடுப்பதற்கு மூன்று சாதனங்கள் அவசியமானவைகள். பண்படுத்தப்பட்ட நிலம், செழிப்பாகும் பசளை, தெரிவான விதைமுதல் என்பவைகளே அம்மூன்று சாதனங்களாம். விதை முதலைத்தெரிவு செய்வதின் விசேஷம் சுதேச கமக்காருக்கு மிகுதிபற்றி வெளிப்படாததாயிருக்கின்றது. அது அதிக செலவு, பிரயாசத்தோடு சம்பந்தப்பட்டதல்ல. இலங்கையிலே ஏழு இலட்ச ஏக்கர் நிலம் நெற்செய்கை நிலமாயிருக்கின்றது. அந்தத் தொழின் முயற்சியானது முதல், முயற்சி அறிவு குன்றிய சிறியோர்கையில் முற்று மகப்பட்டதாயிருக்கின்றது. இத்தீவிலுள்ளவர்களின் ஜீவிய ஆதாரப் பொருட்களுட் சிரேஷ்டம் பெற்றதாகவும், அதன்விலை வேலையாட்களின் சம்பள நிலையைக் குறிக்குஞ் சாதாரண அளவுப்பிரமாணமாயிருப்பதினுலும் நெற்செய்கை இத்தீவின் மிகவும் விசேஷமான தானியமாகவிருக்கின்றது. விதைத்தானியந் தெரிவுசெய்வதில் நான்கு குறிப்புகள் கவனிக்கப்படல்வேண்டும்.

1. தானியத்தைத் பிரித்தெடுத்தல். பதரையும் தூசியையுந் தூற்றித்தள்ளுவதே கமக்காரருக்குப் பெரியகாரியமாய்க் காணப்படுகின்றது. அவ்வகையாகத் தூற்றிப் பாரமான தானியத்தையும் பாரங்குறைந்த தானியத்தையும் பிரித்தெடுக்கவேண்டும். ஜப்பானியர் உப்புக்கலவையின் மூலம் விதைத்தானியத்தைப் பிரித்தெடுப்பார்கள். அம்முறை மைசூரிலே கையாளப்பட்டுப் பலன்கொடுப்பதாய் அறியப்பட்டிருக்கின்றது. இரண்டு சேர் நீரில் ஒரு சேர் உப்பைக்கரைத்து விதைத்தானியத்தை அதற்குட் போட்டு மிதப்பவைகளைத்தள்ளி அடைபவைகளையெடுத்து விதைப்பதால் இருமடிவேளாண்மை பலனுகின்றது.

2. விதைத்தானிய மாற்றுதல்.—இது இலங்கையில் வழங்கப்படு மொன்றல்ல. அமெரிக்கா முதலான வேறு இடங்களிலே ஒரு பகுதியின் விதைத்தானியத்தை வேறு இடத்தில் விதைப்பதால் அதிக விளைவு பெறப்படுகின்றது. இடம் மாறுதலாற் புதிய நிலமும் நிலைமைகளும், பலனுமுண்டாகின்றன. இதைக் கமக்காரர் தனித்தனியே செய்வது பிரயாசமாதலாற் சங்கமே செய்தல் வேண்டும்.

3. காலநிலை பேதங்களுக் கிணங்கத்தக்க விதைத் தானிய இனங்கள் தெரிதல்.—இலங்கையிலே இருநூறு இனமான தானியவகைகளுண்டு. சில வரட்சியிலும், சில நீர்க் குளிர்ச்சியிலும், சில அறுபது நாளிலும், சில ஆறுமாசங்களிலும், சில அதிகமாகவும், சில குறைவாகவும் பலன் கொடுப்பன. சாதாரணதானியம் நீர்கசிவுள்ள நிலத்தில் நான்குமாத எல்லையிற் பலன் கொடுப்பதா யிருக்கின்றது. மழை நயம், நீர்பாய்ச்சல், பசளை, செய்கையாகிய இவைகள் குன்றும் பகுதிகளில் அறுபது நாட் தானியத்தை

தைத்து அற்பசொற்ப விளைவை அறுப்பதே கூடி தாயிருக்கின்றது. நிலைமைகளை நிதானித்து வண்டிய இனத்தை அவ்வவ்விடங்களில் விதைத் ப் பலனடைய நோக்குவதேயன்றி வசதியையுஞ் செலவு பிரயாசக் குறைவுகளையும் மாத்திரம் நோக்கிக் கமத்தொழில் நடத்துவதால் புத்திசேடும் நஷ்டமுமா கும். சேறுடுதலும், சேற்றுழவு அல்லது ஈர உழ வும் அதிக பலன் கொடுப்பவைகளாகப் பலதேசக் கமக்காரர் கண்டிருக்கிறார்கள்.

4. நல்விளைவு, நோய் பிடியாமை, எந்த இடத்தி லும் செழிக்குந்தன்மையுடைய நல்லினத் தானியத் தைத் தெரிந்து செய்கை பண்ணல்.—இது சாஸ் திர சம்பந்த அறிவுடையோரால் நன்கு நடத்தப்படக் கூடியது. ஆயினும் எவர்களும் எளிதாய் கையா ளப்படக்கூடியது. உத்தம விளைவான தானியத் தைத் தெரிந்து விதைத்து அல்லது பதிபோட்டுப் பின் தனியே நட்டு ஒன்றாய் விளையுங் கதிர்களை விதைத்தானியமாகச் சேர்த்து விதைத்து வருவது அதிக பிரயோஜனமானது. அது ஒன்றரை வீத விளைவுகொடுக்கக்கூடியது. பதிபோட்டுப் பிடுங்கி நடுகிற பழக்கம் இதற்கு அதிகம் விரும்பப்படக்கூடி யது. பன்னிரு அங்குல இடைவெளிவிட்டு நடு வது நல்லது. பயிர் அதிக செழிப்புக்கொண்டு வளர்ந்து அதிக பலன் கொடாத விடத்திற் சற்றே நெருக்கமாக நடுவது வேண்டியதாகும்.—உதயதார கை.

## REVIEW OF THE PRESS

## பத்ரிகை ஆராய்ச்சி.

### HARIKISHEN LAL'S SUGGESTIONS.

### ஹரி க்ருஷ்ணலால் சொன்ன யோசனைகள்.

சென்ற வருஷம் டிஸம்பர் மாஸம் நடந்த இந்திய தொழிலாலோசனை ஸங்கத்தின் ப்ரெஸிடெண்டான லாலா ஹரிக்ருஷ்ணலால் என்பவர் தமது ப்ரஸங்கத் தில் சில யோசனைகள் சொன்னார். அவைகளை நமது பத்ரிகையில் சென்ற மாஸம் ப்ரசுரித்திருக்கி றோம். அவைகளைப் பற்றி சுதேசமித்திரன் பத்ரிகை பின்வருமாறு எழுதுகிறது.

"இந்த யோசனைகள் அனைத்தும் நல்ல யோசனை கள். ஆனாலும் அவைகளில் ஸ்வல்பந்தான் அனு போகத்தில் நிறைவேற்றக்கூடியன. தொழில் முன் னேற்றத்துக்கு இந்தியாவில் முதலவச்யம் மூலத னம் சேர்க்கப்பட்டுத் தொழிலில் உபயோகப்படுவது. பிள்ளைகளுக்குத் தொழிற்படிப்பு கிடைத்தாலும் படிப்புப் பெற்றவர்களுக்குத் தொழில்கள் கிடைக்கா தது முக்ய கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் தேச த்தில் முதலாளிகள் சேர்ந்து, ஐரோப்பிய முதலாளி களுடன் சேர்ந்தாவது, தொழில்கள் ஸ்தாபித்து நடத்தி அவைகளில் இந்திய சிறுவர்களை அமர்த்திப் பயிற்சி செய்விக்கவேண்டும். இதைப்பற்றி லாலா ஹரிகிருஷ்ணலால் பேச்சில் எதையும் காணோம். தொழிலாலோசனை ஸங்கத்திலாவது வேறு தனியாக வாவது தேசத்தில் மூலதனம் உள்ளவர்களைக் கூட்டி எங்கு எவ்விதமானதொழில்கள் ஸ்தாபிக்கலாமென்று யோசனை செய்யவேண்டும். ஆரம்பத்தில் ஐரோப் பிய முதலாளிகளுடைய ஒத்தாசையையும் ஐரோப் பிய உத்தியோகஸ்தர்களுடைய ஒத்தாசையையும் அவசியமான தொழில்களில் பெறவேண்டும்."

---

### TRIVADI PARISHAD.

### திருவாதி பரிஷத்து.

திருவாதி பரிஷத்தைப்பற்றி சுதேசமித்திரன் எழு துகையில், திருவையாற்றில் கூடின பண்டிதர்களில் அநேகர் திருத்தங்களுக்கு விரோதமாய் இப்பொழுது அபிப்ராயப்பட்டாலும், இந்தப் பண்டித ஸபை மாதிரி ப்ரதிவருஷமுமாவது அல்லது அடிக்கடியா வது ஸபைகூடி அவச்யமான ஆசாரங்களைப்பற்றி கவனிப்பார்களானால் சில வருஷங்களுக்குள் இந்த திருத்தங்கள் அவச்யமென்று அறிந்துகொள்வார்கள் என்கிறது. பண்டிதர்களுடைய அபிப்ராயம் எப்படி யிருந்தபோதிலும், திருத்தங்கள் நடந்துகொண்டே யிருக்கும்; அந்யதேசம் போவது நிற்காது; பெண்க ளுக்கு விவாக வயஸு உயர்ந்திருக்கிறது. இப்பொ ழுது இந்தியாவானது முன்போல் தனியான தேச மாயிராமல் மற்ற தேசங்களுடன் இந்தியாவுக்கு ஸம் பந்தம் நெருங்கி வருவதால் மற்ற தேசங்களைப்போல் இந்தியாவும் முன் செல்லமுயலும். இப்பொழுது இங் கிலாந்தில் மட்டும் 2000 இந்தியர்கள் இருக்கிறார்கள். மற்ற தேசங்களுக்கும் சென்றவர்கள் ரொம்பப்பேர்

இருக்கிறார்கள். ஆகையால் "இந்தப் பெரும் சம்பவத்தை யறிந்து பண்டிதர்கள் அதற்கொத்தபடி நடந்தாலன்றி அவர்கள் செல்வாக்கற்றுப் போவார்களென்பதை நிச்சயமாய் நம்பவேண்டும்". மேலும், ஆங்கிலம் கற்ற பண்டிதர்கள் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். திருவையாறு பரிஷத்தில் ஒரு பண்டிதர் ஸமூத்ரயாத்ரை செய்வதற்கு அனுகூலமாக சில ந்யாயங்கள் சொன்னதுபோல் தற்காலத் திருத்தங்களுக்கு ஸாதகமாகத் தர்க்கிக்கும் பண்டிதர்கள் இனி அதிகமாகலாம் என்று எழுதிவிட்டு பின்பு பண்டிதர்களுக்கு சில புத்திமதிகள் சொல்லுகிறது.

"ஹிந்து சமூகத்தில் பண்டிதர்கள் ஒரு பொருட்டான வகுப்பாகக் கருதப்படவேண்டுமானால் அவர்கள் ஆங்கிலங்கற்று முன்சென்று கொண்டிருக்கிறவர்களுடன் ஒத்துச் செல்லவேண்டும்." "பழைய காலத்துப் பண்டிதர்களும் மடாதிபதிகளும் சமூகத் தலைவர்களின் மதிப்பைப் பெற்றிருக்கவேண்டுமானால் அவர்கள் தங்களுடைய அபிப்ராயங்களை மாற்றி, புது நாகரீகத்துக்கு ஒத்தவாறு அபிப்ராயங்கள் கொள்வது அவச்யமாகும்."

இவ்வாறு சுதேசமித்திரன் எழுதியதைக் கண்டித்து ஒரு நிருபர் அப்பத்ரிகைக்கு எழுதியிருக்கிறார். அவர் பரிஷத்தின் நோக்கத்தைப் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

"இச்சீர்திருத்தங்களுக்கு வேத சாஸ்திரங்கள் சம்மதிக்கின்றனவா வென்பதை விமரிசிக்கவேண்டியே கமிட்டிமெம்பர்களால் பரிஷத் கூட்டப்பட்டதென்று எல்லோரும் நினைக்கிறார்கள். சீர்திருத்தங்காரர்களின் மனோபீஷ்டத்துக் கொத்தவாறே பரிஷத்தில் அபிப்ராயம் ஏற்படவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்ததென்று தோன்றவில்லை. இதை பத்திராதிபர் அறிவார்போலும்." பத்ரிகையில் பண்டிதர்களைத் தூஷித்தெழுதவது தகாதென்று கண்டித்துவிட்டு பண்டிதர்களுக்கு சில யோசனைகள் சொல்லுகிறார்.

"அந்தரங்கத்தில் பண்டிதர்கள் இச்சீர்திருத்தங்கள் அவசியம் என்று நினைக்கலாம். அதை வெளியிடவும் வெளியிடலாம். ஆனால் இப்பண்டிதர்களுக்கு நான் வற்புறுத்துவது ஒன்றுண்டு. ஆங்கிலங் கற்ற ஜனசமூகத் தலைவர்களென்று கருதப்படும் கனவான்களுக்குப் பயந்தாவது, அவர்களுடையவும் பரிஷத்து நடத்தும் பிரமுகர்களுடையவும் நன்கு மதிப்பைப் பெறவேண்டுமென்ற பேரவாவினாலாவது, பரிஷத் கூட்டிவைக்கும் பிரமுகர்களால் கிடைக்கக்கூடிய சம்பாவனை முதலிய லாபத்தைக் கருதியாவது, பத்திரிகைகளில் வெளியாகும் தூஷணைக்குப் பயந்தாவது வேத சாஸ்திரங்களி னர்த்தத்தை மாற்றிச் சொல்லாமல் செவ்வையாய் ஆராய்ச்சிசெய்து தங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி அபிப்பிராயங்களை வெளியிட வேண்டியது."

மேலும் பரிஷத்தில் "சீர்திருத்தங்களுக் கொத்தவாறு அபிப்ராயம் கொடாதவரை பரிஷத் கூட்டுவோர் நன்கு மதிக்கமாட்டார்கள் என்ற பயம் மேற்கொண்டு சில வித்வான்கள் திருவையாற்றுக்குப் போகவில்லை. மேலும் பரிஷத் நடக்கும் காலத்திலும் சில குரும்பர்கள் சீர்திருத்தங்கள் சாஸ்திர சம்மதமென்ற அபிப்பிராயங் கொடுப்பவர்களுக்கு மாத்திரம் தான் 200, 300, 400 ரூபா வீதம் பிரமுகர்கள் சம்பாவனை செய்வதாக கல்லல் செய்துவந்ததாயும் தெரியவருகிறது.

"இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பத்திராதிபர்களும் பரிஷத் பண்டிதர்களை ஆதரவு காட்டாமல் தூஷிப்பது மிகவும் விசனிக்கத்தக்கது." இப்படி நிருபர் எழுதியதற்கு 'சுதேசமித்திரன்' "பண்டிதர்களுக்கு அனுபோகமும் விசால புத்தியும் இல்லை. தேசத்தின் தேவைகள் இன்னவையென்று தெரியாது. அவர்கள் ஒத்தாசையிருந்தால் தேசத்தின் முன்னேற்றம் எளிதாகிவிடும். அதற்காக விசனப்பட்டு எழுதினோமே தவிர வேறில்லை" என்று பதில் எழுதுகிறது.

பரிஷத்து விஷயமாய் "திராவிடாபிமானி" எழுதியதிலிருந்து பின் வருவனவற்றைக் குறிப்பிடுகிறோம்.

"நம் தேசத்திற்குத் தற்காலம் இன்றியமையாததாயுள்ள சமுத்திர யாத்திரை, ருதுமதியான பிறகு விவாகம் முதலியவைகளைப்பற்றி அவைகள் சாஸ்திர சம்மதமானவைகள் தானென்றும் பண்டிதர்களால் நிச்சயிப்பதற்காக திருவையாற்றில் பண்டித மகா சபை யொன்று கூடிற்று". "தற்போதய நிலைமையில் இந்தப் பண்டிதர்கள் செல்வாக்கு சிதைந்து கொண்டே வருகிறது. அவர்கள் தங்களுக்கு எஞ்

சியுள்ள அற்பசொற்ப கௌரதையையேனும் தற்காத்துக்கொள்ள விரும்பினுல் தங்களின் வீண் பிடிவாதத்தை விட்டொழித்து காலத்திற்கு இன்றியமையாத சாஸ்திராநுசாரமான திருத்தங்கள் சற்பித்து தங்களின் தலைமையைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்."

---

## DRYING GINGER.

### சுக்கு செய்தல்.

இஞ்சியை உலர்த்தினுல் அது சுறுங்கிப்போவதுடன் நெடுநாள் நில்லாமல் பூச்சியால் அரிக்கப்படுமாதலால் இஞ்சி அதிகமாய் ஸாகுபடி செய்யும் மலையாளதேசத்தில் ஒரு தனிமுறையில் பதம்செய்கிருர்கள். அவ்வாறு செய்வதினுல் சுக்கு பருமனுகவுமிருந்து நெடுநாள் கெடாமல் மூன்று வருஷம் வரையில் இருக்கிறதாம். வ்யாபாரத்துக்காக நெடுநாள் ப்ரயாணதூரம் செல்லப் பக்வப்பட்டு மிருக்கிறதாம். அந்த முறையை ஒரு நிருபர் பின்வருமாறு தென்னிந்தியா விவஸாயத்தில் தெரிவிக்கிருர்.

சுக்கு பதம் செய்வதற்கு பின்கண்டவைகள் அவச்யமானவை.

இஞ்சி, கழுவும் தொட்டி, சுண்ணும்புத் தொட்டி, வெளுக்கச் செய்யத்தகுந்த வீடு, அகன்ற கூடைகள், கந்தகம், தேங்காயெண்னெய்; கழுவும் தொட்டிகள் 6 அடி சதுரம் 6 அடி ஆழமுள்ளவை. செங்கல் சுண்ணும்பால் கட்டி சிமிட்டி பூசப்பட்டிருக்கும். சுண்ணும்புத்தொட்டியும் கழுவும் தொட்டியைப் போலவே இருக்கும். வெளுக்கச் செய்யும் வீடு 12 அடி சதுரமும் 12 அடி உயரமும் உள்ளது. அதற்குள் 3 அடி உயரத்துக்கு சந்து விட்டு 3 பரணைகள் மூங்கில் பிளவுகளால் சட்டப்பட்டிருக்கும். இப்பரணைகள் அடர்த்தியாயில்லாமல் சந்துவிட்டிருக்கும். இப்பரணைகளின்பேரில் 9 அங்குலம் குறுக்களவுள்ள கூடை தட்டுகள் பக்கமாயும் ஒன்றின்மேல் ஒன்ருகவும் பக்வமாய் அடுக்கப்படும். இவ்வீட்டுக்கு ஒரே கதவுண்டு. ஒரு மூலை அடியில் தரையில் மாடம் போன்ற அடுப்பு இருக்கும். இம்மாடம் இரண்டடி சதுரமிருந்து வீட்டுக்குள் பிதுங்கி இருக்கும். இப்பிதுக்கத்தின்பேரில் ஒரு இரும்பு சடா யிருக்கும். அடுப்பில் தீ யெரிக்க, கடாய் சூடேறும் கடாயில் கந்தகம் போட அதில் புகைச்சல் உண்டாகி, வீடு முழுமையும் சேரும். புகை வெளியே அடுப்பின் வழியாகப்போக வாய்ப்பதில்லை. வீட்டுக் கூரை மூங்கில் பிளவுகளாலும் மண்ணுலும் சட்டப்பட்டு ஒட்டால் மூடப்படும். புகை வெளிபோகாதபடி இருக்கும். சில இடங்களில் இவ்வீடு 24 அடி இருக்கும். அப்போது இரண்டு அடுப்பு இருந்தாலும் கதவு ஒன்ருகவே யிருக்கும்.

காட்டு க்ராமங்களிலிருந்து வரும் இஞ்சி மண்ணுடன் இருக்கும். அதை முதலில் தொட்டிகளில் கழுவதுண்டு. 2-3-ஆள் இறங்கி இஞ்சியைத் தோல் சழல மிதிப்பதுண்டு. நன்ருய் இரண்டு மூன்று தரம் ஜலம் விட்டு இஞ்சியைக் கழுவி சுத்தப்படுத்துவார்கள். பிறகு மூங்கில் கத்தியால் இஞ்சியைத் தன் மடிப்புகளில் சுரண்டி, தோலை பிரித்துக் கழுவி, சுண்ணும்புத் தொட்டியில் போடுவதுண்டு. இதில் சுண்ணும்பு சுவருக்கு வெள்ளையடிக்கும் பக்வத்தில் இருக்கும். இரண்டு மூன்றுதரம் சுண்ணும்பில் இஞ்சியைக் கலக்கிக் கொடுப்பதுண்டு. அப்போது ஒன்றுபோல் சுண்ணும்பு இஞ்சியில் சேரும். பிறகு அதை முக்காலடி அகலக் கூடைகளில் போட்டு வெளுக்கும் வீட்டுப் பரணைகளில் அடுக்குவதுண்டு. பரணைக்கு 100 கூடைகள் ஏறும். கூடையில் 5 ராத்தல் இஞ்சி இருக்கும். ஆக ஒரு வீடு ஒரு தரத்தில் 3 × 100 × 5 — 1500 ராத்தல் இஞ்சி சொள்ளும். 7 ராத்தல் கந்தகம் வேண்டியிருக்கிறது. இப்புகையில் இஞ்சி 4 மணி நேரம் இருக்கும். இதற்குள் இஞ்சி புகையைக் குடிக்கும். கதவைத்திறந்த சற்று நேரம் பொறுத்து இஞ்சியை எடுத்துக்காய வைப்பதுண்டு. சுண்ணும்பில் நனைத்து மறுநாள் இஞ்சியை வீட்டில் சேர்த்து 8 ராத்தல் கந்தகம் உபயோகப்படுத்தி 12 மணி நேரம் வைப்பதுண்டு. மறுபடியும் வெயிலில் உலர்த்தி சுண்ணும்பில் போட்டு மூன்ரும்நாள் 9 ராத்தல் கந்தகம் உபயோகப்படுத்தி 6 மணி நேரம் புகையில் வைப்பார்கள். வீட்டிலிருந்து கூடைகளை யெடுக்கவேண்டும்போது கதவைத்திறந்து சில மணிநேரம் விட்டு உடம்பில் தேங்காயெண்ணெயைப் பூசிக்கொண்டு உள்ளுக்குப் போவார்கள். இங்கே ஏகராவுக்கு 8000 முதல் 10,000 ராத்தல் இஞ்சி விளையும். 1500 ராத்தல் இஞ்சி பதமாக்க ரூபா 11—4—0 ஆகிற .

## QUALIFICATIONS OF A TEACHER.
### உபாத்யாயரின் குணங்கள்.

ஜனவரிமீ”த்து “நல்லாசிரியனில்” ஒரு நிருப மேல் கண்ட தலைப்பின் கீழ் உபாத்யாயர் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்று எழுதுகிறார்.

1. உபாத்யாயர் தான் எடுத்துக்கொண்ட வேலையை ஸரிவர முடிக்கவேண்டு மென்ற எண்ணமுள்ளவராக இருக்கவேண்டும்.

2. சுறு சுறுப்புள்ளவராகவும், சந்தோஷ முள்ளவராகவும் இருக்கவேண்டும்.

3. தனக்கும், சிறுவர்களுக்கும் பேத மிருக்கிறதாக தெரிவிக்கக்கூடாது.

4. தாம் உபாத்யாயர் என்ற எண்ணங்கொள்ளாமல் சிறுவர்களுடன் ஆடிப்பாடிக் கூடியிருக்க வேண்டும்.

5. தகுந்த வேளைகளில் தகுந்த பிள்ளைகளைப் புகழ்ந்து உத்ஸாகப்படுத்தி, அவர்களிடம் பிழைகள் அதிகமாகக் கண்டுபிடிக்காம லிருக்கவேண்டும்.

6. தெளிவாகவும்,திருத்தமாகவும்பேசவேண்டும்.

7. குறித்த காலத்தில் கார்யங்களை ஸரிவரச் செய்யவேண்டும்.

8. பிள்ளைகள் புஸ்தங்களையும், பலகைகளையும் கண்ட இடத்தில் விடாமல் வகுப்பை சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

9. புன் சிரிப்புக்கொண்ட முக முடையவராயிருக்கவேண்டும்.

10. வயதில் பெரியவரா யிருந்தாலும் சிறுவனைப்போல் நடந்துகாட்டி பிள்ளைகளை ஸந்தோஷமாக வேலை செய்யும்படி பழக்கவேண்டும்.

## BEAUTY AND MARRIAGE.
### அழகும் விவாகமும்.

“சத்தியவேதபாதுகாவலன்” பத்ரிகையில் ஒரு நிருபர் “மெய் விவாகம்” என்ற தலைப்பெயர் கொண்ட ஒரு வ்யாஸம் எழுதிப்போகையில் மணமகனும் மணமகளும் தாங்களே கல்யாணத்தை நிச்சயம் செய்வதில் அழகு என்பது எவ்வளவு மட்டில் ஸாதகபாதகமா யிருக்கும் என்பதைப்பற்றி எழுதுகிறார்.

சிறுவர்கள் பெரியோருடைய யோசனையும் அனுமதியுமில்லாமல் தம் கண்களுக்கு அழகாய்த் தோன்றும் எவரையும் விவாகஞ்செய்து கொள்வதினால் அதிக துன்பமுண்டு. ஏனெனில் தமது இளம்ப்ராயத்தில் விவேகத் தாழ்ச்சியினாலும் அனுபவக்குறைவினாலும் மதிமயங்கி ஆய்ந்தோய்ந்து பாராமல் தங்களுக்குப் பொருந்தாதவர்களை அவர்களுடைய கட்டழகைக் கண்டு மயங்கி விவாகஞ்செய்துகொள்ள இச்சைப்படுவார்கள். அதிக ஸௌந்தர்யம் அகநதைக்கும் கேட்டிற்குங் காலாகுமேயன்றி நன்மைபயக்கமாட்டாது. “நல்முகம் நகரவாசல்” என்பது ஆன்றோர் வாக்கு. ஸௌந்தர்யம் வஞ்சனையுள்ளது அழகும் வீண். ஆதலால் சிறியோரும் இது கார்யத்தில் பெரியோரின் அனுமதியையும் யோசனையையும் பின்பற்றி நடக்கவேண்டியது அவசியம். மேலும் பெரியோரும் இத்தருணங்களிற் தங்களிஷ்டத்தையும் நன்மையையும் மட்டும்கருதி தங்கள் மக்களுக்கு மனம்பொருந்தாதவிடத்தில் மணஞ்செய்து கொடுப்பதால் மரண பர்யந்தம் இவர்களைத் துன்பத்துக் குள்ளாக்குகிறார்களென்பதை மனவிற் பதித்து விவாகப்பேச்சு ஆரம்பிக்குமுன்னமே தாம் நியமித்திருக்கும் மாப்பிள்ளை அல்லது பெண் இன்னாரென்று தமது பிள்ளைக்கு அறிவித்து அக்குடும்பத்தில் விவாகஞ் செய்வதால் உண்டாகும் ஹிதாஹிதத்தை விளக்கிக்காட்டி, தம்பிள்ளையின்ஸம்மதத்தையும் இஷ்டத்தையும் பரிசோதித்தறிந்தபின்பே விவாகத்துக்குரிய ஏற்பாடுகளை செய்யவேண்டும்.

# BOYS' SECTION.
## பையன்கள் பகுதி.

### A Swimming Association.

நீந்துதல் ஸங்கப்:—பையன்களும், வாலிபர்களும், நீஞ்சக் கற்றுக்கொள்வதற்கும், சிறுவர்கள், பெரியோர்களுடைய மேம்பார்வையில், நீந்துதலை விளையாட்டாக அப்யாஸிப்பதற்கும் ஸௌகர்யங்கள் செய்யவேண்டியதற்காக கல்கத்தாவில் ஒரு ஸங்கம் ஏற்படப்போகிறதென்று தெரியவருகிறது.

### Arumugam, the Mathematical Prodigy.

ஆறுமுகம்; அற்புதக் கணக்கன்:—ஆறுமுகம் என்னும் 18 வயதுள்ள ஒரு தமிழ் வாலிபன் கணிதத்தில் மகா ஸாமர்த்யசாலியாய் எல்லாரையும் ப்ரமிக்கச் செய்து வருகிறான். கணித வல்லவர்கள் சில நிமிஷங்களாவது செலவிட்டாலொழிய செய்து முடிக்கக் கூடாத கணக்குகளை இந்த வாலிபன்

வெகு சீக்ரத்தில் செய்து முடித்து மறுமொழி சொல்லுகிறுனும். பலவித கணித அப்யாஸங்களை யும் கொண்டு அவனைப் பரீக்ஷித்துத் தெளிந்த கணித ச்ரேஷ்டர்கள் பலர் அவன் இதற்கு முன் கணிதத்தில் அத்புத சக்திவாய்ந்த எல்லாரிலும் ச்ரேஷ்டமானவனுய் மாத்ரமல்ல, அற்புதத் திற மைவாய்ந்தவனுயும் காணப்படுகிறுன் என்கிறுர்க ளாம். அவனுக்குக் கொடுக்கப்பட்ட கணித அப் பியாஸ இனங்கள் சிலவற்றை உதாரணத்துக்காகத் தருகிறேம்.

9,82,347 × 231.

62,532 × 25,992.

4,35,905 × 2,34,558.

8,53,770—இதின் வர்க்கமூலம்.

2,74,624-இதின் கனமூலம்.

78, 987 ரூபா 10 அ. 6 பைசா × 9787.

1 ரூபா 1 சி. $3\frac{3}{8}$ பென்ஸானுல் 2000 ரூபா எவ் வளவு ஆங்கிலேய நாணயம்?

அந்த வாலிபனின் பெயர் ஆறுமுகம்; அவன் சாலிய குலத்தைச் சேர்ந்தவன்; அவனுடைய கைகால்கள் ஒவ்வொன்றிலும் ஆறு விரல்கள் இருக் கின்றனவாம். அவன் திருநெல்வேலியைச் சேர்ந்த ஸ்ரீவில்லிப்புத்தூரில் பிறந்தவன். அவனுக்கு இப் போது வயது 18. அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாதாம்.

**Odd Facts about the Figure 9.**

9-என்னும் எண்ணைப்பற்றி சில விநோத விஷ யங்கள்:—9-என்னும் எண்ணை யொட்டி அநேக வேடிக்கையான விஷயங்கள் இருக்கின்றன. அவை களில் ஒன்று பின்வருமாறு.

$9 \times 0 + 1 = 1$

$9 \times 1 + 2 = 11$

$9 \times 12 + 3 = 111$

$9 \times 123 + 4 = 1,111$

$9 \times 1234 + 5 = 11,111$

$9 \times 12345 + 6 = 1,11,111$

$9 \times 123456 + 7 = 11,11,111$

$9 \times 1234567 + 8 = 1,11,11,111$

$9 \times 12345678 + 9 = 11,11,11,111$

$9 \times 123456789 + 10 = 111,11,11,111$

கூட்டல் கணக்கு ஸரியாக செய்யப்பட்டிருக்கிற தாவென்று பார்க்கப் பின்வருமாறு செய்யவும். கூட் டுவதற்குக் கொடுத்திருக்கும் ஒவ்வொரு தொகையிலு முள்ள எண்களை கூட்டி 9 ல் வகுத்து மிச்சம் கண்டுபிடிக்கவும். வந்த மிச்சங்களை யெல்லாம் கூட்டி 9-ல் வகுத்து மிச்சங்கண்டு பிடிக்கவும்; வந்த மிச்சமும், கூட்டுத்தொகையிலுள்ள எண்களைக் கூட்டிவந்ததை 9-ல் வகுத்து வந்த மிச்சமும் ஒன்ருயிருந்தால் கூட்டல் கணக்கு ஸரியானது.

53,698, எண்களின் தொகை, 31; 9-ல் வகுக்க = 3 ஈவு; 4 மிச்சம்.

18,973, எண்களின் தொகை, 28; 9-ல் வகுக்க = 3 ஈவு; 1 மிச்சம்.

42,679, எண்களின் தொகை, 28; 9-ல் வகுக்க = 3 ஈவு; 1 மிச்சம்.

37,862, எண்களின் தொகை, 26; 9-ல் வகுக்க = 2 ஈவு; 8 மிச்சம்.

54,716, எண்களின் தொகை, 23; 9-ல் வகுக்க = 2 ஈவு; 5 மிச்சம்.

---

2,07,928. மொத்தம் (கூட்டுத் தொகை)

மிச்சம் எல்லாவற்றையும் கூட்ட 19-வருகிறது. 9-ல் வகுக்க = 2 ஈவு; 1 மிச்சம்.

மொத்தம் கூட்டுத் தொகையின் எண்களைக் கூட்ட வருவது 28; இதை 9-வகுக்க, 3 ஈவு; 1 மிச்சம்.

கடைசியாக வரும் மிச்சங்கள் ஒன்ருக இருந்தால் (இந்தக்கணக்கில் இரண்டிலும் வந்த மிச்சம் 1) மொத் தக் கூட்டுத் தொகையாகிய 2,07,928, ஸரியான தொகையாகும்.

இன்னொரு கணக்கு உதாரணமாகக் கொடுக்கி ருேம்.

| | எண்களின் தொகை | ஈவு | | மிச்சம். |
|---|---|---|---|---|
| 453476; | 29 ÷ 9 = | 3 | ; | 2 |
| 283493; | 29 ÷ 9 = | 3 | ; | 2 |
| 17954; | 26 ÷ 9 = | 2 | ; | 8 |
| 29100; | 12 ÷ 9 = | 1 | ; | 3 |

---

784023; மொத்தம் கூட்டுத்தொகை.

மிச்சங்களின் கூட்டு தொகை 15. 9-ல் வகுக்க, 1 ஈவு; 6, மிச்சம்.

மொத்தக் கூட்டுத்தொகையின் எண்களின் தொகை, 24. 9-ல் வகுக்க 2, ஈவு; 6 மிச்சம்

கடைசியாக வந்த மிச்சம் இரண்டும் 6-ஆக இருப் பதால் கணக்கு ஸரியாகக் கூட்டப்பட்டிருக்கிறது.

### Converting the Sahara into Sea.

பாலைநிலத்தைக் கடலாக்கல்.—ப்ரான்ஸ் தேசத்திலுள்ள ஓர் இஞ்சினீயர் ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள ஸஹாராவென்னும் பாலை நிலத்தைக் கடலாகச்செய்யலாமென்று, தக்க காரணங்காட்டிக் கூறுகிறார். அப்பாலைநிலம் கடலாக மாறினால் அங்கு ஜனங்களுக்கு பல நன்மைகள் உண்டாகுமாம்.

### Some Don'ts.

சில கூடாதவைகள்.—பிறருக்குத் துன்பம் நேர்ந்தால் அதைப் பார்த்து நீ சிரிக்காதே.

உன்னால் நிறைவேற்ற முடியாத வாக்குத்தத்தத்தை நீ ஒருபோதும் செய்யாதே.

திரும்பி உனக்குக் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டு பிறருக்கு வெகுமதி யளிக்காதே.

குறிப்பிட்ட காலத்தில் ஓரிடத்திற்குப் போவதினின்றும் நீ தவறாதே.

ஏதாவது ஒரு வஸ்துவைப் பிறருக்கு தானம் செய்யும்போது அது உனக்கு உபயோகமில்லையென்று சொல்லிக்கொண்டு அதைக் கொடாதே.

குடும்ப ஸமாசாரத்தைக் குறித்து வேலைக்காரனையாவது குழந்தையையாவது கேள்விகள் கேட்காதே.

நீ ஏற்கனவே செய்திருக்கும் தர்மத்தைப்பற்றியாவது, உன்னால் பிறர் அடைந்திருக்கும் அனுகூலத்தைப்பற்றியாவது ஒருபோதும் எடுத்துப் பேசாதே.

## LADIES' SECTION.
## ஸ்த்ரீகள் பகுதி.

### College Girls.

காலேஜில் படிக்கும் பெண்கள். 1910-11-வது வருஷத்தில் இந்தியா முழுவதிலும் காலேஜில்படித்த பெண்களின் மொத்த ஸங்கியை 374. இதில் 110 பெண்கள் பம்பாயிலும், 104 வங்காளத்திலும், 58 மத்ய மாகாணத்திலும், 43, சென்னையிலும், 42 பஞ்சாபிலும், 17 பர்மாவி[illegible]தவர்களாகும். மொத்த காலேஜ் பெண்கள் [illegible]74-லில் 244 பேர்கள் வைத்யப் பரீக்ஷைக்கும், உபாத்யாயர்களாய்ப்போக ட்ரெயினிங் பள்ளிக்கூடங்களிலும் படித்தவர்களாகும். இதனால் ஸ்திரீகளுக்கு வைத்யத்தொழிலும் உபாத்திமைத்தொழிலிலும் ப்ரியம் அதிகம் என்று தெரிகிறது.

### A Hindu Orphanage.

ஹிந்து அபலாச்ரமம்.—அனாதைகளான ஹிந்து ஸ்திரீகள், பெண்கள், இவர்களுக்கு வீடும், சாப்பாடும், துணியும், கொடுத்து காப்பாற்றுவதே இந்த ஆச்ரமத்தின் நோக்கம். இது 1911-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 3-ந்தேதியன்று பெங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அதில் 7, 10, 12-வயதுள்ள மூன்று அநாதை ஸகோதரிகள் வந்து சேர்ந்தார்கள். அதன் பிறகு மூன்று பெண்கள் வந்து சேர்ந்தார்கள். நாளுக்குநாள் அது வ்ருத்தியடைந்து வருகிறது. பெண்களுக்கும் வந்திருக்கும் ஸ்திரீகளுக்கும் சமையல் வேலையும் வீட்டுக்கார்யங்களும் சற்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆச்ரமத்தில் சிறுமிகள், பெண்கள், இவர்களுடைய படிப்பு, நல்லொழுக்கம், இவைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

### Marriageable Age of Girls.

பெண்களின் விவாக காலம்.—திருவையாற்றில் நடந்த பண்டித பரிஷத்தில் விவாககால நிர்ணயத்தைப்பற்றி விவாதம்நடந்தது. மைஸூரைச்சேர்ந்த லக்ஷ்மீபுரம் மகா வித்வான் ஸ்ரீனிவாஸாசாரி ப்ரௌடா விவாகம் செய்யலாமென்பதற்கு ஆதாரமாக சாஸ்த்ர வாக்யங்களை எடுத்துச் சொன்னார். இவர் இவ்விதம் சொன்னதைக் கோலாபுரம் பண்டித நரஹரிசாஸ்த்ரி மறுத்துப் பேசினார். த்விஜர்களுள் விவாகம், காமா பேட்சைக்காக ஏற்படாமல் தர்மத்தை உத்தேசித்த வைதிக கர்மமாகும். த்விஜர்களுக்கு விவாகம் கட்டாயமானது. பெண்களுக்கு 8-வது வருஷத்தில் விவாகஞ்செய்வது உத்தமம். 10-12-வது வயதில் விவாகம செய்வது மத்யமம். பெண்கள் ப்ரௌடையாகாமல் இருந்தால் 14-வது வயதிலுங்கூட விவாகம் செய்து முடிக்கலாம். 9-வயதிலும் ப்ரௌடையாகிறது முண்டு. 16 வயதிலும் ஆகிறதுண்டு. ஆகையால் விதி ஏற்படுத்துவது உசிதமல்ல. ப்ரௌடையான பிறகு மூன்று வருஷத்திற் கப்புறம் ஸ்திரீகளுக்கு விவாகம் செய்யலாம். ஏதோ சில ஸந்தர்ப்பங்களில் தான் அப்படிச் செய்யலாம். பெண்களுக்குக் தகுந்த வரன் கிடைக்கும் வரையிலும் விவாகத்

தைச் செய்யாமல் இருக்கலாமென்று சாஸ்த்ரம் கூறுகிறது. சாஸ்த்ரங்களில் விவாக காலம் நிர்ணயஞ் செய்யப்படவில்லை. 12 முதல் 16 வயதுவரை செய்யலாம் என்று செல்லப்பட்டிருக்கிறது. ப்ரௌடா விவாகத்தை நிஷேதம் என்று சஸ்த்ரங்களில் சொல்லப்படவில்லை என்று பண்டித அகிலாண்ட தீட்சதர் சொன்னார். இன்னும் பலரும் இதைப்பற்றி வாதாடினார்கள்.

விவாக விஷயத்தில் "ஸமாவேஷணம்" என்ற பதத்தைப்பற்றி ஆராய்ச்சி நடந்தது. ஸமாவேஷணம் என்பதற்கு நிஷேதம் என்று சிலரும், க்ரகப்ரவேசம் என்று சிலரும் அபிப்ராயப்பட்டார்கள். கோதாவரி பண்டிதர்களுள் இருவர் ப்ரௌடா விவாகத்தைக் கண்டித்துப் பேசினார்கள். ஜாம் நகரம் வித்வான் ஹத்திபாம் சங்கரசாஸ்த்ரிகள் ப்ரௌடா விவாகம்கூடாது என்று வெகு அழகாய்ப் பேசினர். தவிர 13-வது வருஷத்திற்கு மேல்தான் பெண்களின் அவையவங்கள்யாவும் புஷ்டி அடைகின்றன. ப்ரான்ஸ் தேசத்தில் பெண்களுக்கு விவாக காலம் 16 வயது, ஜெமேகாவில் 15 வயது. இந்தியாவிலோ ஹிந்துக்களுள் 12-வயதுதான் விவாக காலம் என்று சொன்னார். பண்டிதர்கள் அனைவரும் தங்கள் தங்கள் அபிப்ராயத்தை அச்சுக் கடிதங்களில் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அது சீக்ரம் வெளிவரும் என்று தெரிகிறது.

**Expenditure.**

செலவு.—"வரவு எவ்வகையாயிருந்தாலும் அதைச் செலவு செய்யும் விஷயத்தில் எல்லோரும் எவ்வளவோ கவனமுடையவர்களாயிருத்தல் வேண்டும். வரவு எவ்வளவுக்குத்தான் அதிகரித்திருந்தாலும் அதை வீணாகச் செலவிடப் புகுந்தால் எளிதில் ஒன்றுங் காணாமல் அழிந்து போய்விடும். வீண்செலவு செய்த பணம் திரும்ப வாரா. கிருகபரிபாலனஞ் செய்பவர்கள் மற்றெல்லா விஷயங்களையும்விட இவ்விஷயத்திற்றான் மிகவும் கவனமுடையவர்களாயிருத்தல் வேண்டும். 'ஆகாறளவிட்டி தாயினுங் கேடில்லை, போகாறகலாக் கடை" என்றார் பொய்யில் புலவர். வரவு சிறிதாயினும் செலவு அதிற் பெருகாவிடில் கெடுதியில்லை என்பது இதன் பொருளாகும். செலவு செய்யவேண்டுவதற்கு ஒரு ஒழுங்கு (சட்டம்) ஏற்படுத்தி அவ்வண்ணம் நடத்தி வருவது மிகவும் நன்று. குடும்பத்திற்கு வேண்டுவனவற்றை ஆராய்ந்து தெரிந்து அவற்றிற்குக் குடும்பத்தின் இருப்புத் தொகை வரவுத் தொகை இவைகளைத் தக்கவிதமாகப் பங்கிட்டுப் பின் எவ்வெப் பொருள்கள் அப்பொழுதே வேண்டியவைகள் என்றும், அவசியம் வேண்டாதவைகள் எவைகள் என்றும் நிச்சயித்துக்கொண்டு, மிகவும் அவசியமானவைகளை முதலில் வாங்கி, பின்னால் ஒரு சமயத்துக்கு ஆகவேண்டியவைகளுக்கு ஏற்பாடும் செய்துவைக்கவேண்டும்."—கிருகபரிபாலனம்.

**The Wife's Duty.**

பார்யா தர்மம்.—குருவாக்கைத் தடுத்தாலுங்
சொண்டவன்வாக்கைத்தடுக்கக் கூடாதென்ற
திருவாக்கைப் பெருவாக்காய்ச் சிந்தித்துத்
தாரித்ர திசைசேர்ந்தாலும்
ஒருவாக்காய் மனந்துணிந்தே யுடனிருந்தே
சுகதுக்கம் உரித்தாய்க்கொண்டு
வருவாய்க்குமிகுதியெதுஞ் செலவுசெயா
திருப்பவளே மனைவியாமே.

(இதன் பொருள் வெளிப்படை)

வருவாக்கிய்ய வாழ்தலுறும்
மறுவில் கற்பின் மனையாள்போல்
பொருள்யாவுளவாமதுவன்றிப்
புகழு[illegible]சிவுண்டாம்.

அதாவது, தன [illegible]வனுக்கு வருகிற பொருளுக்குத்தகுந்தபடி செலவு செய்து வாழுங் குற்றமில்லாத பதிவ்ரதா தர்மத்தையுடைய மனைவிபோலச் சிறந்த பொருள் வேறொன்று மில்லை யென்றும், அப்படிப்பட்ட நற்குணம் நற்செய்கைகளையுடைய மனைவியால் கணவனுக்குக் கீர்த்தியையும் புண்யமும் மிகுதியாக உண்டாகு மென்றும், விநாயக புராணம் உபாஸனாகாண்டம் அரசிருக்கைப் படலத்திற் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால், மனைவியானவள் எந்த முகாந்திரத்தைக் கொண்டும் அதிகச் செலவு செய்யலாகாது.

**Marriage of H. H. Gaekwar's Daughter.**

பரோடா மகாராஜ குமாரத்தியின் விவாகம்.—பரோடா மகாராஜா, தம் குமாரத்தியான இந்த்ராவை, காலஞ்சென்ற கூஜ்பீஹார் மகாராஜாவின் இளைய குமாரரும், தற்போது ஆளும் மகாராஜாவின் ஸகோதரருமான ஜிதேந்த்ர நாராயண ராஜ குமாரருக்கு விவாகஞ் செய்து கொடுக்கப் போவதாகத் தெரியவருகிறது.

# AGRICULTURE.

## விவஸாயம்.

### Green Manuring for Sugarcane.

கருப்புக்குப் பசுந்தாள் உரமிடுதல்.—கொழுஞ்சி, எருக்கு, முதலிய தழைகளை நிலத்தில் மக்கவிட்டு அதில் கரும்பு நடும் அனுபோகம் அனேக விவஸாயிகளுக்கிருக்கலாம். தழை எரு உபயோகித்த பயிரில் வெல்லம் வெகு நேர்த்தியாய் உண்டாகிறது. மற்ற எருக்களை உபயோகிக்கும்போது வெல்லம் அத்தனை நேர்த்தியாயிருப்பதில்லை. ஆகையால் கரும்புப்பயிருக்குத் தழை பெருவே மிகவும் ஏற்றதென்று யூகிக்கவேண்டி யிருக்கிறது. அனுபவத்திலும் தழை எருவால் கரும்பு அதிகமான பலன் கொடுக்கிறதென்பதாக கிருஷிகன் பத்ராதிபர் சொல்லுகிறார். ஆதலால் கரும்பு நட கிடங்குகள் தோண்டுவதற்கு ஒருமாஸக் காலத்து முன்னதாகவே அந்நிலத்தில் ஏராளமான தழைகளை மிதித்து உழுது தண்ணீர் கட்டிவிட்டால், அது ஒருமாஸ காலத்தில் நன்றாய் அழுகி மக்கியிருக்கும். நிலம் காய்ந்தவுடன் கிடங்குகள் தோண்டி கரும்பு நடலாம். இப்படிச் செய்தால் இளம்பயிருக்கு அவச்யமான வெடியுப்புக்கார உணவு வேண்டிய அளவுக்கு அகப்படும். அதனால் இளம் பயிர் ஓங்கி வளர்ந்து செழிப்புறும். இளம் பருவத்தில் நோய் நொடிகள் தாக்காது ஓங்கிவளர்ந்து பயிர் பின்னால் ஸரியாய் வளர்ந்து பலன் கொடுக்குமென்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம்.

இதுவல்லாமல் தழைகளை ஏராளமாய் நிலத்தில் போடுவதால் மண்ணின் தன்மை வ்ருத்தி யடைகின்றது. கெட்டியாய்க் கடினமாய் உறைந்து போகும் நீர்வடிவில்லாத களிமண் நிலம் தழையெருவால் நெகிழ்ந்து பசளைமண்ணாகிறது. அதனூடே எளிதில் நீர்வடிகிறது. மண் இளகி ம்ருதுவடைவதால் பயிரின் வேர்கள் பக்கங்களில் செல்லாமல் ஆழமாய் மண்ணில் இறங்கிச் சென்று பயிருக்கு அதிக போஷணையை ஸம்பாதிக்க ஹேதுவாகிறது. மேலும் கோடைகாலத்தில் கொஞ்சத்தண்ணீர் பாய்ச்சினாலும் அந்த ஈரம் முழுவதையும் கடல் பஞ்சுபோல் ஏற்றுப் பிடித்துக் காப்பாற்றி வைத்துக்கொள்ளும் சக்தி நிலத்துக்குண்டாகிறது. மழைகாலத்தில் நிலத்தில் தண்ணீர் கட்டினாலும் பயிருக்குக் கெடுதியில்லாமல் காப்பாற்றக் கூடியதாயு மிருக்கிறது. ஆகையால் கரும்பு நடுமுன் நன்செய் தோட்டக்கால் நிலங்களில் ஏராளமான தழைகளை மிதித்து அழுகவிட்டுப்பின் கிடங்குகள் வெட்ட வேண்டும்.

### The Use of Lime Shells.

கிளிஞ்சலின் உபயோகம்.—ஒரு ஆராய்ச்சிக்காரர் கிளிஞ்சலின் விஷயமாய் அமெரிக்கா கண்டத்திலுள்ள ஐக்கிய மாகாணத்தில் ஸமீபத்தில் ஒரு உபந்யாஸஞ் செய்தபோது கிளிஞ்சல் ஸாதாரண சுண்ணாம்புக்கு உபயோகப்படுவதுடன் பூஸாரத்திற்கு இன்றியமையாதஸத்துடன் அது நிரம்பியிருக்கிற தென்றும், ஸமுத்ரத்துக்கருகில் வஸிப்பவர்கள் பெரும்பாலும் கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கொணர்ந்து மற்ற எருக்களுடன் கலந்து, அப்படிக் கலந்த எருவை களர் நிலங்களில் போட்டுப் பண்படுத்தலாம் என்றும், அந்நிலங்களிலிருந்து கிடைக்கும் மாஸூல் ஒன்றுக்கு மூன்று காணுமென்றும், சொல்லுகிறார்.

### Prickly-pear as Food for Cattle.

கால்நடைத் தீனியாக சப்பாத்தியை உபயோகித்தல்.—கால்நடைகளுக்கு சப்பாத்துக் கள்ளியைத் தீனியாக உபயோகிக்க தோண்ட் என்ற இடத்தில் சென்ற வருஷத்தில் ஒரு ஐரோப்பியர் செய்த பரிட்சையை பம்பாய் விவஸாய இலாகா பரீட்சைசெய்து பார்த்தார்கள். சப்பாத்திக்கள்ளியின் முள்ளைப் பிடுங்கிவிட்டு 1000-ராத்தல் சப்பாத்திக்கு 60-ராத்தல் பருத்திக் கொட்டையை கூட்டி அதொன்றையே கால்நடைகளுக்குத் தீனியாய் நீடித்தகாலம் வைத்ததில் கறவைமாடுகள் நல்ல ஸ்திதியிலிருக்கிறதாக விவஸாய இலாகாவால் அறிவிக்கப்படுகிறது.

### Manure and Milk.

எருவும் பாலும்.—நிலத்துக்கு எரு விடுவதால் அந்த நிலத்தில் மேயும் மாடுகள் கொடுக்கும் பாலின் அளவு எவ்வளவுமட்டும் ஏற்றத்தாழ்வு அடைகிறது என்பதை அறியும்பொருட்டு இங்கிலாந்தில் ஹார்ப்பர் ஆடம்ஸ் அக்ரிகல்சரல் காலேஜில் சில பரீக்ஷைகள் நடத்திவருகிறார்கள். அங்கே சில கறவைப் பசுக்களை எருப்போட்டு தீவனப்பயிர் வளர்த்த நிலத்திலும் சில கறவைப் பசுக்களை எருவிடாமல் தீவனப் பயிர் வளர்த்த நிலத்திலும் மேயவிட்டு வருகிறார்கள்.

இதுவரையில் செய்த பரீக்ஷைகளால், பசுவை எரு விட்ட நிலத்தில் மேயவிட்டதில் அது கொடுக்கும் பால் ஒருவாரத்துக்கு ஸராஸரி 29 ராத்தல் அதிகரித்ததென்றும், எருவிடாத நிலத்தில் மேயவிட்டதில் ஒரு வாரத்துக்கு 17-ராத்தல் குறைந்து போயிற்றென்றும் தெரியவருகிறது. இந்த விஷயங்கள் குடித்தனக்காரர்களுக்கு ரொம்ப உபயோகமானவை. இந்த பரீக்ஷைகளின் முழு ரிபோர்ட்டு ப்ரசுரமானால் குடித்தனக்காரர்களுக்கு ரொம்ப உபயோகமாயிருக்குமென்று நம்பலாம்.

## Ploughing by Dynamite.

வெடிமருந்தால் உழவு.—அமெரிக்காவிலுள்ளஐக்யமாகாணங்களில் விவஸாயிகள் டைனமைட் என்னும் வெடிமருந்தால் தங்கள் நிலத்தை உழுகிறார்கள். இந்த வழக்கம் அவர்களிடம் ஸர்வஸாதாரணமாய் விட்டது. வெடிமருந்து செய்கிற ஒரு கம்பெனியார் மாத்ரம் 1908-ம் வருஷம் 5 லக்ஷம் ராத்தல் வெடிமருந்தும், 1909-ம் வருஷம் $7\frac{1}{2}$ லக்ஷம் ராத்தல் வெடிமருந்தும், 1910-ம் வருஷம் 15 லக்ஷம் ராத்தலும், 1911-ம் வருஷத்தில் 30 லக்ஷம் ராத்தலும் விவஸாயிகளுக்கு விற்றிருக்கிறார்கள். அதே கம்பெனியார் சென்றவருஷம் 50 லக்ஷம் ராத்தல் வரையில் விற்பார்கள் என்று ஊகிக்க முதலிலேயே அறிகுறிகள் இருந்தனவாம். வெடிமருந்தால் நிலத்தை உழுதலாகிய முறையை முதல் முதலில் கண்டு பிடித்தவர் அமெரிக்கா ஐக்ய நாடுகளில் தென் ப்ராந்த்யத்தைச் சேர்ந்த ஒரு விவஸாயியாம். வெடிமருந்தை உபயோகித்தால் வேறு எந்த முறையை உபயோகித்தாலும் முடியாத அவ்வளவு அளவுக்கு அடிப்படை மண்ணை கலகலப்பாகச் செய்கிறதென்று அவர் அறிந்தார். இந்த முறைப்படி அவர் பயிர்செய்ததில் அவருடைய நிலத்தில் கிடைத்த மாஸூல் ரொம்ப அதிகமாகவும், வெடிமருந்தின் விலை ரொம்ப குறைவாயும் இருந்ததனால் அதைக்கண்டு எல்லோரும் இந்த முறையை அனுஷ்டிக்கலானார்கள். விவஸாயிகளுக்கு உபயோகமான வெடிமருந்து செய்து விற்க இப்பொழுது ஆறு கம்பெனிகள் இருக்கின்றனவென்று ஒரு இங்கிலீஷ்பத்ரிகை தெரிவிக்கிறது. இது எவ்வளவு ஸௌகர்யமான உதவியானாலும் அறியாதவர்கள் டைனமைட்டை உபயோகிக்கக்கூடாது. அஜாக்ரதையாயிருந்தால் சுற்றுப்பக்கத்திலுள்ளவர்களுக்கு உயிர்ச்சேதம் நேரிடும். இவ்விதமான விவஸாயமுறையை ஸர்க்கார் இந்த தேசத்தில் லகுவாய் அனுஸரிக்க விடமாட்டார்கள்.

## Green Gram.

பச்சைப் பயறுக்கு நீர்த்தீர்வை.—சுதேசமித்திரனில் "ஓர் விவசாயி" எழுதுகிறார்:—நன்செயில் இரண்டாம் போகம் அதாவது நெல் அறுவடையாவதற்கு முந்தி (மெழுகு பதத்தில்) பச்சைப்பயறு, உளுந்து வகையருக்கள் விதைப்பது வழக்கமாயினும் இதுவரை கவர்ன்மெண்டாரால் தீர்வை விதிக்கப்பட்டதில்லை. அப்படியிருக்க, தென்னாற்காடுஜில்லா சிதம்பரம் தாலூக்காவில் கிராம உத்தியோகங்களுக்கு அடியிற்கண்டபடி ஒரு சுற்றுத்தரவி அனுப்பப்பட்டிருக்கிறது. "பூமியில் பயிரில்லாமலிருக்கும்போது ஸர்க்கார் நீர்பாய்ச்சி உடனே பச்சைப்பயறு முதலிய தான்யம் விதைத்தால் அதற்கு கஸர் கட்டவேண்டும். அதேமாதிரி பூமியிலிருக்கும நன்செய்ப்பயிர் அறுவடையாகும் தருணத்தில் அறுவடைப் பயிரின் உபயோகத்துக்கல்லாமல் பின்னால் விதைக்கப்போகிற பச்சைப்பயிறு முதலிய தான்யங்களின் உபயோகத்திற்காக நீர்பாயச்சினால் அப்படி ஸாகுபடி செய்யப்பட்ட பச்சைப்பயிறு முதலிய தானியங்களுக்கு கஸர் கட்டவேண்டும். என்ன எண்ணத்துடன் தண்ணீர் பாய்ச்சப்பட்ட தென்பதை ஜமாபந்தி ஆபீஸர் தீர்மானிப்பார். அறுவடைக்குமுன் 15 தினத்திற்குள் தண்ணீர் பாய்ச்சினால் அப்படிப் பாய்ச்சுவது அடுத்த பச்சைப்பயிறுக்கென்று உத்தேசிக்க இடமாகும். இந்தமாதிரிபோர்டு உத்திரவு கிடைத்திருப்பதால் மேல்கண்ட எல்லா கேசுகளையும் ஜமாபந்தியில் 6-ந்தேதியில் நோடீஸுக்குக் கொண்டுவரவேண்டியது". இன்ஸ்பெக்ஷன் ஆபீஸர்கள் சாதாரணமாய் நிற்கும் பயிர்களையும் அறுவடையான தான்யகளையும், புன்செயில் ஜலம் பாய்ச்சின அடையாளங்களையும், சில சமயம் யாதொரு அடையாளமும் காணவிடில் விசாரித்து எழுதுவார்கள். அப்படியிருக்க நஞ்சையில் பச்சைப் பயறுக்காகத்தான் என்பதும் 15 நாள் முன் பாய்ச்சப்பட்டதென்பதும் கர்ணத்தாலும், இன்ஸ்பெக்ஷன் ஆபீசர்களாலும் எப்படி நிச்சயிக்கப்படக்கூடும். அறுவடைக்கு முன்பின்னாக மழை பெய்தாலும் பிந்திய பயிர்களுக்குப் பாய்ச்சப்படும ஜலமானது வடிமடை வழியாலும நண்டுவளை சிறு வரப்பு முதலிய வழிகளாலும் பச்சைப்பயறு விதைத்த அல்லது விதைக்கப்போகும் நிலத்தில பாய்வதாலும் மேற்படி உத்தரவால் அனேகமாய்த தீர்வை விதிக்கப்படுவதிற்குள்ளாகும். மேற்படி பயிர்களுக்கு மாட்டு அழிவும், பூச்சி விழுந்து அழிவதும் சகஜம. விலையும அதிகக்கடுமையாய விற்கும். ஆகையால் ஆனரபில் மெம்பர்கள் கடமைபபட்டவைகளைச் செய்ய வணக்கமாய்ப் வேண்டுகிறேன்

# COMMERCE.
# வ்யாபாரம்.

## Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற நவம்பர்மாஸத்தில் அடியில்கண்ட விவரப் படி 29 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| 3 | பாங்கிகளும் லேவாதேவி கம்பெனிகளும் | ... 5,45,000 |
| 4 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் | ... 1,40,000 |
| 4 | அச்சடித்துப் ப்ரசுரம் செய்யும் கம்பெனிகள் | ... 1,20,000 |
| 5 | வ்யாபாரகம்பெனிகள் (மேலே சொன்னவைகளைத்தவிர) | ... 17,10,000 |
| 2 | பருத்திமில் கம்பெனிகள். | ... 27,00,000 |
| 1 | சணல்மில் கம்பெனி | ... 20,00,000 |
| 1 | ஆட்டுரோமம், பட்டு, ஹெம்பு மில்கம்பெனி | ... 50,000 |
| 3 | மில்லுகளும், ப்ரெஸ்ஸுகளும் (மேலேசொன்னவைகளைத்தவிர) | ... 7,50,000 |
| 5 | தேயிலை, இன்னம் மற்றதோட்டக்கம்பெனிகள் | ... 8,00,000 |
| 1 | கிலக்கரி சுரங்கக்கம்பெனி | ... 3,50,000 |
| 29 | ஆக மொத்தம் ரூ. | 91,65,000 |

## Price of Rice.

அரிசியின் விலை.—ஜப்பான் தேசத்துப் பத்ரிகை யொன்றில் இதுவிஷயமாய் எழுதியுள்ளதை கீழே குறிப்பிடுகிறோம். இந்தியாவிலுள்ள கிலச்சுவான் தார்களும் அரிசி வ்யாபாரிகளும் இதை ரொம்பவும் கவனிக்கவேண்டும்.

ஜப்பானில் சிலவருஷங்களாக நெல்விலை குறை வாயிருந்ததனல் விவஸாயிகள் ரொம்ப கஷ்டப்பட்டு வந்தார்கள். இவர்களுக்கு ஸௌகர்ய முண்டாக்குவ தற்காக ஜப்பான் கவர்மெண்டார் சென்ற வருஷம் கைத்தொழில் கம்பெனிகள், பொது ஜனஸங்கங்கள் ஆகிய இவைகளுக்கு 2 கோடி என் (என் என்பது ரூ. 1-8-6) குறைந்த வட்டிக்கு கடன்கொடுத்தார்கள். அதன்மேல் பெரிய பூஸ்திதி யுடையவர்கள் கவர்மெண்டார்கொடுத்தபணத்தை உபயோகித்து அரிசியைக் கட்டிப்போட்டு வைத்தார்கள். இதனுல் அரிசியின் விலை ரொம்ப அதிகமாகிவிட்டது. போனவருஷம் அரிசி வ்யாபாரத்தில் அதிகலாபம் அடைந்தவர்கள் இந்தவருஷமும் கவர்மெண்டார் குறைந்தவட்டிக்குப் பணம் இன்னம் கடன் கொடுத்துவருவார்கள் என்று எண்ணியிருப்பதால் அரிசி விலை அதிகமாகவே இருந்துவருகிறது. சென்ற வருஷம் கவர்மெண்டார் கடன் கொடுத்ததில் அரிசி விலை மட்டு மிதமல்லாமல் உயர்ந்து போய்க் கெடுதலாக முடிந்தது. கவர்மெண்டார் இதையறிந்துகொண்டு இந்தவருஷம் 50 லக்ஷம் என் தான் கடன் கொடுத்திருக்கிறுர்கள். இது சென்றவருஷத்தில் கடன்கொடுத்த தொகையில் நாலில் ஒருபாகமாகிறது. வட்டியும் முன்னிருந்ததுபோல் நூற்றுக்கு $6\frac{1}{2}$ ஆகவில்லாமல் $8\frac{1}{2}$ ஆகவிருக்கிறது. விவஸாய பாங்கிகளுக்கும், கைத்தொழில் பாங்கிகளுக்குந்தான் கடன் கொடுத்திருக்கிறுர்கள். மற்றவர்களுக்கு இனிமேல் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். இதனுல் பணக்கார விவஸாயிகள் முன்வருஷம் செய்ததுபோல இந்த வருஷமும் அரிசியைக் கட்டிப்போட்டு விலை க்ராக்கியான காலத்தில் விற்பதாகிய துணிச்சலான வ்யாபாரத்தில் இறங்கமுடியாது. அரிசி இறக்குமதிவரி சில மாஸகாலமாக 40 ஸென்னுக்கு (ஸென் என்பது நாலணு)க்குறைக்கப்பட்டிருந்தது,நவம்பர்மாஸம் 1-தேதியில் எப்பொழுதும் உள்ளதான 100-கின்னுக்கு (கின் என்பது $1\frac{1}{3}$ ராத்தல்) ஒரு என் வீதம் ஏற்பட்டிருக்கிறது. அக்டோபர் மீ 20 தேதியன்று வரவு செலவுடிபார்ட்டுமெண்டார் எடுத்த சில கணக்குகளின்படி ரேவுகளில் பாண்டெட்வேர்ஹௌவில் உள்ள வெளிதேசத்து அரிசி 10 லட்க்ஷம் மூட்டையாகும். (வெளி நாட்டிலிருந்து ஸாமான்களை இறக்குமதி செய்கையில் வரிகொடுத்தபின் ஸாமான்களை எடுத்துக்கொண்டு போவதாகச் சொல்லி ரேவிலேயே அதிகாரிகள் வசம் வைப்பதுண்டு. அப்படி வைக்கும் இடத்துக்கு பாண்டெட்வேர்ஹௌஸ் என்றுபெயர்.) அவைகளில் 5லக்ஷம் மூட்டை யோகஹாமாவிலும் மற்றவைகோப், ஒஸாகா, இன்னம்மற்ற துறைமுகங்களிலும் இருந்தன. அக்டோபர் மாஸம் 31-தேதிக்கு மேல் பாண்டுக்கிடங்குகளை விட்டெடுத்த அரிசிக்கு 100 கின்னுக்கு 1 என் வீதம் வரிபோடப்படும். எப்படியிருந்தாலும், இந்த வருஷத்துக்குப் பயிரில் 5 கோடி 'சோகு' வாகும் என்றுஎண்ணப்படுகிறது. அப்படியானுல் அந்த தேசத்தில் வெளிநாட்டு அரிசி ரொம்ப தேவையாயிருக்கும்.

# INDUSTRY.
# கைத்தொழில்.

**Sugar Industry in Formosa.**

பார்மோஸாவில் சர்க்கரைத் தொழில்.—பார்மோஸாவென்பது சீனக்கடலிலுள்ள ஒரு தீவு. இது ஜப்பானுக்கு ஸொந்தமானது. அங்கே ஜப்பானியர்கள் கரும்பு ஸாகுபடியை ரொம்ப வ்ருத்திசெய்வதிலும் புது சர்க்கரை மில்லுகள் ஸ்தாபிப்பதிலும் அதிக ஊக்கம் காட்டி வருகிறார்கள். இதனால் அந்தத் தீவானது சர்க்கரை ஏற்றுமதிசெய்யும் தேசங்களில் ஒன்றாக ஆகிவருகிறது. 17 கம்பெனிகள் இந்த சர்க்கரைத் தொழிலை நடத்துகின்றன. அந்தக் கம்பெனிகளின் மொத்தத்தில் செலுத்தப்பட்ட மூலதனம் 40 லக்ஷம் பவுனாகும். கவர்ன்மெண்டார் கரும்பு வேலை ஸம்பந்தமாக பரீக்ஷைகள் செய்து பார்த்தும், விதைக் கரும்புகளையும், உரங்களையும் கொடுத்தும் உதவி வருகிறார்கள். சென்ற 1912-ம் வருஷத்தில் 2,42,800 டன் சர்க்கரை ஏற்றுமதியாயிருக்கிறது. இது 1910ம் வருஷத்தைக்காட்டிலும் 20,000 டன் அதிகமாயிருக்கிறது. இவ்வளவு சர்க்கரையில் அநேகமாய் முழுவதையும் ஜப்பான் வரவழைத்துக்கொண்டது. 4100 டன் மாத்ரம் சீனவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஜாவா தீவிலிருந்து இந்தியாவுக்கு சர்க்கரை வருவது போல் பார்மோஸாவிலிருந்து சர்க்கரை இன்னம் இந்தியாவுக்கு வரவில்லை. ஆனால் பார்மோஸாவில் சர்க்கரை உற்பத்தி அதிகமானால் கல்கத்தா பம்பாய் நகரங்களுக்கு அனுப்பப்படலாம். பார்மோஸாவில் உள்ள கரும்பு மில்லுகள் தினமொன்றுக்கு 24,450 டன் கரும்பை ஆலையாட்டக்கூடும். ஆனால் அவ்வளவு கரும்பு இப்போது ஆலையாடுவதில்லையாம்.

**Dried Plantains.**

வாழைப்பழவற்றல்.—காய்கள் நன்றாய் முற்றிப் பழுக்குமுன் குலை அறுக்கப்படும். காய் பசுமையாயிருக்கு மாதலால், இந்த வேலை அனுபோகமுள்ளவர்களால் நடத்தப்படும். குலை வீட்டுக்கு வந்ததும் சீப்புகளை அறுத்து வீட்டு மத்தியில் அமைக்கப்பட்ட 10 அடி அகலமும் 10 அடி உயரமுமான மூங்கில் தடுக்குக் குதிர்களில் சேர்ப்பார்கள். குதிரடியில் வைக்கோல் போட்டு சீப்புகள் வரிசையாக ஒன்றின் பேரில் ஒன்றாக அடுக்கப்படும். மேல் வரிசையின் பேரில் வாழைச்சருகு போட சூடு உண்டாகும். இந்த குதிரில் 12,000 முதல் 15,000 பழம் கொள்ளும். காலையில் அடுக்கி மூன்றும் நாளில் எடுக்க காய் மஞ்சள் நிறமாகும்.

மண் புழுதியில்லாத சாணிப்பாலால் மெழுகிய களத்தில் 6 அடி அகலம் 8 அடி நீளமுள்ள மூங்கில் தடுக்கின் பேரில் உரித்த பழத்தை ஒழுங்காய் உலரவைப்பதுண்டு. சிலர் 10 அடி உயரம் பரணில் உலர்த்துவதுண்டு. முதல்நாள் உரித்த சாய் வெளுத்திருக்கும்.

ஒரு நாள் முழுதும் உலர்ந்த பிறகு ஸாயுங்காலம் பனி உண்டாகுமுன் சேர்த்து வாழைச்சருகால் மூடப்படும். இவ்வாறு மூன்று பகல் மூன்று ராத்திரி நடந்தேறிய பின்பு நாலாம் பகலில் பழம் விற்கத்தக்க ஸ்திதியிலிருக்கும். அப்போது பழத்துக்கு இயற்கையான கண்வரும். நிறமுண்டாகும். தடிப்பாக இருந்த பழம் மிருதுப்பட்டு சப்பையாகி வற்றலாகும். உலர்ந்தது இனிப்பு அதிகப்பட்டிருக்கும். இது தக்கபடி உலர்த்தப்பட்டால் ஆறுமாதம் கெடாமலிருக்கும்.

கடைக்கு அனுப்பு முன் 12 பழத்தை அடுக்கி அதன் மேல் வாழைச் சருகைச் சுற்றி வைப்பதுண்டு. ஒரு ராத்தல் சில்லரையில் 4 அணு விற்கும்.

**The Pudukottai Exhibition.**

புதுக்கோட்டையில் பொருட்காட்சி.—புதுக்கோட்டையில், மார்த்தாண்ட விவஸாய கைத்தொழில் கல்விப் பொருட்காட்சி சென்ற டிஸம்பர்மீ 21-ந் தேதியன்று, இரண்டாம் தடவையாக நடைபெற்றது. திவான் பேஷ்கார் ராவ்பகதூர் தர்மரங்கராஜா பொருள்காட்சியை அன்று ஸாயந்தரம் திறந்துவைத்தார். இந்தப் பொருள்காட்சியில் உள்நாட்டில் செய்யப்பட்ட அநேக கைத்தொழிற் ஸாமான்களும், விவஸாயப் பொருள்களும் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருந்ததோடு கல்வியைப்பற்றியும், கைத்தொழிலைப் பற்றியும், ப்ரஸங்கங்கள் செய்யப்பட்டன. பொருள் காட்சியில் அநேகவித நூதன தறிகளும், விசேஷமான உள்நாட்டுக் கைத்தொழில் ஸாமான்களும் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்ததோடு கோயமுத்தூரிலிருந்தும் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தைச் சேர்ந்த பாகங்களிலிருந்தும், விவஸாயிகள் கண்டு அதிசயிக்கத் தக்கனவும் உருவத்தில் அவ்வளவு பெரிதானவுமான விவஸாயப் பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

# ECONOMICS.
# பொருளாதாரம்.

## Economic Condition of India.

இந்தியாவின் பொருள் நிலை.—லண்டனிலுள்ள மெஸ்ஸர்ஸ் ஸாம்யூல் மாண்டேகு கம்பெனியார் ஒரு வருஷாந்த அறிக்கைக் கடிதத்தை ஸமீபத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியாவின் பொருள் நிலை மிகவும்செழிப்பா யிருக்கிறதாகவும், ப்ரான்ஸ் முதலிய தேசத்தின் மிகுதிப்பணம் உலகத்தின் வ்யாபாரத்தில் செலாவணி யாகிறபோது இந்தியாவின் மிகுதிப்பணம் உபயோகப் படுத்தப்படாமல் வீணாகிற தென்றும் லாபம் வரக்கூடிய துறைகளில் தமது மிகுதிப் பணத்தை உபயோகிக்க இந்தியர்கள் கற்றுக்கொண்டால் மிக நன்மையாக இருக்குமென்றும், இந்தியாவின் மிகுதிப் பணத்தில் பெரும்பாகம் புதைக்கப்பட்டுப் போகிறதென்றும் தென் ஆபிரிகாவில் வெட்டியெடுக்கப்படும் பொன்னில் பெரும்பாகம் மறுபடி இந்தியாவில் புதைக்கப்பட்டுப் போகிறதென்றும் அந்த அறிக்கையில் அந்தக் கம்பெனியார் அறிவிக்கிறார்கள்.

## Peasant Farming.

சிறு குடிகளின் விவஸாயம்.-இங்க்லாந்துதேசத்து விவஸாயி ஸாதாரணமாய் அன்னவைஸ்த்ரத்துக்குள்ள வனாகவே இருக்கிறான். அந்ததேசத்து விவஸாய வேலையாளும் மற்ற ஐரோப்பிய தேசங்களிலும், அயர்லாந்திலுமுள்ள குடியானவர்களைவிட அதிகம் செலவு செய்து ஜீவிக்கிறவனாக விருக்கிறான். விவஸாயிகளே ஸொந்தமாகப் பயிரிடும் நிலங்களில் அதிகமாஸூல் கிடைக்கிறது. அதனால் ஒரு சதுரமைல் விஸ்தீரண நிலத்தில் மற்றவிடங்களைவிட அதிக ஜனங்கள் நிலவரும்படியைக்கொண்டு ஜீவிக்க முடிகிறது. உதாரணமாக, ஜப்பானில் ப்ரதானமான தீவுகளில் 20,000 சதுரமைல் விஸ்தீரணம் ஸாகுபடியாகிறது. இதில் கிடைக்கும் மாஸூலைக்கொண்டு 470 லக்ஷம்ஜனங்கள் ஜீவிக்கிறார்கள். கணக்கெடுத்துப் பார்த்ததில் ஒரு சதுரமைல் விஸ்தீரணமுள்ள ஸாகுபடி நிலத்தில் 1900 க்ராமவாஸிகள் ஜீவிக்கிறார்கள். சீனாவில் இத்தொகை அதிகமாயிருக்கிறது. அங்கே சில ஜில்லாக்களில் ஒரு சதுரமைலுக்கு 3,700 வரையிலும் இருக்கிறார்கள். இங்க்லாந்து, வேல்ஸ் இவைகளிலோ ஒரு சதுர மைல் ஸாகுபடி நிலத்தில் 126 க்ராமவாஸிகள் ஜீவிக்கிறார்கள். நிலத்தை நம்பின ஜனங்கள் அதிகமாக ஆக அவர்களுக்கு ஜீவனம் மட்டாகிவிடுகிறது.

## High Cost of Living.

விலைவாசி அதிகரித்தல்.—இது விஷயமாய் பயனீயர் பத்ரிகையின் கல்கத்தா நிருபர் பின்வருமாறு எழுதுகிறார். இப்பொழுதைக்கு ஸுமார் 4-வருஷத்துக்கு முன்னால் கல்கத்தா வாஸியொருவர், கல்கத்தாவில் ஜீவனத்துக்கு வேண்டிய அம்சம் எல்லாவற்றினுடையவும் விலை (கூலிமுதலியவை) அதிகரித்திருப்பதைப்பற்றிச் சில ஆராய்ச்சிகள் செய்து அந்த ஆராய்ச்சிகளின் முடிவை வெளியிட்டார். அவர் செய்த முடிவு என்ன வென்றால், கல்கத்தாவிலே சென்ற 20-வருஷகாலத்துக்குள் ஜீவனச் செலவு 100-க்கு 40-வீதம் அதிகரித்திருக்கிறது. தனி பாபத்துச்களில், வீட்டு வாடகை 100-க்கு 50 வீதமும், உணவுபொருள்கள் 100-க்கு 33 முதல் 50 வீதமும், வேலைக்காரர்களின் கூலி 100-க்கு 33 வீதமும் அதிகரித்திருக்கின்றன என்பதே. உணவுப் பொருள்களில் மாம்ஸம், மீன், கோழி ஆகிய இவைகள் விலையில் அதிகரித்திருக்கின்றன. காய்கரிகள் பழங்கள் ஐரோப்பிய ஸாமான்கள் முன்போலவே இருந்தன. கல்கத்தாநகரம் ரொம்ப செல்வ அபிவ்ருத்தியடைந்து வருவதே இப்படி விலைவாசி அதிகரிப்பதற்குக் காரணமாகும் என்று சொல்லலாம். வீட்டுவாடகைத் தொகையை ஆதாரமாக் கொண்டு விதிக்கப்படும் முனிஸிபல் வீட்டுவரி சென்ற 20-வருஷங்களுக்குள் இரண்டு மடங்காகி யிருப்பதும், இறக்குமதி நூற்றுக்கு 75-அதிகரித்திருப்பதும், ஏற்றுமதியும் அநேகமாய் அதே அளவுக்கு அதிகரித்திருப்பதும், நகரம் செல்வ அபிவ்ருத்தி யடைந்திருக்கிறதென்று காட்டுகின்றன. மேலும், ரெயில்வே வழியாக இறக்குமதியாவதில் ஈஸ்ட் இந்தியன் ரெயில்வே மூலமாய் செய்யப்பட்ட இறக்குமதி $3\frac{1}{2}$ மடங்கும், ஈஸ்டர்ன் பெங்கால்ஸ்டேட் ரயில்வேயால் செய்த இறக்குமதி 8 மடங்கும், அதிகரித்திருக்கின்றன, என்று அவர் சொன்னார். இப்பொழுதுள்ள நிலைமையை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் செலவு அதிகமாகியிருப்பதென்பதற்கு யாதொரு ஸந்தேசமும் இல்லை என்று சொல்லலாம். ஆனால் வ்யாபாரம் அதிகமாகவும் த்ருப்திகரமாயிருந்தாலுங் கூட செலவு அதிகரித்ததற்குத் தகுந்தபடி வ்யாபாரம் அவ்வளவுதூரம் அதிகரித்திருக்கிறதா என்பது ஸந்தேகமாகத்தான் இருக்கிறது.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

**Madras Provincial Co-operative Union, Ltd.**

சென்னை ப்ரோவின்ஷ்யல் கோவாபரேடிவ் யூனியன் லிமிடேட்.—கோவாபரேஷனை வ்ருத்தி செய்வதற்காக ஒரு முக்ய கோ-வாபரேடிவ் ஸங்கம் ஏற்பட வேண்டும் என்று சென்னை ப்ரொவின்ஷயல் கோவாபரெடிவ் கான்பரென்ஸில் தீர்மானித்தார்கள். அதன்படியே மேற்கண்ட பெயருடன் ஒரு ஸங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது சீக்கிரம் கோவாபரேடிவ் ஸொஸைடி ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்படும்.

அதன் தற்கால ஸெக்ரடெரி அந்த ஸங்கத்தைப் பற்றிப் பின் வருமாறு தெரிவிக்கிறார்.

(1) இது லாபத்தை உத்தேசித்து நடத்தப்படும் கம்பெனியாயிருக்காது.

(2) இதன் மூலதனம் 50,000 ரூபா. பங்கு ஒன்றுக்கு 5 ரூபாயாக 10,000 பங்குகளாகப் பிரிக்கப்படும். இந்த மூலதனம் அங்கீகரிக்கப்பட்ட பாங்கிகளில் வட்டிக்குப் போடப்படும்.

(3) மூலதனத்திலிருந்து கிடைக்கும் வரும்படி கோவாபரேஷனை அபிவிருத்தி செய்ய செலவழிக்கப்படும்.

இந்த ஸங்கத்தின் மெம்பர்கள்:—

(a) ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கோவாபரேடிவ் கோவாபரேடிவ் ஸங்கங்கள். இவைகளின் டெலிகேட்டுகள் ஸங்கத்தில் ப்ரதிநிதிகளாயிருப்பார்கள்.

(b) ஸாதாரண மெம்பர்கள்; ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள் எடுத்துக் கொள்பவர்கள்.

(c) போஷகர்கள். குறைந்தது 100 ரூபாய் நன்கொடை யளித்தவர்கள். இந்த ஸங்கத்தின் நோக்கமாவன; கோவாபரேஷனை பரவச்செய்தல், கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபித்தல், அவைகளைப் பற்றிய விஷயங்களைக்கவனித்து வருதல். இன்னம் கோவாபரேஷனை நல்ல ஸ்திதியில் வைப்பதற்குவேண்டியவைகள் எல்லாம் செய்வது. இதுவிஷயமாய்த் தகவல் வேண்டியவர்கள் தற்கால ஸெக்ரிடெரிக்கு எழுதிக்கொள்ளவும்.

**Co-operation is a Business.**

கோவாபரேஷனும் ஒரு வ்யாபார முறையே.—கோவாபரேடிவ் க்ரெடிட் ஸொஸைடியின் ரெஜிஸ்ட்ரராகிய மிஸ்டர் எல். டி. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை ஸமீபத்தில் கோவாபரேஷனைப்பற்றிப் பின்வருமாறு பேசினார்.

"ஜனங்கள் கோவாபரேஷனைப் பற்றி ரொம்பவும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு பொதுவாய் அதைப்பற்றித் தெளிவாய் ஒன்றும் தெரியாது. ஜனங்கள் கோவாபரேஷனைப் பற்றி அநேகவிதமாய் அபிப்ராயப்பட்டுப் பேசுகிறார்கள். ஒரு க்ராமத்து ஜனங்கள் ஒன்று சேர்ந்து க்ராமக் குளத்தையோ, ஸத்ரத்தையோ, கோவிலையோ கட்டுவதற்காக ஒன்று சேர்ந்து வேலைசெய்தால், தாங்கள் கோவாபரேஷனை உபயோகித்ததாகச் சொல்லுகிறார்கள். சில கல்விமான்களோ, சாஸ்த்ரஜ்ஞர்களோ ஒரு ஸங்கம் நடத்துவதற்காக அல்லது ஒரு புஸ்தகம் தயார்செய்து வெளிப்படுத்துவதற்காக ஒன்றுகூடி உழைத்தால், அப்பொழுதும் கோவாபரேஷன் என்கிறார்கள். ஆனால் இந்த விதமான கோவாபரேஷன்களிலெல்லாம், நோக்கமாகக் கொள்ளப்பட்டது அல்லது விரும்பினதெல்லாம், ஜன ஸமூகத்துக்கு கட்டுப்பட்டுச்செய்யும் உதவியும், பொருள் உதவி செய்யப்பட்டால் அது இனாமாகச் செய்யப்பட்ட உதவியுமாகும். இப்பொழுது ஜனங்கள் கவனித்து வருகிற கோவாபரேடிவ் ஸொஸைடிகளின் நோக்கம் என்னவென்றால் இந்த கோவாபரேஷனில் சேர்ந்தவர்களுக்காகப் பணம் ஸம்பாதிப்பதே. இது மேலான நோக்க மல்லத்தான். ஜனங்கள் கோவாபரேஷன் என்பது லோகோபகார குணத்துக்கும் மேலானதென்றும் அல்லது லோகோபகாரச் செய்கைகளில் இதுவும் ஒன்றாகும் என்றும் எண்ணுகிறார்கள். ஜனங்கள் அனுஷ்டானத்தில் கோவாபரேஷனுக்கும் பரோபகாரத்துக்கும் உள்ள வித்யாஸத்தையும், கோவாபரேஷனுக்கும் தர்மத்துக்கும் உள்ள வித்யாஸத்தையும் அறிந்துக்கொள்ள வேண்டும். கோவாபரேஷன் என்பது லோகோபகாரமுமல்ல, தருமமும் அல்ல; அது ஒரு வ்யாபார முறை. கோவாபரேஷன் என்னும் வ்யாபாரத்துக்கும் மற்ற வ்யாபாரங்களுக்கும் என்ன வித்யாஸ மென்றால் அவைகளை நடத்தும் வழியிலுள்ள வித்யாஸங்கள்தான்.

# INSURANCE.
# இன்ஷ்யூரென்ஸ்.

## A Novelty in Accident Insurance.

தற்செயலான ஆபத்துக்கள் இன்ஷ்யூரென்ஸில் ஒரு நூதன முறை.—"ரெயில்வே ப்ரயாணி அஷ்யூரென்ஸ் கம்பெனி" யானது தற்செயலாய் நேரிடும் ஆபத்துகளுக்கு இன்ஷ்யூரென்ஸ் பாலிஸிகளை போஸ்டுகார்டு ரூபத்தில் கொடுத்து வருகிறது. அந்த பாலிஸியை இன்ஷ்யூர் செய்தவன் கையெழுத்திட்டு தன்னுடைய ஸ்நேகிதர்களுக்கு தபாலில் கார்டைப் போல் அனுப்பிவிடலாம். இப்படிச் செய்வதனால் ஸ்நேகிதர்களுக்கு இந்த இன்ஷ்யூரென்ஸ் பாலிஸி இருப்பது தெரியலாகிறது. இந்தப் பாலிஸி பத்ரமானது ரெயிலிலாவது படகுகளிலாவது நாசமடைந்து விடுமோ என்னும் பயமும் குறைகிறது.

## Insurance Fraud.

இன்ஷ்யூரென்ஸ் மோசம்.—ந்யூயார்க்கில் வீடுகளில் நெருப்பு வைத்த குற்றத்துக்காக ஸ்டீன் என்பவனுக்கு தண்டனையாயிற்று. அப்பொழுது அவன் சில விஷயங்கள் சொன்னான். அவைகளைக் கேட்டால் ப்ரமம் உண்டாகிறது. ஸ்டீன்சொன்னவைகளை ஆதாரமாகக்கொண்டு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளின் கீழ் உத்யோகஸ்தர்கள் பலரையும், இன்னும் சிலரையும் அரெஸ்டு செய்திருக்கிறார்கள். ஸ்டீனும் இன்னும் சிலபேர்களும் சேர்ந்து லஞ்சத்துக்காசைப் பட்ட இன்ஷ்யூரென்ஸ் இன்ஸ்பெக்டர்களை கைக்குள் போட்டுக் கொண்டு உபயோகமற்ற வீடுகளை இன்ஷ்யூர் செய்து, பிறகு அவ்வீடுகளுக்கு நெருப்பு வைத்து வந்தார்கள் என்று தெரியவருகிறது. இப்படி ஆயிர வீடுகளுக்கு தீ வைத்திருப்பார்களாம்.

## Special Hints for Insurance Agents.

இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டுகளுக்கு வேண்டிய சில விசேஷ குறிப்புகள்.—சென்ற மார்கழிமாசத்து ஸஞ்சிகையில் இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டுகளுக்கு வேண்டிய சில குறிப்புகள் ப்ரசுரித்திருக்கிறோம். இப்பொழுது அவர்களுக்கு வேண்டிய சில விசேஷக் குறிப்புகள் இங்கெழுதுகிறோம்.

(1) இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டின் வேலை யென்ன வென்றால், ஜனங்கள் இன்ஷ்யூரென்ஸ் விஷயமாய்க்கொண்டிருக்கும் தப்பெண்ணங்களை மாற்றி, அவர்களுக்கு இன்ஷ்யூரென்ஸ் செய்வதால் உண்டாகும் நன்மைகளை எடுத்துக்காட்டி, இன்ஷ்யூர் செய்ய வேண்டியதற்குத் தக்க காரணங்களைச்சொல்லி, அவர்களை இன்ஷ்யூர் செய்ய இணங்கும்படி செய்வதே. ஆகையால் ஏஜெண்டானவர் இன்ஷ்யூரென்ஸைப்பற்றிய எல்லா விஷயங்களையும் நன்றாய் அறிந்திருக்க வேண்டும்; பற்பல கம்பெனிகளில் ஏற்பட்டுள்ள ரேட்டுகளையும், அவைகள் கொடுக்கும் ஸௌகர்யங்களையும், ஒத்துப்பார்த்து, தாம் இருக்கும் கம்பெனியில் ரொம்ப நல்ல ஸௌகர்யங்கள் இருக்கின்றன வென்பதை ஸந்தேகந் தீரத் தெரிந்துகொள்ள வேண்டும்.

(2) இன்ஷ்யூர் செய்யச் சொல்லும் ஜனங்களுக்கு ஏஜெண்டின்மேல் நம்பிக்கை யுண்டாகும்படி ஏஜெண்டானவர் குறைந்தது 1000-ரூபாய்க்காவது தம்முடைய ஆயுளை இன்ஷ்யூர் செய்திருக்கவேண்டும். அவருக்குக் கமிஷன் அதிகரிக்கும்போது தமது இன்ஷ்யூரென்ஸ் தொகையையும் அதிகரிக்க வேண்டும்.

(3.) இன்ஷ்யூரென்ஸ் ஸம்பந்தமான ப்ராஸ்பெக்டஸுகளையும் சிறு புஸ்தகங்களையும் கண்டவர்களுக்கெல்லாம் கொடுத்து இறைப்பதில் அதிக ப்ரயோஜனமில்லை யென்று நாள்பட்ட அனுபவத்தால் தெரிய வருகிறது. அச்சடித்த அல்லது, டைப் செய்த கடுதாசிகள் புஸ்தகங்கள் ஏராளமாய் ஜனங்களுக்குக் கொடுப்பதைவிட ஏஜெண்டே நேரில் சென்று சில நிமிஷங்கள் இன்ஷ்யூரென்ஸ் விஷயமாய்ப் பேசுவது ரொம்ப லாபகரமானது.

(4) சென்ற மார்கழிமாஸத்து ஸஞ்சிகையில் குறித்திருக்கும் குறிப்புகளை ஏஜெண்டு அனுஷ்டித்து வந்தால் அவருக்குக் காரியஸித்தியாகும் என்பதில் தடையில்லை.

(5) ஏஜெண்டு போய்ப் பார்க்கும் ஜனங்களில் அநேகர் முதலில் இன்ஷ்யூர் செய்ய ஸம்மத மில்லாதவர்களாயிருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு ஸௌகர்யமாயிருக்கும் நேரங்களில், ஏஜெண்டு அவர்களை அடிக்கடி போய் பார்த்துவரவேண்டும். ஆனால் அவர்கள் வேலையாயிருந்தால் அவர்களைப் போய் பார்த்துத் தொந்தரை கொடுக்கக்கூடாது. ஆயுளை இன்ஷ்யூர் செய்வதால் உண்டாகும் ஸௌகர்யங்களை அவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும். இப்படிச் செய்தால் முதலில் இன்ஷ்யூர் செய்ய இஷ்டப்படாத அநேக ஜனங்கள் பிறகு தங்களுடைய ஆயுளை இன்ஷ்யூர் செய்து, அவர்களுடைய ஸ்நேகிதர்களுக்கும் ஏஜெண்டை பரிச்சியம் செய்து வைப்பார்கள்,

# EDUCATION.
## வித்யா விஷயம்.

### Free Primary Education.

இலவசப்படிப்பு.—ஜம்கந்தி ஸமஸ்தானத்தில் ஆறு வருஷகாலமாய் ப்ரைமரிப் படிப்பு இலவசமாய்க் கொடுத்துவருகிறார்கள். இப்பொழுது அந்த ஸமஸ்தானத்தில் 75 இலவசப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவைகளில் 6,204 மாணவர்கள் இருக்கிறார்கள். பட்டணங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் 7-வது ஸ்டாண்டர்டு வரையில் தேச பாஷையில் படிப்புச்சொல்லிக்கொடுக்கப்படுகிறது. க்ராமங்களில் 4-வது ஸ்டாண்டர்டு வரையில் சொல்லிக்கொடுக்கப் படுகிறது. கீழ்ஜாதிப் பிள்ளைகளுக்கு சாப்பாடு, புஸ்தகம், ஸ்லேட் இவைகள் இலவசமாகக் கொடுத்து பள்ளிக்கூடத்துக்குப் போகத் தூண்டுகிறார்கள். இதனால் கீழ் ஜாதிகளில் 258 பையன்களும் 52 பெண்களும் பள்ளிக்கூடங்களில் படித்துவருகிறார்கள். படிப்பு விஷயமாய் அந்த ஸமஸ்தானத்து வரும்படியில் 15-ல் ஒரு பாகம் செலவாகிறது.

### The Calcutta College of Science.

கல்கட்டா ஸயன்ஸ் காலேஜ்.—கல்கட்டா யூனிவர்ஸிடிக்கு தாரகநாதபலித் என்ற கனவான் கொடுத்த 14½ லட்சம் ரூபாயில் 2½ லட்சம் ரூபாயை கல்கட்டாவில் ஒரு ஸயன்ஸ் காலேஜ் ஸ்தாபிக்க அந்த யூனிவர்ஸிடி எடுத்து வைத்திருக்கிறது. ஸயன்ஸ் காலேஜ் ஸ்தாபனத்துக்கு 40 லட்சம் ரூபாய் பிடிக்குமாம். அதுபற்றி கல்கட்டா யூனிவர்ஸிடியார் அந்த ஸயன்ஸ் காலேஜ் ஸ்தாபனத்துக்காகப் பொருளுதவி செய்யும்படி வங்காள கவர்ன்மெண்டைக் கூடிய சீக்ரம் கேட்பார்கள்.

### Degrees in Sanskrit Learning.

கல்கத்தாவில் ஸம்ஸ்கிருத பட்டங்கள் வழங்கும் கான்வகேஷன்:—கல்கத்தாவில் ஸம்ஸ்க்ருதத்தில் உயர்தர பரீக்ஷை கொடுப்போருக்குப் பட்டங்கள் கொடுப்பதற்காக ஒரு போர்டு ஏற்பாடாய் வேலை செய்து வருகிறது. அந்த போர்டுக்கு கல்கத்தாயூனிவர்ஸிடி வைஸ் சான்ஸலராகிய டாக்டர் அஷுடோஷ் முகர்ஜி ப்ரெஸிடெண்டாயிருக்கிறார்.

அந்த போர்டார், ஸம்ஸ்க்ருத பரீக்ஷைகளில் தேறியவர்களுக்குப் பட்டங்கள் கொடுப்பதற்காக தங்களுடைய முதல் கான்வகேஷனை ஸமீபத்தில் நடத்தினார்கள். அப்பொழுது டாக்டர் முகர்ஜி பேசிய பேச்சிலிருந்து அந்த ஸம்ஸ்க்ருத பரீட்சை போர்ட் ஸ்தாபிக்கப்பட்டபோது 4000 அல்லது 5000 பிள்ளைகள் பரீட்சைகளுக்குப் போய்க் கொண்டிருந்தார்களென்றும், இப்போது பரீட்சைகளுக்குப் போகும் பிள்ளைகளின் தொகை 10000 ஆக அதிகப்பட்டுப் போய் விட்டதென்றும் தெரிகிறது.

### Grants for Elementary School Gardens.

எலிமெண்டேரி ஸ்கூல் தோட்டங்களுக்கு க்ராண்டு.—எலிமெண்டரி ஸ்கூல் தோட்டங்களின் அபிவ்ருத்திக்காக ஸாங்க்ஷன் செய்யப்பட்ட 10,000 ரூபாய் க்ராண்டுத் தொகையை டிரெக்டர் அப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் சென்னை ராஜதானியைச் சேர்ந்த அடியிற்கண்ட டிஸ்ட்ரிக்ட் போர்டு முனிஸிபாலிடிகளுக்கு அடியிற்கண்ட தொகையைப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்:—

| | | ரூபா. |
|---|---|---|
| 1 | கஞ்சம் | 400 |
| 2 | விசாகப்பட்டணம் | 400 |
| 3 | கோதாவரி | 400 |
| 4 | க்ருஷ்ணா | 300 |
| 5 | குண்டூர் | 450 |
| 6 | நெல்லூர் | 400 |
| 7 | பல்லாரி | 450 |
| 8 | அனந்தபுரம் | 400 |
| 9 | கடப்பை | 400 |
| 10 | கர்நூல் | 400 |
| 11 | செங்கல்பட்டு | 400 |
| 12 | நீலகிரி | 350 |
| 13 | கோயமுத்தூர் | 400 |
| 14 | சேலம் | 400 |
| 15 | வடஆற்காடு | 400 |
| 16 | சித்தூர் | 400 |
| 17 | தஞ்சாவூர் | 450 |
| 18 | திருச்சினாப்பள்ளி | 400 |
| 19 | தென்னாற்காடு | 400 |
| 20 | ராமநாதபுரம் | 600 |
| 21 | மதுரை | 250 |
| 22 | திருநெல்வேலி | 450 |
| 23 | மலையாளம் | 600 |
| 24 | தென்கன்னடம் | 400 |
| 25 | பெஜவாடா முனிஸிபாலிட்டி | 70 |
| 26 | மஸிலிப்பட்டணம் முனிஸிபாலிட்டி | 30 |
| | மொத்தம். ரூ. | 10,000 |

இதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

**Ivory Nut Palm (Corozo Nut).**

கோரஸோநட்மரம்.—இது பனைவர்க்கத்தைச் சேர்ந்த தாழைஸமாய் வளரும் ஒருமரம். இதன் இலைகள் 10-15 அடி நீளம் உள்ளவை. இது மத்ய அமெரிக்காவில் உண்டாகும் மரம், இலங்கையில் பேராதனையிலுள்ள ராயல் பொடானிகல் தோட்டத்தில் 1850-ம் வருஷத்தில் முதல் முதல் கொண்டு வந்து பயிரிடப்பட்டது. சென்ற 15-வருஷகாலமாக புஷ்பித்து பலனைக் கொடுத்து வருகிறதாம். இந்த மரம் முதலில் அநேக வருஷசாலம் அடிமர (தண்டு) மில்லாமல் இருந்து பிறகு குட்டையான அடிமரம் வளருகிறது. இந்த மரத்தில் ஆண்மரம் பெண்மரம் என்றிரண்டு வகை உண்டு. இரண்டு மரமும் பயிரிட்டால்தான் நல்ல பலன் கொடுக்கக் கூடிய விதைகள் உண்டாகும். இந்த மரத்துக்கு ஆணிபோன்ற முட்கள் உள்ள கனிகள் உண்டு. கனிகளினுள் வெண்மையான விதைகளிருக்கின்றன. விதைகள் முற்றி மிகவும் கெட்டியாகின்றன. அந்த விதைகளுக்குத்தான் “ தாவரதந்தம்” என்று பெயர். அவைகளால் உயர்ந்த பொத்தான்களும் அணிகலன்களும் செய்கிறார்கள். இந்த விதைகள் இப்போது அந்தர் 225-ரூபாய் வரையில் விலைபோகின்றனவாம். இந்த விதைகள் இப்போது மத்ய அமெரிக்காவிலிருந்துதான் வருகின்றன. அங்கே வருஷந்தோறும் 480 லக்ஷம் ராத்தல் வரையில் விதைகள் உற்பத்தியாகின்றனவாம். அவை முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இலங்கையில் தாளிப்பனையின் (Corypha umbraculifera) விதைகள் (கொட்டைகள்,) கிட்டத்தட்ட தந்த மவ்வளவு கெட்டியாயிருக்கின்றன வென்றும், கொரோஸோநட்டைப்போல் பொத்தான்கள், மாலைகள் கோர்க்கும் மணிகள், போலிப்ப வழங்கள் முதலியவைகள் செய்ய உபயோகப்படுகின்றன வென்றும் சொல்லப்படுகிறது.

**Loofa.**

பீர்க்கங்காய்.–பீர்க்கங்காய் முற்றிக்காய்ந்து போனால் அதன் உள்புறம் வலைவலையான கூடு இருப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஷை கூடுகளை ஒரு இங்லீஷ் கம்பெனியார் ஏராளமாய் விலைக்கு வாங்க முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் அந்தக் கூடுகளைக் கொண்டு ஸாக்ஸ் அல்லது கால்மேஜோடு செய்ய உபயோகிக்கிறார்களாம். பீர்க்கு ஜாதியில் மூன்று நான்கு இனங்கள் நம்தேசத்திலிருக்கின்றன. இரண்டு இனம் வரையில் போஜனத்துக்கு உபயோகப்படுகின்றன. நாம் சாப்பிடும் பீர்க்குக்கு லூபா அக்யூடாங்குலா (Loofa acutangula) என்று பெயர். வலைபோன்ற கூடுகளை ஸ்திரீகள் ஸ்நான காலத்தில் உடம்பு தேய்த்துக்கொள்ள சிலவிடங்களில் உபயோகிக்கிறார்களாம். இந்தியாவில் இந்த பீர்க்கங்கூடுகள் விற்பதற் கென்று பீர்க்கை விருத்தி செய்வது கிடையாது என்னலாம். ஐரோப்பாவில் ஷைகூடுகள்ரொம்ப விலைப்போகின்றனவாம். ஜப்பானில் லூபாஸிலிண்ட்ரிசா (Loofa cylindrica) என்ற ஜாதிப்பீர்க்கை ஸாகுபடி செய்து அதன் கூடுகளை ஜெர்மெனிக்கு அனுப்புகிறார்கள். ஒவ்வொன்றும் 18-அங்குலம் நீளமுள்ள 100-கூடுகளுக்கு ரூ.1-8-6 விலை என்று தெரிகிறது. ஜப்பானிலிருந்து ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட்ட பீர்க்கங்கூடுகளின் தொகை 1906-ம் வருஷம் முதல் 1910-வருஷத்துக்குள் 34,56,106-லிருந்து 1,28,30,558 - வரையில் அதிகரித்திருக்கிறது. பொதுவாய் அற்பமென்று எண்ணப்படும் பீர்க்கங் கூடுகள் எவ்வளவு லாபம் கொடுக்கக் கூடியவை என்பதை இந்தியர்கள் கவனிக்கவேண்டும்.

**Sunflower.**

ஸூர்யகாந்தி.—ஸூர்யகாந்திச்செடி நமது தேசத்தில் பெரும்பாலும் அதன் அழகான புஷ்பத்துக்காகவே தோட்டங்களில் பயிரிடப் படுகிறது. ஐரோப்பாக்கண்டத்திலுள்ள ரஷ்யா தேசத்திலும், மற்றவிடங்களிலும், அமெரிக்கா கண்டத்துச் சிலவிடங்களிலும் விதைக்கென்று ஸூர்யகாந்தியை ஸாகுபடி செய்கிறார்களாம். விதையிலுள்ள பருப்பு சாப்பிடுவதற்குதவும் ஸூர்யகாந்தி விதையில் ஸராஸரி 100-க்கு 30 பங்கு தைலம் இருக்கிறதாம். ஸூர்யகாந்தி எண்ணெய் ருசியுள்ளதாலும், நல்ல வாஸனையுள்ளதாகவு மிருப்பதாலும் அதை மேல் நாட்டார் சாப்பாட்டில் உபயோகிக்கிறார்கள். மேலும் அது ஸோப் (சவர்க்காரம்) செய்வதிலும் உபயோகப் படுகிறது. எண்ணெய் தெளிவாயும், லேசான மஞ்சள் நிறமாயும் இருக்கிறது. அதன் பிண்ணாக்கை கலப்பு உணவுபொருள் செய்வதில் உபயோகிப்பதைப்பற்றி சில பரீக்ஷைகள் நடந்து வருகின்றன. தற்போது ரஷ்யாவிலிருந்து ஏராளமான ஸூர்யகாந்தி விதை இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு ஏற்றுமதி யாகிறதாம். இந்தியாவில் இந்தச்செடியை ஒழுங்காய்ப் பயிரிட்டால் நல்ல லாபம் உண்டாகு மென்று சொல்லலாம்,

# BUSINESS METHODS.
## வ்யாபார முறைகள்.

### Losing Concern.

நஷ்ட வ்யாபாரம்.—ஒரு கம்பெனிக்கு ஸரியான லாபம் வராவிட்டாலும் ஸரி, அல்லது நஷ்டமாகிக்கொண்டு வந்தாலும் ஸரி, அப்படி யாவதற்குக் காரணம் என்னவென்று கண்டுபிடிக்கவேண்டும். ஸாதாரணமாய் ஸரியான மூலதனமில்லாததனுலோ அல்லது உள்ள மூலதனத்தை ஸரியானபடி உபயோகிக்காததனுலோதான் கம்பெனிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. கம்பெனியை வைத்து நடத்துபவர்களுக்கு வ்யாபார விஷயம் அதிகம் தெரியாததினுல் நஷ்டத்தின் காரணங்களை ஸரியாய்க் கண்டுபிடிக்க முடிவதில்லை. இப்படிப்பட்ட கேஸ்களில் தெரிந்தவர்களைக் கொண்டு காரணத்தைக் கண்டுபிடிக்கவேண்டும்.

### How to Secure a Prosperous Business.

வ்யாபாரத்தை ஓங்கச் செய்வது.—விளம்பர விஷயமாக யோசனை சொல்லு வோரின் ஸங்கத்து ப்ரெஸிடெண்டாகிய மிஸ்டர் தாமஸ் ரஸ்ஸல் என்பவர் ஒரு இங்க்லீஷ் பத்ரிகைக்கு எழுதுகிறுர்.

“விளம்பரம் செய்பவர் தமது ஸாமானைப்பற்றி எவ்வளவு அதிகமாக ஜனங்களுக்கு விளம்பர மூலமாகத் தெரிவிக்கலாமோ அவ்வளவுக்கு ஜனங்கள் த்ருப்தியடைகிறுர்கள். ஸாமான்களைப்பற்றி விஷயங்களைத் தெரிவித்தலே விளம்பரத்தின் முக்ய லக்ஷணமாகும். இப்படி ஸாமானைப்பற்றிய விவரங்களைத் தெரிவிப்பதனுல் அதை ஸமாசாரம் போல் ஜனங்கள் படித்துவிடுகிறுர்கள். தற்கால விளம்பரத்தால் ஜனங்கள் தங்களுடைய வாழ்நாளிலே உபயோகமாயிருக்கும் விஷயங்களை அறிந்து கொள்ளுகிறுர்கள்.”

### Points for Merchants.

வ்யபரிகளுக்கு சில குறிப்புகள்:—

வ்யாபாரிகள் விசேஷமாய் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன. அவைகளில் பொறுமை யென்பது ஒன்று. உலகம் பலவிதம். ஆகையால் நம்மிடம் வ்யாபாரம் செய்ய வருபவர்கள் பல இனத்தாராக இருக்கக்கூடும். கோபக்காரர்களும், சண்டைக்காரர்களும், துஷ்டர்களும், போக்கிரிகளும் ஸாதுக்களுமாக பல தினிஸா யிருப்பார்கள். நாம் அவர்கள் எல்லோரிடத்திலும் ஒரே மாதிரி யாகத்தான் பொறுமையுடன் பேசவேண்டும். வ்யாபாரம் செய்ய வருபவர்களிடம் நல்ல ம்ருதுவான பேச்சு பேசுவதினுல் அவர்களுக்கு நம்மிடத்தில் ஒரு விதமான நல்ல அபிப்ராயம் உண்டாகிறது. அந்த நல்ல அபிப்ராயம் நாம் வ்யாபாரம் செய்யும் சரக்கினிடத்தில் ஸாலபமாகமாறும். நல்ல மொழிகளினுல் எப்பேர்பட்டவர்களையும் ஸ்நேகமாக்கி கைவசப்படுத்திக்கொள்ளலாம். ஆகையால் வ்யாபாரிகள் பொறுமையுடையவர்களாகவும் ஸதா புன்சிரிப்புக் கூடினவர்களாகவும் இருப்பது அவச்யம். துஷ்டர்கள் நமக்கு கோபத்தை உண்டாக்கும்படியான பேச்சு பேசுவார்கள். அப்படி பேசினபோதிலும் நாம் பொறுமையாய் பதில் சொல்லுவோமாயின் அவர்கள் வெட்கிப் போவதுடன் பக்கத்தில் நிற்பவர்களுக்கும் நம்மிடத்தில் ஒரு நல்ல அபிப்ராயம் உண்டாகும். அப்படியல்லாமல் அந்த துஷ்டர்களோடு நாம் சண்டை போடுவோமாயின் பக்கத்தில் வ்யாபாரம் செய்ய வந்து நிற்பவர்கள் சண்டை ஓய்கிறவரையில் காத்திருக்க ப்ரியமில்லாதவர்களாய் வேறிடத்திற்கு வ்யாபாரம் செய்யப் போய் விடுவார்கள். நம்மையும் சண்டைக்காரர்கள் என்று அபிப்ராயம் கொண்டு மறுபடியும் நமது கடைக்கு வரமாட்டார்கள். ஒன்றேடு கூட இரண்டு மூன்று க்ராக்கிகள் இழக்கும்படியாய் நேரிடுகிறது. சில க்ராக்கிகளை நாம் என்ன செய்த போதிலும் ஸந்தோஷப்படுத்துவது கஷ்டம். மலிவாகக் கொடுத்தாலும் அவர்கள் மனதிற்கு ஸமாதானப்படுகிறதில்லை. சும்மா கொடுத்தால் கூட குற்றம் கண்டு பிடிப்பவர்கள் இரண்டொருபேர் இருப்பார்கள் என்பதற்கு ஐயமில்லை. இது மானிட ஜன்மத்திற்கு இயற்கையானதென்று எண்ணி நாம் அவர்களிடம் கோபங்காட்டாமல் புன்சிரிப்புக் கொண்டே பேசவேண்டும். ஜனங்களுடைய ஸ்வபாவ மறிந்து எவரெவர்களிடம் எந்தெந்த மாதிரியாக நடந்துகொள்ள வேண்டுமோ அந்தந்த மாதிரியாக நடந்துகொள்ள வேண்டியது இரண்டாவது முக்ய விஷயம். சிலர் ஜாஸ்தியாய் பேசுவதில் ப்ரியமுடையவர்களா யிருப்பார்கள். சிலருக்கு அதிகப்பேச்சு பிடிக்கிறதில்லை. சரக்கு நன்ருயிருத்தல் மாத்ரம் போதாது. நம்முடைய நடத்தை, குணம், நமது கடையிருக்கும் பாணி எல்லாம் க்ராக்கிகளை இழுப்பதில் ப்ரயோஜன முள்ளவைகளாக இருக்கின்றன. வ்யாபாரிகளுக்கு க்ராக்கிகள் ஜாஸ்தியாய் வரவேண்டும் என்பதைவிட மேலான கோரிக்கை யாது? அப்படியாயின் வ்யாபாரிகள் மேலே சொன்ன முறைகளை கவனிக்கவேண்டியது அவச்யம்.

# SCIENCE, MACHINERY AND INVENTION.

## சாஸ்த்ரமும், யந்த்ரங்களும் நூதன கற்பிதமும்.

### Blotting Paper.

மை ஒத்துங் காகிதம்.—"ப்ளாட்டிங் பேபர்" அல்லது மை ஒத்துங் காகிதம் கண்டுபிடிப்பதற்கு முன் எழுதிய ஈரத்தைப் போக்க மணலைப் போட்டு வந்தார்கள். இந்த விதமான காகிதம் ஒன்றைக் கண்டுபிடிக்க ஒருவரும் ப்யாஸைப் படவேயில்லை. அது தற்செயலாய்க் கண்டு பிடிக்கப்பட்டது. ஒருநாள் ஒரு யந்த்ரத்தில் எப்போதும்போல வெகு சுறுசுறுப்பாய்க் காகிதம் செய்தார்கள். அப்போது அவஸரத்தில் நல்ல காகிதம் செய்வதற்கு வேண்டிய கந்தைத் துணிக் குழம்பில் பசையைச் சேர்க்க மறந்துவிட்டார்கள். அந்தப் பசை இல்லாமலே யந்த்ரம் வெகு உக்கிரமாய் வேலைசெய்து காகிதமும் குவியல் குவியலாக ஆய்விட்டது. பிறகு அந்த யந்த்ரசாலையின் ஸொந்தக்காரன் ஏதோ குறிப்பு எழுத அங்கே கிடந்த ஒரு துண்டுக்கடுதாசியை எடுத்து எழுதினான். உடனே எழுதிய மை அந்தக் காகிதம் முழுமையும் பரவிவிட்டது. பரவியதும் பார்த்தான் அந்த ஸொந்தக்காரன், ஸரி! ஸரி! இந்தக்காகிதம் எழுதிய மையை ஒத்த வெகு நல்லதாய்விட்டது. இனி மணல் போட்டு ஒத்தவேண்டியதில்லை; வெகு நேர்த்தி" என்று யோசித்து இந்தக் காகிதத்தைப் பற்றி "மை ஒத்துங் காகிதம்; மை ஒத்துங் காகிதம்" என்று பத்ரிகைகளில் விளம்பரம் செய்தான். எல்லாரும் அதை அதிக ஆவலுடன் வாங்கினார்கள். அதனால் அவன் தன் யந்த்ரசாலையில் ஸாதாரணக் காகிதம் செய்வதை நிறுத்தி இந்த மை ஒத்துங் காகிதமே செய்யலானான். தக்க லாபமும் கிடைத்தது. பிறகு இதன் உபயோகம் ஊரெங்கும் பரவியது. இப்போதும் அந்தச் சாலை ஸொந்தக்காரன் வம்சத்தான் ஒருவன் மை ஒத்துங்காகிதம் செய்யும் அநேக பெரிய யந்த்ரசாலைகள் வைததிருக்கிறான். மை ஒத்துங் காகிதத்தில் மயிரிழைப்போன்ற சிறுசிறு த்வாரங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகள் மையை உறிஞ்சிக்கொள்ளுகின்றன.

### Iron in Plants.

செடிகளில் இரும்பு.—ஆஸ்ட்ரியாதேசத்துத் தலைநகராகிய வியன்னாவில் விவஸாய பாக்டீரியலாஜிகல் பண்ணைத் தோட்டத்தில், சிலசெடிகளிலுள்ள இரும்பை அதிகப்படுத்துவதற்காக பரீக்ஷைகள் நடத்திவருகிறார்கள். இந்தச் செடிகளை உணவாக உபயோகித்தால் தேகத்திற்கு என்ன நேரிடுகிறது என்பதையறிவதற்காக இந்தப் பரீக்ஷைகள் நடத்துகிறார்களாம். இரும்பு சேர்த்த செயற்கை ஆகாரத்தை உட்கொண்டால் எப்பொழுதுமே விரும்பின பலனைக்கொடுப்பதில்லை. ஏனென்றால் இரும்பானது பூராவும் ஜீரணமாகி தேகத்தில் கலப்பதில்லை. செடிகள் வளரும்போதே அதிகமான அளவு இரும்பை க்ரகிக்கும்படி செய்து அந்தக் காய்கறிகளை சாப்பிடும் பக்ஷத்தில் இரும்பு தேகத்தோடு கலந்துவிடும் என்று எண்ணுகிறார்கள். செடிகள் வளரும் பூமியில் ஹைட்ரேட் அப்அயர்ன் சேர்த்து செடிகளை வளரவிட்டுப் பரீக்ஷித்துப்பார்த்தார்கள். பசளைக்கீரை பயிரிட்டதில் ஸாதாரணபசளையிலுள்ளதைக் காட்டிலும் ஏழுமடங்கு இரும்பு இருந்ததாம். இரும்புள்ள மற்ற செடிகளையும் இன்னம் அதிகமாக இரும்பை க்ரகிக்கும்படி செய்யலாம் என்று எண்ணுகிறார்கள்.

### A Sheep Protector.

ஆடுகளை பாதுகாக்கும்யந்த்ரம்.—ஓநாய் முதலிய துஷ்டம்ருகங்கள் நாசம் செய்து விடாதபடி ஆடுகளைக்காப்பாற்றுவதற்காக ஒருபுது யந்த்ரம் ஆங்கிலேயர் ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதை ஆடு வளர்ப்பவர்கள் ரொம்ப ச்லாக்யமான யந்த்ர ஏற்பாடு என்று சொல்லுகிறார்கள். அந்த யந்த்ரத்தில் ஒரு துப்பாக்கியிருக்கிறது. அது நாம் ஒழுங்குபடுத்திவைப்பதற்குத்தக்கபடி 30, 40 அல்லது 60 நிமிஷங்களுக் கொருதடவை ரவையில்லாத வேட்டுப்போடும். அதிக வெளிச்சம் கொடுக்கும் படியான கண்ணாடியுள்ள ஒரு லாந்தல் இருந்த விடத்திலேயே சுற்றிக்கொண்டு நாலாபக்கங்களிலும் வெளிச்சத்தைவீசும். அது ஸதா சுற்றிக்கொண்டிருக்கும்படி ஒரு ஏற்பாடு அமைக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு நிமிஷத்துக்கு ஒரு சுற்றுக்கு மேலும் வரும். அந்த யந்த்ர முழுவதும் காற்று மழையாலும் தூசியாலும் கெடுதியடையாதபடி உலோகத்தால் செய்த பெட்டியில் வைத்து உயரம் தாழ்வுக்கு ஏற்றபடி மாற்றக்கூடிய நான்கு கால்களின்மேல் பொருத்தப்பட்டிருக்கிறது. அது மொத்தம் 25 பவுன் நிறையேயுள்ள தாகையால் அதை வேண்டிய இடங்களுக்கு ஸுலபமாய் தூக்கிக்கொண்டு போகலாம்.

# LAW.
## சட்டம்.

**Permanent Lease and Increased Assessment**

சாச்வதக் குத்தகையும், நிலவரி அதிகரித்தலும். ரிவிஷன் ஸர்வே காலத்தில் ஒருவர் தமது நிலத்தை சாச்வதக் குத்தகைக்கு விட்டிருந்தார். ஸர்வேயினுல் நிலத்தின் தீர்வை அதிகமானுல் அந்த அதிகத் தீர்வையைக் குத்தகைக்காரர் கொடுக்க வேண்டுமென்று குத்தகை உடன்படிக்கையில் காணவில்லை. அதிகமான நிலத்தீர்வையைக் குத்தகைக் காரரிடமிருந்து பெற நிலத்துக்குடையவருக்குப் பாத்யமில்லை. 1. ம. வா. நோட்ஸ், 934.

**Father's Debts.**

தகப்பனுர் பட்ட கடன்கள்.—ஒரு அவிபக்த குடும்பத்திலுள்ள தகப்பனுர் பட்ட கடனடைப்பதற்காக அந்த அவிபக்த குடும்ப ஸொத்தை விற்பனை செய்வதை மிதாக்ஷர சட்டத்தின்படி அவருடைய புத்ரர்கள் தகப்பனுர் கெட்ட நடத்தை யுள்ளவர் என்று சொல்லித் தவிர்க்கமுடியாது. பலான கடன் தகப்பனுருடைய கெட்ட கார்யத்துக்காக வாங்கப்பட்டது என்று புத்ரர்கள் ரூபிக்கவேண்டும். க. வா. நோட்ஸ். 124.

**An Aeroplane Killed a Cow.**

ஆகாயவிமானம் ஒரு பசுவைக் கொன்றது.— இங்கிலாந்தில் ஒரு க்ரிமினல் கோர்ட்டில் ஆகாய விமானம் ஒன்று கீழிறங்கும்பொழுது ஒரு பசுவை கொன்றுவிட்டதாக நஷ்டத்திற்கு வழக்கு செய்யப்பட்டது.

வாதி:—ஸர்க்காருடன் செய்த உடன்படிக்கையின் பேரில் என்பசுவை கவ்காமன் என்னும் மைதானத்தில் மேயவிட்டிருந்தேன். ப்ரதிவாதி வேகமாய் ஷை மைதானத்தில் ஆகாய விமானம் ஏறிச் சென்றதைப் பார்த்தேன். பிற்பாடு விமானம் திடீரென்று கீழே இறங்கிற்று. பசுவின்மேல் இறங்கி பசுவின் முதுகை ஒடித்துவிட்டது.

ஜட்ஜ்:—பசு விமானத்தால் கொல்லப்பட்டதாக வழக்கிடப்பட்டிருக்கிறது போலும்

ப்ரதிவாதியின் வக்கீல்:—நாங்கள் சொல்லுவதென்னவென்றுல் பசு தற்கொலைசெய்துகொண்டதென்பதுதான். (கோர்ட்டில் நகைப்பு)

பசு விமானத்தினடியில் வந்து நின்றது.

ஜட்ஜ்:— பசு இவ்விதம் செத்ததைப் பற்றி நான் ஆச்சர்யப்படுகிறேன். (நகைப்பு)

ப்ரதிவாதி.—நான் 60-80 அடி உயரமிருந்து கீழே இறங்கினேன். அப்பொழுது நிலத்தில் ஒன்றுமில்லை. இறங்கின பிற்பாடே பசுவைப் பார்த்தேன்.

ஸாக்ஷி.—பசு பயந்து வேகமாய் ஓடிவந்து விமானத்தை தாக்கிற்று.

வேறு இரண்டு ஸாக்ஷிகள்ஷை இடம் இறங்குவதற்கு ஸௌகர்யமான இடமென்றுர்கள்.

ஜட்ஜ்.—தற்காலம் ஆகாய விமானத்தைப்போலுள்ள அபாயமான யந்திரங்களை ஓட்டுகிறவர்கள், பூரு பொறுப்பையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அதனுல் ஏற்படுகிற நஷ்டங்களுக்கு பாத்யப்பட்டவர்கள். அஜாக்ரதையாக இருந்ததாக ருசு அவச்யமில்லை. ஷை ப்ரதிவாதி அஜாக்ரதையா யிருந்தாரென்று நான் சொல்ல வில்லையாயினும், ஷை நஷ்டத்திற்கு 18 பவின் அபராதம் விதித்திருக்கிறேன்.

**An Insurance Contract and Limitation.**

இன்ஷ்யூரேன்ஸ் உடன்படிக்கையும் காலாவதியும்.—ஒரு இன்ஷ்யூரென்ஸ் உடன்படிக்கையில், பின் வரும் நிபந்தனை இருந்தது.—ப்ரஸ்தாப பாலிஸி விஷயமாய் வ்யாஜ்யமூலம் தொடங்கின ஒருவருஷத்துக்குப் பிற்பாடு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியின்பேரில்ஒரு வ்யாஜ்யமும் கொண்டுவரக் கூடாது. இன்ஷ்யூரென்ஸ் காண்ட்ராக்ட் செய்த ஒருவர் அந்த இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியின்மேல் ஒரு வருஷத்துக்கு பிறகு வ்யாஜ்யம் கொண்டுவந்தார். ஆனுல் லிமிடேஷன் ஆக்ட் 86-வது ஆர்டிகில்படி மூன்று வருஷத்துக்குள் வ்யாஜ்யம் கொண்டுவரப்பட்டது. இன்ஷ்யூரென் காண்ட்ராக்டின்படி காலாவதியை ஒரு வருஷத்துக்குக் குறைத்தது இந்திய காண்ட்ராக்ட் ஆக்ட் 28-வது ஸெக்ஷன்படி செல்லாது என்று வாதிக்கப்பட்டது. அப்படி ஒரு வருஷத்துக்குக் காலாவதியைக்குறைத்தது செல்லு மென்று கோர்ட்டாரவர்கள் தீர்மானித்தார்கள். ஏனென்றுல் ஒரு வருஷத்துக்குள் வ்யாஜயம் கொண்டுவராவிட்டால் எந்தக் கட்சியாருக்கும் மற்றவர்மேல் யாதொரு பாத்தியமுமில்லை என்று கொள்ளவேண்டும் என்பதாக இருவரும் காண்ட்ராக்டின்படி ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். 14-பம்பாய் லா-ரி-741

# MEDICINE.
# வைத்யம்.

## Sugar.

சர்க்கரை.—உயரத்திலும், விரைவிலும், ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் சென்ற 50 வருஷங்களில் அதிகரித்ததற்கு முக்ய காரணம் சர்க்கரை சேர்ந்த பதார்த்தங்களை அதிகமாயுண்ணல், என்று புகழ்பெற்ற ஓர் ஆங்கிலேய வைத்யர் சாதிக்கிறார். தாம் சொல்லுவதற்கு, பேரீச்சம் பழம் தின்னும் அராபியர்களின் வல்மையையும் கரும்பு தின்னும் நீக்ரோ ஜாதியரின் திடகாத்ரத்தையும் அத்தாக்ஷியாக எடுத்துக்காட்டுகிறார்.

## Tobacco and Cholera.

புகையிலையும் காலராவும்.—கொஞ்ச காலத்திற்கு முன்னால் ஜெர்மனியிலுள்ள ஹாம்பார்க்கில் காலரா நோய் பரவியிருந்தது. அப்போது ப்ரொபஸர் வென்க் என்பவர் இந்த நோய் விஷயமாய் சில ஆராச்சிகள் செய்ததில் புகையிலையானது காலரா க்ருமிகளுக்கு சத்ருவாகு மென்று தெரிய வருகிறதாம். ஏராளமான காலரா க்ருமிகள் உள்ள ஜலத்தை சுருட்டு பக்வம் செய்வதற்கு உபயோகப்படுத்தினதில் சில மணி நேரத்தில் க்ருமிகள் யெல்லாம் செத்துப்போயினவாம். காலரா மும்மரமாயிருந்த காலத்தில் அந்தப் பட்டணத்தில் செய்யப்பட்ட சுருட்டுகளைப் பரீக்ஷித்துப் பார்த்ததில் அவைகளில் காலரா க்ருமிகளே யில்லை என்று தெரியவந்தது.

ப்ரேஜில், ஸுமாட்ரா, ஹாவன்ன இந்த ஜாதிப்புகையிலையின் புகையோடு காலரா க்ருமிகளை ஸம்பந்தப்படும்படி வைத்திருந்ததில் அரைமணி முதல் இரண்டுமணி நேரத்திற்குள் அந்த க்ருமிகள் இறந்து போயினவாம். புகையிலையின் புகையால் வாயிலுள்ள எச்சிலிலிருந்த காலராக்ருமிகள் 5 நிமிஷத்தில் இறந்து போயினவாம். மேலும் ஹாம்பர்க்கிலுள்ள ஸிகார் (சுருட்டு) பாக்டரியில் ஒரு வேலைக்காரனுக்குக்கூட காலரா வ்யாதி காணவில்லையாம்.

## The Uses of Turmeric.

மஞ்சளின் உபயோகம்.—மஞ்சள் என்னும் பொருளானது முக்ய ஔஷதங்களில் ஒன்று. இந்து தேசத்தவர்களுக்கு இன்றியமையாதது. அருந்தவும் பூசவும் உபயோகிக்கப்படும். இதன் குணத்தைச் சுருக்கிச் சொல்லுவோம்.

(1) சந்தனத்தோடுகலந்து புருஷர்களும் ஸ்த்ரிகளும் மேற்பூச்சாய் உபயோகித்தால் தேகத்தைப் பொன்னிறமாக்குகின்றது.

(2) தேகத்திலுள்ள கவிச்சியை நீக்குகின்றது.

(3) தலைவலி, ஜலதோஷம், பிரமேகம், நாவிகாரோகம், வலி வீக்கம், வண்டுகடி விஷம், பெருவிரணதிகளையும் போக்குகிறது.

(4) அரோசிகத்தைத் தாக்குகிறது.

(5) மாந்தாதிகளை நீக்குகின்றது.

(6) பசி யென்பதைத் தேக்குகின்றது.

(7) இல்லற தர்மத்திருப்போரிடத்தில் பத்னி நேசத்தையுண்டாக்கி வருகின்றது.

பொன்னிறமா மேனி புலானாற்றமும் போகும்
மன்னு புருடவசியமாம்—பின்னியெழும்
வாந்தி பித்த தோடமையாம் வாதம்போந் தீபனமாங்
கூர்ந்த நறுமஞ் சடனுக்கு.

தலைவலி நீ ரேற்றஞ்சளையாத மேகம் வலைவுதரு
பீநசத்தினூடே—வலிசுரப்பு விஞ்சு கடி விடமும்
வீறு விரணங்களும்போ மஞ்சட் கிழங்குக்குமால்.

என, பதார்த்தகுண சிந்தாமணியில் சொல்லியபடி மஞ்சளினால் ஜனங்களுக் குண்டாகும் உபகாரங்களை நன்கறியலாம்.

## Causes of Headache.

தலைவலியின் காரணங்கள்.—தலைவலி யுண்டாவதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. அவைகளில் சில பின்வருமாறு.

1. அதிக நேரம் இடைவிடாமல் அதிக ப்ரயாஸையுடன் உற்றுப்பார்த்தல்,

2. கெட்ட ஆகாயம், காற்றோட்டமின்மை, சாராயம் (ஆல்கஹால்) ஸம்பந்தமான பானங்கள்.

3. அதிகப்பிடிப்பான பூட்ஸும் ஜோடும்; இவைகள் ரக்தத்தை காலின் கோடிகளுக்குப் போக விடாமல் தடுப்பதால் மூளையில் சிறிது அதிக ரக்தம்தங்கி தலைவலி யுண்டாகிறது.

4. தேயிலைக் கஷாயம் குடித்தல். இதனால் நரம்பு பலவீனம் அடைவதால் அடிக்கடி தலைவலி யுண்டாகிறது.

5. வயோதிகர்கள் தாங்கள் செய்யும் வேலைக்கும் ஜீரண சக்திக்கும் தகுந்தபடி சாப்பிடாமல் அதிமாகச் சாப்பிடுவதால் தலைவலி யுண்டாவதுண்டு. இதற்கு பரிகாரம் அவர்கள் ஆகாரம் மிதமாய் சாப்பிடுவதே. தேகசக்திகள் குறையக் குறைய அவைகளுக்கு அதிக வேலை கொடுப்பது நல்லதல்ல,

106

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Some Valuable Pens.

**சில விலையுயர்ந்த பேனுக்கள்.**—பாரிஸ் உடன் படிக்கை காகிதத்தின்மேல் 1856-ம்வருஷத்தில் 14 ராஜதந்த்ரிகள் கையெழுத்து செய்த இறகு பேனுவை நவரத்னங்களிழைத்து யூஜின் மகாராணியாரவர்கள் தம் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டார்.

### Fishing on a Sunday.

ஞாயிற்றுக கிழமையில் மீன்பிடித்தல்.—

கிழவி (மீன்பிடித்துக் கொண்டிருந்த சிறு கிறிஸ்தவப்பையனைப் பார்த்து).—பையா, இன்று ஞாயிற்றுக்கிழமை யாயிற்றே; மீன்பிடித்துக் கொண்டிருக்கிருயே, உன் தகப்பனுர் கண்டால் என்ன சொல்ல மாட்டார் ?

பையன்.—அதெனக்குத் தெரியாது. வேண்டுமானுல் அவரைக்கேளுங்கள். இந்த நதியோரமாய் சற்று தூரத்தில் நிற்கிருரே, அவர்தான் என் தகப்பனுர்.

### A Dog and the Proverb.

ஒரு நாயும் பழமொழியும்.—ஒரு ப்ரெஞ்சுக்காரன் ஸ்காட் லாண்டிலுள்ள ஒரு காட்சி சாலையை பார்க்கப் போனுன். அவனையழைத்துப்போக அவனுடைய ஸ்நேகிதன் ஒருவன் இறங்க வேண்டிய ரயில்வே ஸ்டேஷனில்போய்க் காத்திருந்து ப்ரெஞ்சுக்காரனைத்தன் ஸொந்தவண்டியி லேற்றிக்கொண்டு தன் வீட்டுக்கு அழைத்துப்போனுன். வண்டி வீட்டண்டை போனதும் இருவரும் இறங்கும்போது மகா குரூரமான பார்வையுள்ள ஒரு நாய் ப்ரெஞ்சுக்காரனைப் பார்த்துக்குலைத்தது. ப்ரெஞ்சுக்காரன் நாய் தன்னைக் கடிக்குமென்று பயப்பட்டு முன்செல்ல யோசித்தான். அப்போது நண்பன் ப்ரெஞ்சுக்காரனைப்பார்த்து "ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்; குலைக்கிற நாய் கடிக் கடிக்காது என்ற பழமொழி " உனக்குத் தெரியாதா? என்ருன். அதற்கு ப்ரெஞ்சுக்காரன் " எனக்கு அந்தப் பழமொழி தெரியும். உமக்கும் அது தெரியும். ஆனுல் இந்த நாய்க்கு அந்தப் பழமொழி தெரியுமோ என்பதுதான் கேள்வி" என்று பதில் சொன்னுன்.

### Women and Rejuvenation.

ஸ்த்ரீகளும் யௌவனம் திரும்ப அடைதலும்·

ஜெர்மானிய டாக்டர் ஒருவர் கிழவிகளைக் குமரியாக்குவதற்கு ஒரு முறையைக் கண்டு பிடித்திருக்கிறதாகவும், அவர் ரொம்ப கிழத்தனமடைந்த ஸ்த்ரீகளையும்இரண்டுநாளில் யௌவனஸ்த்ரீகளாக்கக்கூடுமென்றும் பத்ரிகைகளில் ப்ரசுரம் செய்தார். இந்த விளம்பரத்தைப் படித்த வயது சென்ற ஸ்த்ரீகள் அநேகர் அவரைப்பார்க்க வீட்டுக்கு வரலானுர்கள். முதல் நாள் டாக்டர் அவர்களை நன்ருய்ப்பரீக்ஷித்துப் பார்த்துப் பின்பு அவர்களில் ஒவ்வொருவரையும் தமது பெயரையும் வயதையும் தெளிவாய் ஒரு துண்டு கடிதாசியில் எழுதச் சொன்னுர். அந்தஸ்த்ரீகள் எழுதி வைத்த வயது ஒவ்வொன்றும் வித்யாஸமாக இருந்தது. ஆனுல் எல்லோருடைய வயஸும் ரொம்ப அதிகமாகவே இருந்தது. டாக்டரானவர் மறுநாளே அந்த மருந்தைக் கொடுத்து விடலா மென்றும், ஆனுல்ஒவ்வொருவருடைய மனோ பல சக்திக்குத்தகுந்தபடி மருந்தின் வீர்யத்தை ஸரிப்படுத்தவேண்டும், இருந்தாலும் மறுநாள் வருவது நல்லதென்றும், சொன்னுர். மறுநாள் ஸ்திரீகளெல்லாரும் வந்தார்ள். டாக்டர் ஸ்த்ரீகளின் வயஸு குறிப்பிட்டிருந்த கடிதாசிகளைவைத்த விடம் தெரியவில்லையென்றும், ஆகையால் மறுபடியும் வயஸுகளைக் குறித்துத் தரவேண்டும் என்றும் சொன்னுர். மேலும் மனுஷரைச் சுட்டெரித்த சாம்பல் இந்த மருந்தின் மூலப்பொருளாய் இருப்பதால் வந்திருந்தஸ்த்ரீகளில் ரொம்பக் கிழவியாயிருப்பவள் தன்னை எரித்துவிட ஸம்மதிக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று பேச்சோடு பேச்சாய் டாக்டர் சொல்லி வைத்தார். மறுநாள் அந்தஸ்த்ரீகள் திரும்பவும் தங்கள் வயஸு குறித்திருந்த கடிதாசிகளுடன் வந்தார்கள்.

ஒவ்வொரு ஸ்த்ரீயும் தான் முதலில் சொன்ன வயஸிலிருந்து ரொம்ப வயஸு குறைத்து விட்டதாகத்தெரிய வந்தது. டாக்டரானவர் முதலில் கொடுத்த வயஸு குறிக்கப்பட்டிருந்த கடிதங்கள் அகப்பட்டு விட்டதாகப் பாசாங்கு செய்து விட்டு அவர்களைக் கூப்பிட்டு தம்முடைய முறை கை கூடினதைப்பார்க்கும்படி சொன்னுர். இரண்டு வயஸுஜாப்தாவையும் ஒத்திட்டுக் காண்பித்து 48-மணி நேரத்தில் ஒவ்வொரு ஸ்த்ரீயுக்கும் அநேக வயஸு குறைந்து விட்டதாக ரூபித்து விட்டார்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Two Births in Five Days.

ஐந்து நாளில் இரண்டு ப்ரஸவம்.—காரைக்குடி தெ. பழனியப்ப செட்டியார் மனைவி ஒரு பெண்குழந்தை பெற்றாள். அந்தக்குழந்தை இறந்துவிட்டது. ஐந்து நாட்களில் மறுபடி ஆண் குழந்தையை அம்மாது பெற்றாளாம். குழந்தையும் தாயும் ஸௌக்யமாக இருக்கிறார்களெனவுந் தெரிகிறது. இவ்வித ஸம்பவம் நாம் கேட்டது இது தான் முதல் தடவை. ஒன்றுக்கு மேற்பட்ட குட்டிகளை ஈனும் ம்ருகங்கள் கூட ஒரே தினத்தில் ஈனுகின்றன. ஆனால் பக்ஷிகளில் சில தினமொரு முட்டையிடுவது வழக்கம். மனிதரிடத்து நேர்ந்திருப்பது இக்கலியின் வன்மைபோலும். இன்னும் இக்கலியுகத்தில் என்னென்ன விநோதங்கள் நடைபெறுமோ நாமறிகிலோம்.—பாண்டியன்.

### A Letter $7\frac{1}{2}$ Years Late.

$7\frac{1}{2}$ வருஷம் தாமஸித்து வந்த தபால்.—1905-ம் வருஷம் ஜூன்மாதம் 21-ந்தேதி அகமத் நகரில் போஸ்ட் செய்யப்பட்ட ஒரு கடிதம் மேற்படி தேதியுள்ள தபால் முத்ரையுடனும், பம்பாய் வந்து சேர்ந்த தேதியாகிய 1905-ம் வருஷம் ஜூன்மாதம் 22-ந்தேதியுள்ள தபால் முத்ரையுடனும், 1912-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ந்தேதியன்று 1912-ம் வருஷம் நவம்பர்மாதம் 29, 30-ந்தேதி முத்ரைகளுடன் தாம் கிடைக்கப்பெற்றதாக பம்பாயிலுள்ள ஒருவர் டைம்ஸ் ஆப் இந்தியாப் பத்ரிகைக்கு எழுதியிருக்கிறார். இதனால் $7\frac{1}{2}$ வருஷம் தாமதித்திருக்கிறதென்று தெரிகிறது. அகமத் நகருக்கும் பம்பாய் நகருக்கு முள்ள தூரம் ஸுமார் 250 மைல் இருக்கலாம். எக்காரணத்தால் இந்தத்தாமஸம் நேரிட்டதெனத் தெரியவில்லை. ஆயினும் இவ்வளவு காலங்கழித்து கடிதம் வந்து சேர்ந்ததானது ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது.

### A Strange Death in a Stage.

நாடகசாலையில் ஒரு ஆச்சரியமான மரணம்.—பூர்வத்தில் ஒரு பாடகன் தன் வாத்யக்கருவியை வாயில் வைத்துக்கொண்டு வாசிக்கையில் இறந்துபோனனாம். அவ்வித நாடகம் ஒன்று இங்லாந்திலுள்ள ப்ரைடனில் ஒரு நாடகக்கொட்டையில் நடந்தேறியது. அதில் மிஸ்டர் வான் பய்யென் என்பவர் வாத்யக்கருவியை வாயில் வைத்துப் பாடிக்கொண்டிருந்தபோதே இறந்துபோனதாகச் சொல்லப்படும் மனிதனுடைய பார்ட்டை (வேஷம்) எடுத்துக்கொண்டு கொட்டைகையில் வந்து வாத்யக்கருவியை வாயில் வைத்துக்கொண்டு பாடிக்கொண்டே இறந்துபோனவன்போல் ஜனங்களுக்குக் காண்பிப்பதற்காகத் தரையில் படுத்துக்கொண்டான். உண்மையில் அவன் அன்று அப்படியே இறந்துபோனான். நாடகத்தைப் பார்க்கவந்தவர்கள் அனைவரும் அவன் இறந்தவனைப் போல பாசாங்கு செய்து படுத்துக்கொண்டிருக்கிறான் என்றே நினைத்துக் கொண்டிருந்தார்கள். கடைசியில் உண்மை வெளியாகவே எல்லோரும் ஆச்சரியங் கொண்டு விஸனப்பட்டார்களாம்.

### A Special Door.

ஒரு ப்ரத்யேகமான வாசற்படி.—ஹாலண்டில் அநேக வீடுகளுக்கு ஒருதனிமையான வாசற்படியிருக்கிறதாம். இதை இரண்டு முக்யமான காலங்களில் தான் திறந்துவைக்கிறார்களாம். அதாவது விவாக காலத்திலும், எவராவது மரணமடைந்த ஸமயத்திலும்தான். இவ்வாசற்படியின் வழியாக கல்யாணப்பெண்ணும், பிள்ளையும் நுழைந்து உள்ளே சென்றவுடன் கதவை மூடிவிடுவார்களாம். மரணம் உண்டானால் சவத்தை இதன் வழியாக வெளியே கொண்டுபோவார்களாம்.

### Incongruous Names.

பொருந்தாத பெயர்கள்.—மேல் நாட்டில் அநேகருக்கு விசித்ரமானதும் பொருந்தாததுமான பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. சில காலத்துக்கு முன்னால் ஒரு ஸ்த்ரீ தன் மகனுக்கு இங்க்லீஷில் "வாட்" அதாவது "என்ன" என்று பெயரிட்டாளாம். ஏனென்றால் மகன் பெரியவனான பிறகு தன்னையாராவது உன்பெயரென்னவென்றுகேட்டால் அவன் "என்ன" என்று பதில் சொல்வது வேடிக்கையாயிருக்கும் என்றெண்ணி அப்படிப் பெயரிட்டாளாம்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Black Ink.

கருப்பு இங்கி.--இரண்டணாவுக்கு ஸாதாரண கடுக்காயை வாங்கி உள்ளிருக்கும் கொட்டையை எடுத்துவிட்டு அதைத் தூளாக்கி இரண்டுபடி ஜலத்தில் கலந்து அடுப்பிலேற்றிக் கொதிக்கவிடவேண்டும். பிறகு முக்காலணாவுக்கு வாங்கிய மாசிக்காயை இரண்டாக உடைத்து வறுத்துக்கொண்டு தூள்செய்து அதைக் கடுக்காயுடன் சேர்த்து நன்றாகக் கொதித்தபின் இறக்கி வடிகட்டி மறுபடியும் அடுப்பிலேற்றிக் காய்ச்சி அதில் $1\frac{1}{2}$ அணா அன்னபேதியை நன்றாகத் தூள்செய்து அதையும் முக்காலணா வேலம்பிசினையும் போட்டுக் கலக்கிவிட்டு பிறகு ஒரு அணா நீலப்பவுடரையும் அதில் போட்டுக் கலக்கி நன்றாய்க் காய்ச்சி பிறகு இறக்கி மறுதினம் வடிகட்டி புட்டியில் எடுத்து வைத்துக்கொண்டால் நேர்த்தியான கருப்பு இங்கியாகும். காய்ச்சுகிற பாத்ரம் எண்ணெய்ப் பசையில்லாதிருக்க வேண்டுமென்பது கவனிக்கத்தக்கது. இந்த இங்கியில் எழுதி காய்ந்தபிறகு ஜலம் விட்டழித்தாலும் எழுத்துக்கள் கலையா.

### Preserving Hemp Ropes.

சணல்நார்க் கயிறுகளைக் கெடாமல் வைத்திருக்க.- சணல்கயிறுகளை அழுகிக்கெடாமல் வைத்திருக்க பின்வரும் முறை ச்லாக்யமானது. நிறையில் ஒரு பங்கு மயில்துத்தத்தை 5-பங்கு ஜலத்தில் கறைத்து அந்த ஜலத்தில் கயிறுகளை நாலுநாள் ஊறப்போட்டு வைத்து பின்பு எடுத்துக் காயப்போடவும். மயில்துத்தம் தண்ணீரில் கறைந்துபோய் விடுமாகையால் காய்ந்தபிறகு தாரிலிலாவது (கீல்) அல்லது பத்துப் பங்கு ஜலத்தில் 1-பங்கு ஸோப்புக் கறைத்த ஸோப்பு ஜலத்திலாவது போட்டுவைக்கவும். ஸோப்பு ஜலத்தில் அமிழ்த்தி வைப்பதால் கயிறுகளின்மேல் கறையக்கூடாத தாம்ரஸம்பந்தமான ஸோப்புப்படிகிறது.

### Waste Paper as Fuel and Clothing.

வீணாய்ப்போகும் கடிதாசியை விறகாகவும் உடையாகவும் உபயோகப்படுத்தல்.—இது விஷயமாய் ஒரு ஆங்கிலேயர் ஒரு இங்கிலீஷ் பத்ரிகைக்கு எழுதுகிறார்:—கடுதாசியை நெருப்பில் போட்டு எரியவிட்டால் அது நெருப்பை சீக்ரம் அவித்துவிடுகிறது. ஆனால் கடிதாசியை ஸரியானபடி தயார்செய்தால் வீணாகப்போகிற கடிதாசியை நிலக்கரியைப் போல எரிகருவியாக உபயோகப்படுத்தலாம். நாங்கள் எங்கள் வீட்டிலுள்ள வீணாகப்போகும் கடிதாசிகளை வெளியில் நெருப்பில் எரித்துவந்தோம். இந்தவாம் நிலக்கரிபோல் உபபோகப்படுத்தி வருகிறோம். இதனால் சமையல் வேலைக்கு உபயோகப்பட்டு வந்த நிலக்கரி பாதிதான் செலவழிந்தது.

கடிதாசிகளை ஸுமார் பத்தங்குலம் நீளமும் மூன்று நான்கு அங்குலம் கனமுமுள்ள சுருளாகவோ அல்லது பந்துகள்போலவோ சுருட்டி ஒருமணி நேரம் ஜலத்தில் ஊறப்போடவேண்டும். பிறகு அவைகளை சில நிமிஷங்கள் ஜலம் வடியும்படிவைத்திருந்து நெருப்பில், சிறிது நிலக்கரியுடன், இந்தச்சுருள்களையும் ஒன்றிரண்டாகப் போடவும். சுருள்கள் ரொம்ப ப்ரகாசமாய் எரிவதோடு நிலக்கரி எவ்வளவு நேரம் எரியுமோ அவ்வளவுநேரம் எரியும். கொஞ்சம் நிலக்கரியை கடுதாசியினுள் வைத்துச் சுருள் செய்தால் இன்னம் நல்லது.

படுக்கையில் ஸமாசாரப் பத்ரிகையை விரித்துப் போட்டுப் படுத்துக்கொண்டால் கம்பளியைப்போலவே உஷ்ணமாயிருக்கும். மார்புக்கும் முதுகுக்கும் கடுதாசியைப் போர்த்துக்கொள்வதால் ரொம்ப கதகதப்பாய் இருக்கும். ஆனால் இப்படிக் கடுதாசியை உடைகளுக்குப் பதிலாக உபயோகிப்பதில் காற்றோட்டமில்லாமல் போவதால் அவ்வளவு நல்லதல்ல.

### When Clothes Catch Fire.

தீப்பற்றுவதற்குச் சிகிச்சை.—நெருப்பண்டை போகாமல் பிள்ளைகளைப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு பெண் பிள்ளையின் சேலையில் தீப் பற்றிக்கொண்டால் அவள் உடனே தரையில் கிடந்து புரளவேண்டும். அவள் ஓடினாலும் நின்றாலும் சுவாலையெழும்பி அவள் சேலை முழுவதையும் எரித்துவிடும். தரையில் மாறிமாறிப் புரளுவதினால் அந்தச் சுவாலையவிந்துபோம். தீ பற்றினவுடனே கம்பளி அல்லது பெரும்படியான துப்பட்டியை எடுத்து மேலே இறுக்கிச் சுற்றிக்கொண்டாலும் தீ அணைந்துபோகும். தேகத்தில் ஸ்வல்பமாய் நெருப்பு சுட்டிருந்தால் தண்ணீரை விட்டு நனைத்துவருவதினால் ஸுகமாகும். தோல் சேதப்பட்டிருக்கையில் மெல்லிய பஞ்சை அதின்மேல் போடுவது கைகண்ட ஔஷதம். புதுத்தோல் உண்டாகுமட்டும் அந்தப் பஞ்சை எடுக்கக் கூடாது. தீ படுவதினால் எழும்பும் கொப்பளங்கள் அடியிலிருக்கும் சதையை சேதமின்றிக் காப்பதால், அவைகளைப் பொத்துவிடக் கூடாது. பஞ்சு அகப்படா விட்டால் நல்லெண்ணெயாவது தேங்காயெண்ணெயாவது புண்ணில் தடவிவரவேண்டும்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Reviewing Books.

**புஸ்தகங்களை விமர்சனம் செய்தல்.**—ஒரு நிருபர் "ஹிதகாரணி" பத்ரிகைக்கு எழுதுகிறார்:—சில தினங்களுக்குமுன் ஸ்வதேசமித்ரன் பத்ரிகையில் ஜெயசீலன் என்ற ஓர் தமிழ்ப் புஸ்தகத்தைப்பற்றி அபிப்ராயம் வரைந்திருந்தது. பெண்பால் எழுதிய அந்த புஸ்தகத்தைப் பத்ராதிபர் படித்துத் தமது ஸந்தோஷத்தை வெகு தெளிவாய் வெளியிட்டிருப்பதைப் பார்க்க நமக்கும் அளவற்ற ஆனந்தமேயாகும். ஆனால் அனுவச்யமாய் அன்ய க்ரந்தகர்த்தர்களை அதில் ஸம்பந்தபடுத்தி வரைந்திருப்பது யாதுகாரணமோ அறியோம். இக்காலத்தில் நாவல் எழுதுவோர்கள் இலக்கணம், வெண்பா, கவி, நம்பத்தகாத காரியங்கள் முதலியவைகளைப் புஸ்தகங்களில் வரைந்து ப்ரசுரிப்பதாகவும், அவைகள் திருப்தியற்றவை என்றும், ஸாமான்ய மனிதர்கள் பேசுவதுபோல் எழுதுவதும், ஏழைக்குடும்பங்களில் நடக்கும் வ்யவஹாரங்களைச் சுட்டி வரைவதும், வதூவரர்களின் பெற்றோர்கள் வாதமாடுவதை விவரிப்பதும், ஆகிய இவைகளை வரைவது முக்யமாகுமென்றும் தெரிவித்திருக்கிறார். இவருடைய அபிப்ராயப்படியே ஒவ்வொருவரும் ஸாமான்ய விஷயங்களைப் புஸ்தகத்தில் வெளியிட்டு வந்தால் மனிதஸமூகத்தாரின் புத்தியை விசாரசக்தியால் அதிகப்படுத்தும் மார்க்கம் மாயமாகுமல்லவா?

### Satya Bala Devi.

**ஸத்ய பால தேவியின் ஜீவிய சரித்திரமும் பிரசங்கமும்.**—இந்தச் சிறுபுஸ்தகம் ஸங்கீதத்தில் அதிக தேர்ச்சி யுடையவரும், வீணையில் வல்லவரும், அமெரிக்கா நாட்டில் ஹிந்து ஸங்கீதத்தைப் பரவச் செய்தவருமான மிஸ்ஸஸ் ஸத்யபாலதேவியின் சரித்ரம். ஸ்ரீமதி ஸத்யபால தேவியின் உபன்யாஸங்களில் சில பாகங்களின் மொழிபெயர்ப்பும் அடங்கியிருக்கிறது. ஆதர்ஸ் அண்ட்பப்ளிஷிங் ஏஜென்ஸி (சென்னை - இ) யால் வெளி யிடப்பட்டிருக்கிறது.

### Sangeetha Sath Sampradaya Deepika.

**ஸங்கீத ஸத் ஸம்ப்ரதாய தீபிகை.**—இது சென்னையில் புதிதாய் ப்ரசுரமாகும் ஒரு ஸங்கீத ஸம்பந்தமான மாஸப்பத்ரிகை. இதில் ஸங்கீத சாஸ்த்ர விசாரங்களும், லக்ஷணகீதங்களும், தானவர்ணம், சவுக்கவர்ணம் முதலானவைகளும், த்யாகைய்யர் தீக்ஷதர், முதலான பெரியோர்களின் க்ருதிகளும் வெளியிடப்படுகின்றன. ஒவ்வொரு க்ருதிக்கும் பதவுரை எழுதியிருப்பதால் க்ருதியின் அர்த்தத்தை யறிந்துகொண்டு பாடுவது ஸுலபமாகும். சிலர் பாட்டுக்களுக்கு அர்த்தம் தெரியாமலும், எழுத்துக்களின் ஸரியான உச்சரிப்பைத் தெரிந்து கொள்ளாமலும் பாடுவதுண்டு. அப்போதுகேட்போருக்கு ரஸிக்காமல் போகிறது. இந்தப்பத்ரிகையில் க்ருதிகளைத் தெலுங்கு அக்ஷரத்திலும் அச்சிட்டிருப்பதால் சொற்களை ஸரியானபடி உச்சரிக்க ஸாதகம் ஏற்படுகிறது. தற்காலத்தில் பெண்களுக்கு ஸங்கீதம் பயிற்றுவிக்க வேண்டு மென்னும் அவா அநேகமாய் எல்லா பெற்றோர்களுக்கும் புருஷர்களுக்கும் இருப்பதால் இந்தப் பத்ரிகை ப்ரசுரமானது அவர்களுக்கு உபயோகமாயிருக்கும் என்றெண்ணுகிறோம். இதன்வருஷ சந்தா 3-ரூபாயாகும். வேண்டுவோர் ஸங்கீத ஸத்ஸம்ப்ரதாய தீபிகை, வேப்பரி, மதராஸ், என். ஸி. என்று எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.

### The Heroines of India

**இந்திய ஸ்த்ரீ ரத்னங்கள், முதல்பாகம்.**—இது மாதர் மனோரஞ்சனி பத்ராதிபராகிய மிஸ்டர் ஸி. எஸ். ராமஸ்வாமி அய்யர் இயற்றியது. முற்காலத்தில் ராஜபுத்ர வம்சத்தில் உதித்த நற்குண நற்செய்கைகளும், வீரபராக்ரமும், கல்வியறிவும் அதிகம் வாய்ந்த பெண்மணிகளின் சரித்ரங்கள் இந்தப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் பத்து அழகிய படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் நடை ஸுலபமானதாகவும், இதில் சொல்லப்படும் விஷயங்கள் ஸத் விஷயங்களாகவும் இருக்கின்றன, இது பதிவ்ருதாதர்மத்தை கதைகளின் மூலமாக விவரிக்கிறது. ஒவ்வொரு பெண்மணிகளும் இந்தப்புஸ்தகத்தை வாசிப்பது நலமென்று எண்ணுகிறோம். இந்த முதல் பாகத்தை வெளியிட்ட ஆசிரியர் இரண்டாவது முதலிய மற்ற பாகங்களையும் சீக்ரம் வெளியிடுவார் என்று எண்ணுகிறோம். அந்தப் புஸ்தகத்திலுள்ள ராணி துர்க்காவதி என்னும் பெண்மணியின் கதையை மாதிரிக்காக வேறு பக்கத்தில் ப்ரசுரித்திருக்கிறோம். இந்தப் புஸ்தகத்தின் விலை 8-அணா வாகும். வேண்டுவோர் மிஸ்டர் ஸி.எஸ். ராமஸ்வாமி அய்யருக்கு (விலாஸம், மாதர் மனோரஞ்சனி ஆபீஸ், திருவல்லிக்கேணி, சென்னை.) எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

# MISCELLANEOUS NEWS.
## நாநா ஸங்கதி.

### New year Honours

புது வருஷ கௌரவப் பட்டங்கள்.— கவர்மெண்ட்ஸெக்ரெட்டேரி மிஸ்டர்எல். டேவிட்ஸன் வி. எஸ். ஐ. யும், புதுகோட்டை ராஜா, ஜி. வி.எஸ். ஐ. யும், கல்வி இலாகாத்தலைவர் டாக்டர்போர்ன் கே. வி. எஸ். ஐ. யும், சென்னைக் காட்டிலாகாவைச் சேர்ந்த மிஸ்டர் எப். எ. லாட்ஜ் வி. ஐ. இ. யும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

டிப்டி கலெக்டர் மிஸ்டர் டி. ஸுந்தரராவ் இம்பீரியல் ஸர்விஸ் ஆர்டர் கம்பானியனாக ஆக்கப்பட்டிருக்கிறார்.

கோயமுத்தூர்ரோமன்காதலிக்பாதிரி ரெவரெண்ட் ராண்டிக்கு கேஸரிஹிந்து பொற்பதக்கம் கிடைத்திருக்கிறது.

ச்ருங்கேரி மடத்தைச்சேர்ந்த மிஸ்டர் வி. ஸுப்ரமணிய சாஸ்த்ரி மகா மகோபாத்யாயா பட்டம் பெற்றிருக்கிறார்.

மிஸ்டர் வி. ஸுப்ரமணியம் பந்துலுவுக்கும், சென்னை பென்ஷன் தாசில்தார் ராவ்பகதூர் பி. கே. ஜெகந்நாத செட்டியாருக்கும் திவான்பகதூர் பட்டம் கிடைத்திருகிறது.

பங்கனபள்ளி ஸமஸ்தானத்து சீப் மெடிகல் ஆபீஸர் ஹாஜ் காஜா மகமது உஸேனும், போலீஸ் டிப்டி ஸுபரிண்டெண்டு மகமது அமினுதீனும் கான்பகதூர் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

கர்நூல் ஸப் ஜட்ஜ் மிஸ்டர் என். லட்சுமணுவுக்கு ராய்பகதூர் பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ரெவின்யூ போர்ட் மிஸ்டர் ஏ. கோபாலய்யங்காரும், கூடலூர் டிஸ்ட்ரிக்ட் ஜெயில் ஆக்டிங் ஸுபரின் டெண்டண்ட் மிஸ்டர் பி. ஸுப்ரமணிய அய்யரும், மெயில் ரிப்போர்ட்டர் மிஸ்டர் வி. வி. முனிஸாமி அய்யரும், போலீஸ் டிப்டி ஸுபரிண்டெண்டண்ட் மிஸ்டர் பி. என். கிருஷ்ணஸாமி நாயடுவும் ராவ்பகதூர் பட்டம் பெற்றிருக்கிறார்கள்.

வைத்யரத்னம் என்ற பட்டம் பண்டித டி. கோபாலாச்சார்லுவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

டிப்டி கலெக்டர் உஸேன் ஸாகிப் பகதூரும், திருப்பத்தூர் வ்யாபாரி ஸலார் ஸாகிப் பகதூரும், கோயமுத்தூர் சிலச்சுவான்தார் ஸயித் திவான் அப்துல் ரஸக் ஸாகிப் பகதூரும் கான்ஸாகிப் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

ராய்ஸாகிப் பட்டம், ராஜமகேந்திரபுரம் முனிஸிபல் சேர்மன் மிஸ்டர் எம். வெங்கடரத்னம் நாயடுவுக்கும், மலையாளம் சிலச்சுவான்தார் மிஸ்டர் கெ. ராமுண்ணி வலிய நாயருக்கும், கொடுக்கப்பட்டிருக்கிறது.

விசாகப்பட்டணம் சந்த்ரசேகர முதலியாரும் பார்லகிமிடி ராஜா காலேஜில் வாத்தியாராயிருந்த மிஸ்டர் ஜி. வி. ராமமூர்த்தியும், ஸால்ட் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் எம். வேங்கடராமய்யரும், பென்ஷன் தாசில்தார் மிஸ்டர் என். வேலாயுதம் பிள்ளையும், கடப்பை ஜில்லா ராயச்சு சுட்டி யூனியன் சேர்மன் மிஸ்டர் வி. இச்பணுத்ரி (?) ராவ் நாயுடுவும் ராவ்ஸாகிப் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

போலீஸ் பதக்கங்கள் மிஸ்டர் பி. பி. தாமஸுக்கும், மிஸ்டர் எப். எ. ஹாமில்டனுக்கும், மிஸ்டர் வெங்கோபராவுக்கும், மிஸ்டர் ஜி, ஆர். ஹாம்ப்ரீஸுக்கும், மிஸ்டர் தியாகராஜய்யருக்கும், ஹெட் கான்ஸ்டேபில் ரத்னனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### New Legislative Council Members.

புது லெஜிஸ் லேடிவ் கௌன்ஸில் மெம்பர்கள்

தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள்.—டாக்டர் டி. எம். நாயர் (சென்னைக் கார்பரேஷன்.)

மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் (சென்னை யூனிவர்ஸிடி)

ராவ்பகதூர் பி. என். நரஸிம்மேச்வரசர்மா (கெஞ்சம் விசாகப்பட்டணம் தொகுதி.)

மிஸ்டர் எம். ராமச்சந்திரராவ் பந்துலு (கோதாவரி, க்ருஷ்ண, குண்டூர் தொகுதி.)

மிஸ்டர் எ. எஸ். கிருஷ்ணராவ் பந்துலு (நெல்லூர், கடப்பை, சித்தூர் தொகுதி.)

மிஸ்டர் பி. கேசவபிள்ளை (கர்நூல், பல்லாரி, அனந்தபூர் தொகுதி.)

ராவ்பகதூர் சுப்பராயலு ரெட்டியார் (செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு தொகுதி.)

மிஸ்டர் பி. வி. நரஸிம்மய்யர் (சேலம் கோயமுத்தூர், நீலகிரி தொகுதி.).

மிஸ்டர் கே. பி. ராமன்மேனன் (தென்கன்னடம், மலையாளம் தொகுதி.)

ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார் (தஞ்சாவூர், திருச்சிளுப்பள்ளி தொகுதி.)

மிஸ்டர் கே. ராமய்யங்கார் (மதுரை, ராமநாதபும், திருநெல்வேலி தொகுதி.)

மிஸ்டர் கே. ஆர். வி. கிருஷ்ணராவ் பந்துலு (ஜமீன்தார்களின் 1-வது தொகுதி.)

திவான்பகதூர் வி. ராமபத்ர நாயுடுகாரு (ஜமீன் தார்களின் 2-வது தொகுதி.)

மிஸ்டர் வி. வேங்கடஸூரிய நரஸிம்ம ராஜூகாரு (நிலச்சுவான்தார்களின் 1-வது தொகுதி.)

மிஸ்டர் கே. சிதம்பரநாத முதலியார் (நிலச்சுவான் தார்களின் 2-வது தொகுதி.)

மிஸ்டர் வி. குன்ஹிராமன் நாயனூர் (நிலச்சுவான் தார்களின் 3-வது தொகுதி.)

மிஸ்டர் டி. ஜெயினுல்-அபிதின் ஸாகிப் ஷியா உல்-முல்க் (மகமதியர்களின் 1-வது தொகுதி.)

ஆமதுதம்பி மரைக்காயர் சாகிப் பகதூர் (மகமதியர்களின் 2-வது தொகுதி.)

மிஸ்டர் எ. டி. ஜாக்ஸன் (சென்னை வ்யாபார ஸபை.)

மிஸ்டர் ஆர். எம். ஸாவீஜ் (சென்னை வர்த்தகக் கூட்டம்.)

மிஸ்டர் இ. எப். பார்பர் (ஆங்கிலேய தோட்டக் காரர்கள்.)

உத்தியோகஸ்தர்க ளல்லாத அடிஷனல் மெம்பர்கள்.—ஸர் எப். ஜே. ஈ. ஸ்ப்ரிங்கும், ராவ்பகதூர் ப. சோமசுந்தரஞ் செட்டியாரும், மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரியும்.

# DIARY OF THE MONTH.
## தின வர்த்தமானம்.

ஜனவரி௴ 13-தேதி.—

தோட்டக் கச்சேரி.—சென்னை நிர்வாகஸபை மெம்பராகிய ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர், பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் மெம்பர்களுக்கு ஒரு தோட்டக் கச்சேரி செய்தார்.

14-தேதி.—

**விருந்துக் கச்சேரி.**—இந்தியன் ரெவ்யூ பத்ராதிபர் மிஸ்டர் ஜி. எ. நடேசய்யர் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் மெம்பர்களை தமது ஆபீஸுக்கு அழைத்து உபசரித்தார்.

15-தேதி.—

ராஜப்ரதிநிதி.—வீக்கமும் எரிவும் ஏற்பட்டு உபத்ரவம் கொடுத்து வந்ததற்கு மின்ஸார ப்ரயோகம் செய்ததில் வீக்கம் அதிகரிக்கவில்லை. இரவில் நன்ருய்த் தூங்கினர். அசதியில்லாமல் இருக்கிருர்.

16-தேதி.—

சென்னை பொருளாதார ஸங்கம்.—சென்னை பொருளாதார ஸங்கம் இன்று கூடிற்று. லார்டு பெண்ட்லெண்ட் அக்ராஸனம் வகித்தார். இந்தியா கௌன்ஸில் மெம்பராகிய ஸர் தியோடொர் மாரிஸன் இந்திய பொருளாதார விஷயமாய் ஆராய்ச்சி செய்வதைப் பற்றி ஒரு உபந்யாஸம் செய்தார்.

உபசரிப்பு.—சேலம் ஆனரபில் மெஸ்ஸர்ஸ் வி. விஜயராகவாசாரியாரும், பி. வி. நரஸிம்மய்யரும் முறையே இம்பீரியல் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலுக்கும், சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்கும் தெரிந்தெடுக்கப்பட்டதற்காக அவர்களுக்கு ஒரு உபசரிப்புக்கொண்டாட்டம் நடந்தது.

ப்ரான்ஸ் குடியரசு:—ப்ரான்ஸ் என்னும் குடியரசு தேசத்து ப்ரெஸிடெண்டாக மா. பாய்ன்கரே தெரிந்தெடுக்கப்பட்டார்.

துருக்கி பால்கன்யுத்தம்.—துருக்கி பால்கன் யுத்தம் ஸமாதானமாவது தடைப்பட்டதின் நிமித்தம் வல்லரசுகள் ஒன்று சேர்ந்து ஸமாதான விஷயத்தைக்குறித்த அறிக்கைப்பத்ரம்ஒன்று துருக்கி கவர்ன்மெண்டினிடம் கொடுத்தன. துருக்கி இதுவரை விட்டுவிட ஸம்மதப்படாத அட்ரியானேபிலை பால்கன் நாடுகளுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும் ஏஜியன் தீவுகளைப்பற்றிய விஷயத்தை வல்லரசுகள் தீர்மானிக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறதாம்.

18-தேதி.—

வைஸ்ராய்.— வைஸ்ராயின் வலது கையிலுள்ள நரம்பு வீக்கம் குணப்பட்டு வருகிறது. அவருடைய தேக ஸ்திதி த்ருப்திகரமாயிருக்கிறது.

ஒரு உபசரிப்பு.— ஆனரபில் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்த்ரியார் சென்னை லேஜிஸ் லேடிவ் கௌன்ஸில் மெம்பராக நியமனம் செய்யப்பட்டதற்காக அவருக்கு சென்னை விக்டோரியா ஹாலில் ஒரு உபசரிப்புக்கச்சேரி நடந்தது. அநேக சென்னை ப்ரமுகர்கள் வந்திருந்தார்கள்.

கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—பங்காளத்து 5-வது ப்ரொவின்ஷ்யல் கோவாபரெடிவ் கான்பரென்ஸ் இன்று கல்கத்தாவில் நடந்தது. வங்காளத்து கவர்னர் ஒரு ப்ரஸங்கம் செய்தார்.

20-தேதி.—

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.—பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் மெம்பர்கள் இன்று ஸாயந்திரம் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

மாகாண கான்பரேன்ஸ்.—திருச்சிறுபள்ளியில் இன்று டிஸ்ட்ரிக்ட் காங்க்ரெஸ் கமிட்டிகூடி மாகாண கான்பரென்ஸுக்கு உபசரணைக் கமிட்டி மெம்பர்களைத் தெரிந்தெடுத்தது. திவான்பகதூர் டி. தேசிகாசாரியார் உபசரணைக் கமிட்டியின் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

21-தேதி.—

டேல்லி கோடுஞ் செயல்.—டெல்லி முனிஸிபல் கமிட்டியார் இன்று கூடி, எந்த வீட்டிலிருந்து வைஸ்ராய் மேல் வெடிகுண்டு எறியப்பட்டதோ அந்த வீட்டை விலைக்கு வாங்கி அதை இடித்து விடவும், இனி ஊர்கோலங்கள் நடந்தால் பத்ரமாயிருக்கும்படி சௌக்கின் நடுவிலுள்ள மரம் முதலியவைகளை எடுத்துவிடவும் செய்திருந்த ஒரு ஸ்கீமை அங்கீகரித்தார்கள்.

22-தேதி.—

துருக்கிபால்கன் யுத்தம்.—இன்றையதினம் துருக்கி கவர்ன்மெண்டாருடைய க்ராண்ட் கௌன்ஸில் கூடி வல்லரசுகள் கொடுத்த அறிக்கைப் பத்ரத்தை ஒப்புக்கொள்வதைப் பற்றி யோசித்தது. சிறிது ஆலோசனையின்மேல் ஸமாதான விஷயமாய் வல்லரசுகள் சொல்லுகிறபடி கேட்பதென்று தீர்மானித்தது. கவர்ன்மெண்டாரும் அந்த யோசனையை ஒப்புக்கொண்டார்கள்.

ஆனரபில் மிஸ்டர் கே. ராமய்யங்கார்.—இவருக்கு லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் எலெக்ஷன் ஆனதற்காக இன்று மதுரையில் ஒரு உபசரிப்புக் கச்சேரி நடத்தப்பட்டது.

23-தேதி.—

துருக்கி பால்கன்யுத்தம்.—இன்றையதினம் துருக்கி மந்த்ராலோசனைஸபை வேலையை ராஜிநாமா செய்துவிட்டது. "வல்லரசுகளின் அறிக்கையை அனுஸரித்து, அட்ரியநோபிளையும், தீவுகளில் ஒரு பாகத்தையும் விட்டு விடத் தீர்மானித்தது கவர்ன்மெண்டின் அமைப்புப்படி க்ரமமான நடவடிக்கையல்ல வென்றும், அந்தத் தீர்மானத்தை விசேஷ ஸபை கூட்டி அந்த ஸபையில் வைத்து அபிப்ராயம் கேட்டது ஜன ஸ்வதந்த்ரங்களுக்கு விரோதமானதென்றும், இப்படிச் செய்ததால் ஜனங்கள் கோபம் கொண்டு அரண்மனைவாசலில் ஆரவாரம் செய்ததால் மந்த்ராலோசனை ஸபையார் வேலையைவிட்டு நீங்க வேண்டியதாயிற்றென்றும்" தெரிவிக்கப்படுகிறது.

வைஸ்ராயின் தேகஸ்திதி.—ராஜப்ரதிநிதி ஸௌக்யமடைந்துவருகிறார். அவருடைய புண்ணும் ஆறிக்கொண்டு வருகிறது.

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.—இன்று கல்கத்தாவில் விசாரணைசெய்ய ஆரம்பித்தது.

24-தேதி.—

ஒருலக்ஷம் ருபாய் இனும்.—வைஸ்ராயின்மேல் வெடிகுண்டெறிந்த நபர் அல்லது நபர்களைக் கண்டு பிடிப்பதற்கு அனுகூலமான செய்தி சொல்வோருக்கு இந்தியா கவர்ன்மெண்டாரால் ஒருலக்ஷம் ரூபாய் இனும் கொடுக்கப்படும். இந்த வெடி குண்டு கேஸ் ஸம்பந்தமாய் உபயோகமான செய்திகள் சொல்லுகிறவர்களுக்கும்தக்க வெகுமதி கொடுக்கப்படுமென்று இன்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. முன்பு கவர்ன்மெண்டாராலும், ஸ்வதேச ராஜாக்களாலும் மற்றவர்களாலும் இனும் கொடுப்பதாகச் செய்திருந்த விளம்பரங்களெல்லாம் இந்த விளம்பரத்தால் ரத்து செய்யப்படுகின்றன.

27-தேதி.—

வைஸ்ராயின் தேக ஸ்திதி:—இன்று வெளிவந்த புல்லட்டினால் வைஸ்ராயின் தேகத்திலுள்ள புண் விரைவாய் ஆறிவருகிறதென்றும், அவருடைய தேக ஸுகம் விருத்தியாய் வருகிறதென்றும் தெரிகிறது.

இம்பீரியல் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்.—இன்றையதினம் 11-மணிக்கு கௌன்ஸில் கூடிற்று.

முதலில் ஸர். ஜி. எப். வில்ஸன் அக்ராஸனாதிபதி யாயிருந்தார். மெம்பர்கள் ராஜவிச்வாஸ ப்ரமாணம் செய்யத்தொடங்கினார்கள். 11½-மணிக்கு வைஸ்ராய் அவர்கள் கௌன்ஸிலுக்கு வந்தார். அவருடையவலது கை தூக்கிக்கட்டப்பட்டிருந்தது. அவர் முகம் வெளுத்தும் பலவீனமாகவும் காணப்பட்டார். அவர் வந்ததும் மெம்பர்களும் பார்க்கவந்திருந்தவர்களும் ஸந்தோஷத்தால் வெகுநேரம் கைகொட்டி ஆரவாரித்தார்கள். ப்ராமணம் செய்வது முடிந்ததும் வைஸ்ராய் எழுந்து ப்ரஸங்கம் செய்தார். அவருடைய காயங்கள் ஆறி அவர் இன்னம் ஸௌக்யமடையாவிட்டாலும், கௌன்ஸிலைத் திறந்து வைத்து மெம்பர்களுக்கு நல்வரவு கூறவேண்டியது தமது கடமை யென்றும், தாம் இரண்டு வருஷமாக நடத்தின ஸபையில் மெம்பர்களாக இருந்தவர்களில் சிலர் இப்பொழுது மெம்பர்களாக இல்லாவிட்டாலும், தாம் அவர்களை நேசர்களாக எண்ணுவதாகவும், புது மெம்பர்களை அன்புடன் வரவேற்பதாகவும், சென்ற இரண்டு வருஷமாக ஸபை எப்படி கம்பீரமாகவும் நிதானமாகவும் நடந்ததோ அப்படி இந்த ஸபையையும் நடத்த புது மெம்பர்களும் உதவிசெய்வார்கள் என்றும், சொன்னார். "நான் காயப்பட்டு ப்ரக்ஞை தப்பி மறுபடியும் ப்ரக்ஞை திரும்பப் பெற்றபோது, எனக்கு முதலுண்டான எண்ணம் இந்த உபயோகமற்ற பாதகச் செயலைச் செய்து இந்தியாவின் அழகிய நற்பெயரைக்கெடுத்து விட்டானே யென்றும், இந்திய ஜனங்களின் மனஸைப் புண்படுத்தி விட்டானென்றும், இந்திய ஜனங்களின் ஜீவகாருண்யத்திற்கும் ராஜபக்திக்கும் அவர்களுடைய மதக் கொள்கைகளுக்கும் இப்படிப்பட்ட பாதகச் செயல் முற்றிலும் விரோதமென்றும் எனக்குச் சிந்தனை யுண்டு பண்ணிற்று. ஜனங்களுக்கு நான் ஸுலபமானவனாக வேண்டுமென்ற விருப்பத்தினால் அனாவச்யமான முன் ஜாக்ரதைகள் வேண்டியதில்லை யென்று என்னைப்போலீஸார் காக்க உத்தரவிடாமல் தடுத்து, ஜனங்களின் ஸம்ரக்ஷணையில் லேடி ஹார்டிஞ்ஜும் நானும் நம்பிக்கைவைத்திருந்தோம். இப்படி நம்பிக்கை வைத்திருந்தது பிசகென்று நான் இப்போது நினைக்க ந்யாயமில்லை. ஆயினும் இந்தப் பாதகச் செயலினால் இந்தியா முழுமையும் ஆத்ரமும் கோபமுங்கொண்டது அந்தச் செயல் செய்தவனைப் பிடித்து அவனுக்கு ஒத்தாசையாயிருப்பவர்களைக் கண்டித்து அந்தச் செயல்களில் அருவருப்பும் அவைகளை இனிச் செய்யாதிருக்க நிச்சயமும் உண்டாக்குவதில் பலன் பெறுமென்று நம்புவது அதிகமா! இவர்கள் ஒரு தனியான வகுப்பாரென்றாவது அவர்கள் ஒரு ஸமூகத்தைச் சேர்ந்து ஜனங்களுடன் பழகாதவர்களென்றாவது நம்புதல் கஷ்டம். அவர்கள்மேல் செல்வாக்குள்ளவர்களும் அவர்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களும் இல்லையா? நிதானபுத்தியும் விவேகமும் உள்ளவர்களோடு அவர்களுக்கு ஸம்பந்தமில்லையா?

"ஆயினும் இந்த ஸம்பவத்தால் இந்தியாவினிடம் நான் கொண்டிருக்கும் நோக்கம் மாறுதென்று இந்திய ஜனங்கள் அவனைவருக்கும் உறுதி சொல்வேன். இது வரையில் அனுஷ்டித்து வந்த ராஜாங்க முறையை ஒரு மயிரிழையையும் தவறாமல் இனியும் அனுஷ்டிப்பேன்" இப்படிப் பேசிவிட்டு இந்தியர்கள் அராஜகச்செய்கைக்காரர்கள் என்ற பழிப்புச் சொல்லை அடியோடு மாற்றிவிடுவதற்குள்ள வழிகளைத் தேடவேண்டியது அவச்யமென்றும் சொன்னார்.

இப்படி வைஸ்ராய் வெகு உருக்கமாயும் அன்புடனும் பேச மத்ய மாகாணத்து ப்ரதிநிதியாகிய ஸர் ஜி. எம். சிட்னவிஸ் கம்பீரமாயும் சாலகமாயும் ராஜப்ரதிநிதியைப் புகழ்ந்து பேசிப் பதில் சொன்னார். பிறகு மிஸ்டர் ஆர்ம்ஸ்ட்ராங் என்ற ஆங்கிலேயரும் பேசினார். பிறகு லார்ட் ஹார்டிஞ்ஜ் இவர்களிருவரும் செய்த உபசாரத்தை அங்கீகரித்து தம் தேகஸ்திதியினால் ஸபையை விட்டு உடனே போகவேண்டியது அவச்யமாயிருக்கிற தென்றும், ஸபை மெம்பர்கள் ஒவ்வொருவருடனும் கைகுலுக்க விருப்பமுள்ளவராயிருந்தாலும் தமது வலதுகை தூக்கிக் கட்டப்பட்டிருக்கிறதென்றும், தாம் அவ்வளவு சீக்ரம் ஸபையை விட்டுப் போய்விடுவதற்காக தம்மை மன்னிக்க வேண்டுமென்றும் சொல்லிப் போய்விட்டார். பிறகு ஸர் கை ப்ளீட்வுட் வில்ஸன் ப்ரெஸிடெண்டாயிருந்து வழக்கம்போல ஸபையின் மேல்நடவடிக்கைகளை நடத்தினார்.

திருச்சினாப்பள்ளி எஸ். பி. ஜி. காலேஜ்.—இதன் 150-வது வருஷக்கொண்டாட்டம் நடந்தது. மிஸ்டர் ஜே. எச். ஸ்டோன் அக்ராஸனாதிபதியாயிருந்தார். எஸ். பி. ஜி. வித்யாசாலை ஸ்தாபிதமாகி இப்பொழுது 150-வருஷமாகிறது.

28-தேதி.—

வைஸ்ராயின் தேக ஸ்திதி.—" வைஸ்ராயின் தேகம் பலவீனமாயிருப்பதாலும், இன்னம் ஒரு புண் ஆருமல் இருப்பதாலும் அவர் நேற்று சட்டஸபையைத் திறந்து வைக்கும் வேலையை ரொம்பவும் ச்ரமத்துடன் செய்தார் அதனுல் அவர் மிகவும் களைப்படைந்துவிட்டார். ஆனுலும் அவர் இரவுப் பொழுதை ஸுகமாகவே கழித்தார். புண் எவ்வளவு சீக்கிரம் ஆறவேண்டுமோ அப்படி ஆறிக்கொண்டும் வரவில்லை. அதற்கு செத்துப்போன எலும்புத்துண்டு அல்லது வேறு வஸ்து உள்ளே இருந்து கொண்டிருப்பதே காரணமாயிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது.

எக்ஸ் ரேஸைக் கொண்டு மறுபடியும் சோதித்துப் பார்ப்பது சீக்ரத்தில் அவச்யமாயிருக்கலாம். வலது கை நரம்பு வீக்கம் வடியும் குறிகளைக் காணவில்லை. இன்னம் வெகு நாளைக்கு யாதொரு வேலையும் பாராமல் அவர் சும்மாயிருக்கவேண்டியது வெகு அவச்யமாயிருப்பதால், வைஸ்ராய் லேடி ஹார்டிஞ்ஜுடன் டேராடூனுக்குப் போகிருர். அங்கே ஸ்தானபேதம் காரணமாகவும் அவ்வூர் காற்றுப்பட்டும் அவர் சீக்ரம் ஸுகமடைவார் என்று தோன்றுகிறது. இனி அவர் தேகஸுகத்தைப்பற்றிய புல்லட்டின்கள் டேராடூனிலிருந்து அப்போதைக்கப்போது வெளியிடப்படும்."

மைஸூர் திவான் செய்த தோட்டக்கச்சேரி.— மைஸூர் திவான் மிஸ்டர் எம். விச்வேச்வரய்யா அவர்கள் தமது பங்களாவில் ஒரு தோட்டக்கச்சேரி விருந்து செய்தார். மகாராஜாவும் யுவராஜாவும் இன்னம் மற்ற பெரிய கனவான்களும் அந்த விருந்துக்கு வந்திருந்தார்கள்.

துருக்கி பால்கன்யுத்தம்.—இன்றைய தினம் லண்டனில் ஸமாதான விஷயமாய் தங்கியிருக்கிற பால்கன் ப்ரதிநிதிகள் உடன்படிக்கை பேச்சை நிறுத்தி விட்டதாக ஒரு அறிக்கைப் பத்ரம் எழுதிக் கையெழுத்திட்டார்கள்.

29-தேதி.—

துருக்கி பால்கன்யுத்தம்.—ஸமாதன பேச்சு நிறுத்தியாயிற்றென்று லண்டனில் உள்ள பால்கன் ப்ரதிநிதிகள் எழுதியுள்ள அறிக்கைப் பத்ரத்தை இன்றையதினம் துருக்கி ப்ரதிநிதியிடம் கொடுத்தார்கள்.

பிப்ரவரிமீ 1-தேதி.—

உபசரணை மீட்டிங்—தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளி பிரிவிலிருந்து லெஜிஸ் லெடிவ் கௌன்ஸில் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உபசரணை செய்வதற்காக தஞ்சாவூர் ஜில்லா டிஸ்ட்ரிக்ட் காங்க்ரெஸ் கமிட்டியின் ஆதரவின் கீழ் ஒரு பொது மீடிங் நடந்தது. மிஸ்டர் வி. பி. மாதவராவ் சேர்மனுயிருந்தார்.

3-தேதி—

துருக்கி பால்கன்யுத்தம்.—ஸமாதானம்செய்வதைப்பற்றி யோசிக்கும் பொருட்டு இதுவரை நிறுத்தப்பட்டிருந்த துருக்கி பால்கன் யுத்தம் இன்றையதினம் மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டது. அட்ரியனேபிளைத் தாக்கினதோடு சடால்ஜாவிலும் சிறு சண்டை நடந்தது.

5-தேதி.—

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்-இன்றையதினம் ரங்கூனில் விசாரணை செய்யத்தொடங்கிற்று.

7-தேதி.—

ஒரு தோட்டக்கச்சேரி—திருவனந்தபுரம் ரெஸிடென்ஸியில் மிஸ்டர் க்ரேஹம் அவர்கள் ஒரு தோட்டக்கச்சேரி நடத்தினர். திவான் ப்ரதமஜட்ஜ் முதலியவர்கள் வந்திருந்தார்கள்.

ரகுநாதராயரின் பிறந்தநாள். இன்றையதினம் சாவூரில் காலம் சென்ற திவான்பகதூர் ரகுநாதராயர் அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம் நடந்தது.

8-தேதி.—

சட்டத்தின் உதவியன்னில் ஜனங்கள் தண்டித்தல்.—அமெரிக்கா ஐக்ய நாடுகளைச் சேர்ந்த மிஸ்ஸிஸ்ஸிப்பி நாட்டில் ஒரு நீக்ரோவை (கருப்பு மனிதனை) ஜனங்கள் சட்டத்தின் உதவியன்னியில் தாங்களே தண்டித்தார்கள். இறந்துகிடந்த ஒரு வெள்ளை ஸ்த்ரீயை அந்த நீக்ரோ கொன்றுவிட்டதாக ஜனங்கள் ஸந்தேகப்பட்டு அவனை பட்டணத்தின் ஒரு மத்ய இடத்தில் ஒரு இரும்புத் தூணில் சங்கிலியால் கட்டி அவன்மேல் கீல (தாரை)க்கொட்டி விறகை அடுக்க இறந்து போனவளுடைய ஸகோதரன் விறகுக்கு நெருப்பு வைத்தான். அவளுடைய தகப்பன் அந்த நீக்ரோவைச் சுட்டுக் கொன்று அவனுடைய கஷ்டங்களை நிவர்த்திசெய்தான்.

கனம் மூர்ஹெட்.—தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியின் ஏஜெண்டாகிய ஆனரபில் மிஸ்டர் ஏ. மூர்ஹெட் சென்னை லெஜிஸ் லெடிவ் கௌன்ஸில் மெம்பராக நியமிக்கப்பட்டதற்காக அவருக்கு ஷை கம்பெனியின் உத்யோகஸ்தர்கள் திருச்சியில் ஒரு விருந்து நடத்தினார்கள்.

9-தேதி.—

விவேகானந்தர் பிறந்தநாள் கொண்டாட்டம்.-திருச்சினப்பள்ளி வேதாந்த ஸொஸைடியார் விவேகானந்த ஸ்வாமிகளுடைய பிறந்தநாளை இன்று கொண்டாடினார்கள். எல்லா ஜாதியாரு முள்பட ஸுமார் 700 ஏழைகளுக்கு சாப்பாடு போடப்பட்டது.

மங்கோலியா தேசம்.—கொஞ்ச காலத்துக்கு முன்னால் வரையில் சீனாவுக்குக் கீழ்ப்பட்டிருந்தது. சீனா குடியரசான பிறகு மங்கோலியா சுய அரசாகி ரஷ்யாவோடு சேரவிருப்பங்கொண்டிருக்கிறது. ரஷ்யாவும் ஸாதகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது சீனாவுக்குப் பிடிக்காததால் சீனயுத்தத்துக்குப் போகலாம் என்று எண்ணப்படுகிறது. யுத்தம் நிமித்தம் சீனா எல்லை ப்ரதேசத்தில் 40,000 போர்வீரர்களைத் தயாராக வைத்திருப்பதாக மங்கோலியா கவர்ன்மெண்டார் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று ஸமாசாரம் எட்டுகிறது

10-தேதி.—

மிஸ்டர் என். ஸுப்பராவ் பந்தலு.-மிஸ்டர் என். ஸுப்பராவ் பந்தலு அவர்கள் இம்பீரியல், லோகல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் மெம்பராயிருந்து பொதுஜன நன்மைக்காகப் பாடுபட்டதின் நிமித்தம் அவருக்கு நன்றி செலுத்துவதற்காக சென்னை விக்டோரியா ஹாலில் ஒரு பொதுஜன மீட்டிங் நடந்தது. திவான்பகதூர் ஆதிநாராயணய்யா அவர்கள் ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

வைஸ்ராயின் தேகஸ்திதி.—புண் தாமஸமாய் ஆறிவருகிறது. எலெக்ட்ரிக் சிகித்ஸையால் நரம்பு வீக்கத்துக்கு ரொம்ப குணம் ஏற்பட்டிருக்கிறது.

காப்டன் ஸ்காட்.—தெற்குத்ருவத்தைக் கண்டு பிடிக்கப்போன காப்டன் ஸ்காட்டும் அவருடன் கூடச்சென்றவர்களும் த்ருவத்துக்குப்போய்ச் சேர்ந்த பின் பனிக்காற்றால் இறந்து போனதாக அறிவிக்கப்படுகிறது.

## SEASON.

## காலஸ்திதி.

**Rainfall.**

மழை.—1912ஆ ஏப்ரல்மீ 11உ யிலிருந்து 1913ஆ மார்ச்சுமீ 1உ வரையில் பெய்த மழையின் அளவு, இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 37·41 | 44·32 |
| வால்டேர் | 32·23 | 36·81 |
| காக்கினடா | 26·23 | 38·44 |
| மசூலிப்பட்டணம் | 42·91 | 39·78 |
| நெல்லூர் | 44·58 | 34·86 |
| மதராஸ் | 44·86 | 49·29 |
| கூடலூர் | 47·88 | 50·69 |
| நாகப்பட்டணம் | 40·99 | 53·18 |
| பாம்பன் | 30·19 | 36·65 |
| கொழும்பு | 106·96 | 80·40 |
| திருவனந்தபுரம் | 90·38 | 61·67 |
| கொச்சி | 145·41 | 111·78 |
| கள்ளிக்கோட்டை | 139·64 | 116·35 |
| மங்களூர் | 144·71 | 126·98 |
| மெர்க்காரா | 133·12 | 126·13 |
| ஐதராபாத் | 23·71 | 30·69 |
| பல்லாரி | 22·41 | 19·79 |
| கர்நூல் | 19·17 | 26·63 |
| கடப்பை | 28·22 | 31·54 |
| ஹாஸ்ஸான் | 40·65 | 35·58 |
| பெங்களூர் | 41·35 | 35·05 |
| கொடைக்கானல் | 64·54 | 59·54 |
| உதகமண்டலம் | 52·72 | 55·45 |
| கோயம்புத்தூர் | 29·55 | 21·66 |
| வேலூர் | 42·26 | 45·22 |
| சேலம் | 32·86 | 39·69 |
| திருச்சினப்பள்ளி | 32·08 | 32·41 |
| புதுக்கோட்டை | 36·81 | 33·28 |
| மதுரை | 33·38 | 33·78 |
| திருநெல்வேலி | 26·20 | 26·24 |

# CALENDAR—பஞ்சாங்கம்.

| சாலிசகம்-1835 கலியப்தம்-5014 | | | | மாகம் பால்யகுணம் | | | | 46-பரிதாவிஷு மாசிமூ உத்தராயணம்-சிசிருது. } கொல்லம்-1088 பஸலி-1322 { இங்கிலீஷ்-1913ஷு பிப்ரவரிமீ-மார்ச்சுமீ } ஹிஜரி-1331 ரப்பூலவல்-ரய்யூஸானி |
|---|---|---|---|---|---|---|---|---|
| மசி | 4 | 18 | 29 6 | 5 | 12 | 1 | பு | ஷஷ் 46-0, அசுவதி 47-22, சுப 12-33, கவு 14-12, ரா 7-29, கும்பஷஷ்டீதி, ஷஷ்டியுப சமார்க்கம் |
| சிம | | 9 | 7 | 6 | 13 | 2 | வி | ஸப் 48-17, பிர 50-56, சுப் 12-14, கர 17-23, தி 13-1, ரதஸப்தமி, மன்வாதி |
| சிம | | 0 | 9 | 7 | 14 | 3 | வெ | அஷ் 48-22, கிரு 52-34, பிரா 10-30, பத் 18-33, தி 21-54, கிருத்திகை, பீஷ்மாஷ்டமீ |
| அசி | 3 | 51 | 10 | 8 | 15 | 4 | சனி | நவ 46-44, ரோ 52-11, மா 7-13, பால 17-47, ரா 3-21, வைசிரா |
| சி | | 43 | 11 | 9 | 16 | 5 | ஞா | தச 42-51, மிரு 40-47, வை 2-18, உப 53-27, தை 15-3, தி 5-58 |
| சிஅ | | 34 | 13 | 10 | 17 | 6 | தி | ஏகா 37-7, திரு 45-36, பிரீ 47-48, வணி 10-12, தி 9-30, ஸர்வஏகா |
| சி | | 25 | 14 | 11 | 18 | 7 | செ | துவா 29-48, புன 39-53, ஆயு 38-40, பவ 3-38, கவு 55 42, தி 12-54, ரா 28-30, துவாதசீதி, தில பத்ம துவாதசி, பிரதோஷம் |
| சி | | 17 | 15 | 12 | 19 | 8 | பு | திர 21-20, பூச 33-5, ஸவு 28-30, கர 46:46, சே 1-44, திதிதுவயம் |
| சிஅ | | 8 | 17 | 13 | 20 | 9 | வி | சசி 12-3, ஆயி 25-36, சோ 17-49, பத் 37-16, தி 1-9, ரா 22-29, பூர்ணிமாதி, மாகீ, மாசிமகரம் |
| மசி | 2 | 58 | 18 | 14 | 21 | 10 | வெ | ○ 2-28, உப 50-33, மக 17-55, அதி 6-54, உப 49-14, பால 27-41, ரா 6-5, மாகபகுள, ஆகாமாவை, இஷ்டி, அவம |
| சிஉ | | 51 | 19 | 15 | 22 | 11 | சனி | துவி 44-9, பூர 10-30, திரு 45-53, தை 18-28, தி 26-24 |
| அஅசி | | 42 | 21 | 16 | 23 | 12 | ஞா | திரி 36-14, உத் 3-50, உப 54-25, சூல 36-25, வணி 10-3, தி 22 24 |
| பிஅ | | 33 | 23 | 17 | 24 | 13 | தி | சது 29-40, சித் 54-10, கண் 28-3, பவ 2-46, கவு 56-59, தி 16-42, சங்கடசதுர்த்தி |
| சிம | | 24 | 24 | 18 | 25 | 14 | செ | பஞ் 24-43, சுவா 51-47, விரு 21-1, கர 52-57, தி 7-27, பஞ்சமீதி |
| சிஅ | | 16 | 25 | 19 | 26 | 15 | புத | ஷஷ் 21-38, விசா 51-16, துரு 15-27, ப்த் 50-50, தி 5-29, ஷஷ்டீதி, அப-அந்தம் 23-32, [காலாஷ்டமி |
| சிபி | | 7 | 27 | 20 | 27 | 16 | வி | ஸப் 20-28, அனு 52-38, வியா 11-24, பால 50-37, தி 1-21, ஸப்தமீதி, அப-ஆதி 17-40, அந்தம் 23-34, |
| மஅ | 1 | 58 | 28 | 21 | 28 | 17 | வெ | அஷ் 21-12, கேட் 55-47, ஹர் 8-51, தை 52-15, தி 7-13, அஷ்டமீதி, அப-ஆதி 17-41, ஏகாஷ்டகா |
| சி | | 50 | 30 | 22 | 1 | 18 | சனி | நவ 23-42, மூல 60-0, வஜ் 7-41, வணி 55- 2, தி 17-13, ரா 26-39, நவமீதி |
| அசி | | 41 | 31 | 23 | 2 | 19 | ஞா | தச 27-42, மூல 0-30, வித் 7-42, சத் 27-42, சே 0-9, தி 26.47; வியசிரா |
| உம | | 32 | 33 | 24 | 3 | 20 | தி | ஏகா 32-53, பூரா 6-29, விய 8-44, பவ 0-11, தி 28-41, ஸர்வஏகா |
| பிசி | | 24 | 34 | 25 | 4 | 21 | செ | துவா 38-52, உரா 13-21, வரீ 10-27, சவு 5-48, தி 24-34, சிரவண்உப |
| சிபி | | 15 | 36 | 26 | 5 | 22 | புத | திர 45-42, சிர 20-50, பரி 12-38, கர 12-4, ரா 2-31, பிரதோஷ |
| சிம | | 6 | 37 | 27 | 6 | 23 | வி | சசி 52-1, அவி 28-34, சிவ 15-4, பத் 18-40, ரா 19-19, மஹாசிவராத்ரி |
| சி | 0 | 57 | 38 | 28 | 7 | 24 | வெ | ● 58-35, சத 36-19, சித் 17-33, சது 25-19, ரா 24-45, ஸர்வஅமா, பிண்டபி திரு, அல்ப்யம் யுகாதி |
| சி | | 49 | 40 | 29 | 8 | 25 | சனி | பிர 60-0, பூட் 43-50, சாத் 19-54, கிம் 31-34, பால்யகுணசுத்தம், இஷ்டி திரிதினஸ் |
| அ | | 40 | 42 | 30 | 9 | 26 | ஞா | பிர 4-46, உட் 50-51, சுப 21-55, பால 37-38, தி 10-42, சந்திரதர்சனம் [பிருக் |
| அசி | | 31 | 43 | 1 | 10 | 27 | தி | துவி 10-22, ரே 57-9, சுப் 23-27, தை 42-53, தி 24-5 |
| சி | | 23 | 45 | 2 | 11 | 28 | செ | திரி 15-8, அசு 60-0, பிரா 24-20, வணி 47-7, ரா 21 54, சதுர்த்தீவிரு, பௌமசதுர்த்தி |
| மசி | | 14 | 47 | 3 | 12 | 29 | பு | சது 18-47, அசு 2-26, மா 24-20, பவ 50-11, தி 28-32, கும்பபஞ்சமீதி |
| சிம | 0 | 5 | 2948 | 4 | 13 | 30 | வி | பஞ் 21-11, பர 6-33, வை 23-22, கவு 51-50, ரா 8-17, மீனரவி 36-17, அதிதி, அப-அந்தம் 23·50, கிருத்திகை, ஷடசீதி புண்யகால, வைசிரா, காரடை நோன்பு |

அமிருதாதி யோகங்கள். — நாழி — கும்பம் — ஆஹூர்மாணம் — உதயாதி — மார்ச்சுமீ — ரய்யூஸானி

| | | | |
|---|---|---|---|
| சு-ரா | | ச | |
| ர-பு | 1-கும்-பு<br>15-மே-சு<br>17-மீன-பு | | |
| செ | | | |
| கு | | | கே |

# சாஸ்திரீய உரங்கள்.

எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கு
விசேஷ உரங்கள்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

ஸல்பேட் ஆப் பொடாஷ் (Sulphate of Potash.)
100-ல் 90 பங்கு ஸல்பேட் ஆப் பொடாஷ் உள்ளது.

ம்யூரியேட் ஆப் பொடாஷ் (Muriate of Potash.)
100-ல் 80 பங்கும் ம்யூரியேட் ஆப் பொடாஷ் உள்ளது.

கெயினிட் (Kainit) 100-ல் 12 பங்கு பொடாஷ் உள்ளது.

ஸுப்பர் பாஸ்பேட் (Superphosphate) 100-ல் 14 முதல் 15 பங்கு பாஸ்பாரிக் ஆஸிட் தண்ணீரில் கரையக்கூடியதும், 15 முதல் 17 வரையில் மொத்த பாஸ்பாரிக் ஆஸிட்டு முள்ளது.

பேஸிக் ஸுப்பர் பாஸ்பேட் (Basic Superphosphate) 100-ல் 12 முதல் 13 வரை ஸிட்ரிக் ஆஸிட் (Citric acid) டுள்ள தண்ணீரில் கரையக்கூடிய பாஸ்பாரிக் ஆஸிட்டும், 14 முதல் 15 வரை மொத்த பாஸ்பாரிக் ஆஸிட்டும், 35 முதல் 40 வரையில் சுண்ணாம்பு முள்ளது.

பேஸிக் ஸ்லாக் (Basic slag) 100-ல் 17 முதல் 20 பங்கு பாஸ்பாரிக் ஆஸிட் டுள்ளது.

நைட்ரேட் ஆப் பொடாஷ் (Nitrate of Potash) 100-ல் 11 முதல் 13 வரையில் நைட்ரஜனும், 38 முதல் 40 வரை பொடாஷு முள்ளது.

நைட்ரேட் ஆப் ஸோடா (Nitrate of Soda) 100-ல் 95 பங்கு நைட்ரேட் ஆப் ஸோடா உள்ளது.

ஸல்பேட் ஆப் அமோனியா (Suphate of Ammonia) 100-ல் 20 முதல் 22 வரை நைட்ரஜன் உள்ளது.

எலும்புத் தூள் (Bone Meal) 100-ல் 3½ முதல் 4 வரை நைட்ரஜனும், 22 முதல் 23 வரையில் பாஸ்பாரிக் ஆஸிட்டு முள்ளது.

ஜவ்வு (Bone Sinews) 100-ல் 10 முதல் 12வரை நைட்ரஜனுள்ளது.

***The Presidency Manure Works, Ltd.,***
***Ranipet.***
***Managing Agents: Parry & Co., Madras.***


**ராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, ராணிப்பேட்டை.**

மானேஜிங் ஏஜண்டுகள்:—
பாரி அண்டு கம்பெனி,
மதராஸ்.

# KHADER AND YOUSUFF BROS

Watch Dealers, P. L., MADRAS, E. C.

## "ஸிர்தார்"



இது மேல்சாவியுள்ளதும், கனத்த கண்ணாடியால் மூடிபோட்டதும் மிகவும் சரியான காலத்தைக் காட்டக்கூடியதும் வெகு நாளைக்கு ஓடக்கூடியது மான வெகு நேர்த்தியான கை கடியாரம். தென் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்யப்படுகிறது. மிகவும் சிறந்த "லீவர்" கடியாரம்.

விலை ரூ. 12.


## "உத்தியோகஸ்தர்"

இது உத்யோகஸ்தர்களுக்குஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணாடியால் மூடியுள்ளது. சரியான காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும்கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய சயிஸ். அழகாயும் திருப்திகரமாயு மிருக்கும்.



தபாற்கூலியுள்பட விலை ரூ. 10

## கோல்ட் மெடல் "யாங்கி" ஸர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்தினால். செய்யப்பட்டு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய நிறை 15 பவுண்டுதான். 1(00 பவுண்டு இடை தாங்கும், கோடை காலத்தில் நிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிக்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். கொசுவலை யுள்பட. ரூ. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ள ரயில் ஸ்டேஷனை எழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.

## காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மெண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். சென்னை, E. C.



MADRAS: Printed by Thompson & Co. at the Minerva Press
... & Co., Sunkurama Chetty Street, George Town, Madras